JWT MW 20184

# வருமானவரி கணக்கும் கணினியால் எழுதமுடியும்

— 15 —

## ஆனால் அதற்கு நாமே சரியான செயல் திட்டம் வகுக்க வேண்டும்

கணினி என்கிற எலத்திரனியல் கருவியை வாங்கி வந்து காரியாலய மேசை மீது வைத்து விட்டால் போதும — அது "ஜீபூமபா" என்ற பூதம போல் எமது சகல பிரச்சினைகளையும தீர்த்து வைக்கும என்று நமமில் பல பேர் தவறாக எதிர்பார்க்கிறார்கள்.

"மிஸ்டர் கணினியே எனது வருமான வரி கணக்கை போட்டுக் கொடு" என்று கணினி முன்னால் நின்று கதறிக் கதறி அழுதாலும கணினி கல்லுப் பிள்ளையார் போல் அப்படியே இருக்கும.

ஆனால் கணினிக்கு புரிகிற மாதிரி எமது வருமான வரிக் கணக்கைத் திட்டமாக எழுதி உள்ளே ஊட்டிவிட்டால் திறமையான கணக்குபிள்ளையைப் போல் சரியாகக் கணித்து விடையைக் கணப்பொழுதில் தரும.

சித்ரா அருள்ராமலிங்கம்
Diploma in Computer Science, Madurai University

பிரச்சினைகளை கணினிக்குப் புரிகிற மாதிரி எழுதிக் கொடுப்பதைச் செயல்திட்டம தயாரித்தல் என்று சொல்வார்கள். இது ஆங்கிலத்தில் புறோகிறாமிங் (Programming) எனப்படும. செயல் திட்டம — புறோகிறாம (Program) என்று அழைக்கப்படும. (சிலர் இதை Programme என்று தவறாக எழுதுகிறார்கள்). செயல் திட்டம தயாரிப்பவர் புறோகிராமர் (Programmer) என்று அழைக்கப்படுகிறார்.

முதல் முதல் உலகில் செயல் திட்டம எழுதிய பெருமையை ஒரு பெண்மணி பெறுகிறார்.

காதல் ரசம சொட்டும கவிதைகள் வடித்த கவிஞன் பைரனின் மகள் சீமாட்டி ஏடா லவ்லேஸ் (Lady Ada Lovelace) என்பவர்தான் உலகின் முதலாவது புறோகிராமர் ஆவார்.

கணித நிபுணரான ஏடா

போனால் தவறான தீர்வுகளே முடிவுகளாக வரும.

இதனைக் கணினி உலகில் கேலியாக கிகோ (Gigo) என்பர் Garbage in — Garbage out (குப்பையை உள்ளே தள்ளினால் — குப்பை தான் வெளியே வரும) என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமே கிகோ.

பிரச்சினையைத் தீர்க்குச் செயல் திட்டம தயாரிப்பதற்கு முதலில் நாங்கள் தீர்க்கவுள்ள பிரச்சினை என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும.

அடுத்து — மற்ற சமபந்தமில்லாத பிரச்சினைகளிலிருந்து நாம தீர்க்க வேண்டிய பிரச்சினையை தனியே வெளியே எடுத்துப் பிரச்சினையின் தனித்துவத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டும.

இந்த முதலிரண்டு படிகளுக்குப் பின்னர் எமது கருத்தில் எடுத்துக் கொண்ட பிரச்சினை — எதிர்பார்க்கின்ற தீர்வு என்பவற்றைப் பற்றிய தெள்ளத் தெளிவான விளக்கம இருக்கும.

அடுத்தபடியாக நாம எடுத்துக் கொண்ட பிரச்சினையைச் சிறிய எளிய கூறுகளாக "உடைத்து"க் கொள்ள வேண்டும. அதாவது — அந்தப் பெரிய பிரச்சினையை சிறிய சிறிய பிரச்சினைகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும.

இப்பொழுது உடைபட்டுப் போயிருக்கின்ற இந்தச் சின்னச் சின்னப் பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்கும தனித்தனியே தீர்வு காண வேண்டும.

இறுதியாக இந்தச் சிறிய கூறுகளுக்குக் கிடைக்கப்பட்ட தீர்வுகளை ஒன்று சேருங்கள். அடேயப்பா! நமது பெரிய பிரச்சினைக்கு எவ்வளவு இலகு

கணினியியலில் மேலிருந்து கீழ்வாரியாகக் கட்டமைத்தல் (Top Down Structure — — டொப் டவுன் ஸ்ரக்சர்) என்றும இந்த ஒவ்வொரு பகுதியையும ஒவ்வொரு கட்டம (Module — மொடியூல்) அல்லது செயற்பாடு (Procedure — புரசீட்ஜர்) என்றும குறிப்பிடுவார்கள்.

இந்த முறையில் கட்டம கட்டமாகத் தீர்வு காண்பது கட்டமைப்பான செயல் திட்டம தயாரித்தல் (Structured Programming) என்று கூறப்படுகிறது.

இப்படிச் செயல் திட்டம தயாரிப்பதுதான் சிறந்த முறை என்று சகல கணினியியல் நிபுணர்களும ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த முறையில் அமைக்கப்பட்ட செயல் திட்டம ஒழுங்காகவும் எவராலும பார்த்தவுடனே விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும தேவையான போது இலகுவில் மாற்றங்கள் செய்யக் கூடியதாகவும இருக்கும.

இதற்கு எதிராக நினைத்த மாதிரி எதுவித திட்டமும இல்லாமல் கணினி முன் உட்கார்ந்து விரும்பியபடி செயல் திட்டத்தை அழித்து அழித்து எழுதுபவர்களும உண்டு.

இப்படி எழுதப்பட்ட செயல் திட்டத்தை நோக்கினால் அவற்றில் ஒரு ஒழுங்கோ அல்லது அழகோ இருக்காது. செயற்பாடுகள் விரும்பிய விதத்தில் கண்ட கண்ட இடத்தில் தொடுக்கப்பட்டிருக்கும.

இந்த ரக செயல் திட்டத்தை "இடியப்ப சிக்கல்" செயல் திட்டம (Spaghetti Program) என்று கேலியாக கூறுவர்.

பிரச்சினைகளை சிறு சிறு சமாளிக்கக் கூடிய கூறுகளாகப் பிரித்துத் தனித்தனியே தீர்வு கண்டு பின்னர் முழுப் பிரச்சினைக்கும தீர்வு காணுமை தத்துவம

கைப் பிரச்சினையாக இருந்தாலும சரி — அல்லது காரியாலய நிர்வாகப் பிரச்சினையாக இருந்தாலும சரி, அவற்றைச் சிறு பிரச்சினைகளாக பிரித்தெடுத்து தீர்வு காண்பது எளிது என்று மனோவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பிரச்சினைகளைத் தீர்க்க அணுகும முறைகளில் (Techniques of problem solving) இந்த முறை சகல மனோவியல் நிபுணர்களாலும சிலாகித்துப் பேசப்படுகிறது.

இனி மறுபடியும எமது கணினியின் பிரச்சினைத் தீர்வுக்கு வருவோம.

இப்பொழுது பிரச்சினை என்ன என்பதும அதை எப்படித் தீர்க்க முடியும என்பதையும தீர்வு எப்படி இருக்கும என்பதையும பற்றி ஒரு திட்டவட்டமான கருத்தை நாம கொண்டிருக்கின்றோம அல்லவா!

பிரச்சினை எது என்றாலும அது தீர்க்கப்படக் கூடியதொன்றானால் அதனை ஒரு சமன்பாட்டினால் (Formula) விளக்கிக் கொள்ள முடியும. இந்தச் சமன்பாட்டின் உதவியின்றி எந்த ஒரு பிரச்சினையையும நாம தீர்க்க முடியாது.

இந்த இடத்தில்தான் கணினியின் உதவி மனிதனுக்குத் தேவைப்படுகிறது.

சமன்பாட்டைத் தீர்க்கத் தேவையான கணித்தல்களை, கணிதங்களைக் கணினி செய்கிறது.

கணித்தலில் கணினி காட்டும

விளக்கப்படுவதே அல்கோரிதமாகும.

அல்கோரித முறையில் செயற்பாட்டுகளை விளக்குவது ஒரு புதிய விஷயமல்ல. ஏற்கனவே எப்படி ஒரு பதார்த்தத்தை சமைப்பது என்று தரப்படுகின்ற சமையல் குறிப்புகள் — ஒரு இயந்திரத்தை நிர்மாணிப்பது அல்லது கழற்றுவது பற்றி இயந்திரத்தோடு தரப்படுகின்ற கைநூல் (Do it yourself Manuals) என்பவை ஒரு வகையில் அல்கோரிதங்களே.

உதாரணமாக, ஒரு கடிதம ஒன்றைத் தபாலில் சேர்க்கும முறைக்கு ஒரு அல்கோரிதம எழுதுவோமானால் அது பின்வரும வரிசையில் இருக்கும.


1. உறையில் முகவரி எழுதல்
2. கடிதத்தை மடித்தல்
3. கடிதத்தை உறையில் இடுதல்
4. முத்திரை ஒட்டல்
5. தபாலில் சேர்த்தல்.

நாம. இந்தக் கட்டளைகளை அப்படியே கணினிக்கு கொடுக்க முடியாது.

செய்யப் போகும செயல் பற்றிய பின்னணி அறிவும (Background Knowledge) பகுத்தறிவும உள்ள மனிதனுக்குத் தான் மேற்கூறிய கட்டளைகள் வேறு புதிய விளக்கங்கள் எதுவும தேவையின்றி விளங்கும.

எனவே அல்கோரிதம பிரச்சினையைத் தீர்க்கும வழியில் செயல் திட்டம தயாரிக்க மனிதனுக்குத்தான் உதவுமே ஒழிய — கணினிக்கு அதனால் பிரயோசனமில்லை.

அல்கோரித முறையில் எழுதப்




கடிதம ஒன்றைத் தபாலில் சேர்ப்பதற்கான வழிமுறையை விளக்கும படம. (ம)

the Program — — கோடிங்க த புறோகிராம) வேண்டும.

செயல் திட்டத்திற்கு உரிய கணினி மொழியை தேர்ந்தெடுப்பது நமது பிரச்சினையைப் பொறுத்த விஷயமாகும.

வணிக இயல் பிரச்சினைகளுக்கு கோபல் (Cobol) என்ற கணினி மொழியும விஞ்ஞான பிரச்சினைகளுக்கு போர்ட்றான் (Fortran) என்ற மொழியும உகந்த கணினி மொழிகள் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மொழிப்படுத்தப்பட்ட செயல் திட்டத்தைக் கணினிக்கு "ஊட்டி" செயற்படுத்திப் பார்ப்பது அடுத்த கட்டமாகும.

பாவனைக்கு விடப்படும் செயல் திட்டங்களில் புதிய விஷயங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அநேகமாக செயல் திட்ட அமைப்பாளரே செயல் திட்டத்தை உபயோகிப்பதிலும பார்க்க அதனைப் பயன்படுத்தும பயனீட்டாளர்களே (Users "யூசர்ஸ்") அதிகம.

எனவே செயல் திட்டத்தை அனைவரும சிரமமின்றி பயன்படுத்த அந்தச் செயல் திட்டம பற்றி — அதன் உபயோகம பற்றி — அதை உபயோகப்படுத்தும முறை பற்றி — தரவுகளை உள் இடுகின்ற முறை பற்றி — உபயோகிக்கின்ற வெளிபெறு கருவிகள் பற்றி — சகல தேவையான விஷயங்களையும ஆவணமாக (Document — டோக்கியூமென்ட்) பதிப்பித்துக் கொடுபட வேண்டும.

சில செயல் திட்ட அமைப்பாளர்கள் செயல் திட்டத்திலேயே அதை உபயோகிக்கத்

## 'கொம்பியூட்டர்' என்ற

பைரனின் மகள் சீமாட்டி ஏடா லவ்லேஸ் (Lady Ada Lovelace) என்பவர்தான் உலகின் முதலாவது புறோகிராமர் ஆவார்.

கணித நிபுணரான ஏடா கணினியின் தந்தை என புகழ் பெற்ற சார்ள்ஸ் பபாஜின் (Charles Babage) அனலிட்டிக்கல் என்ஜின் (Analytical Engine) என்ற கணித யந்திரத்திற்கு செயல் திட்டம அமைத்துக்கொடுத்தார்.

அனலிட்டிக்கல் என்ஜின் என்ற கணித யந்திரமதான் கணினியின் முன்னோடி என்பதும இது அமைக்கப்பட்ட காலத்திலே தொழில் நுட்பத்துறை முன்னேற்றம கண்டிருந்தால் இற்றைக்கு நூற வருடஙகளுக்கு முன்னரே கணினி உலகில் தோன்றியிருக்கும என்பதும நீங்கள் முன்னர் அறிந்ததே.

இன்றைய செயல் திட்டஙகளில் காணப்படுகின்ற சில விசேட செயல் அலகுகளானஉப நடைமுறைகள் (Sub Routines—சப் றூட்டின்ஸ்) கிளை வளைவுகள் (Loops லூப்ஸ்) – நிபந்தனையற்ற பாய்வுகள் (Unconditional Jumps — – அன்கொண்டிஷனல் ஜமப்ஸ்) என்பவை அன்றே சீமாட்டி ஏடாவின் செயல் திட்டத்தில் காணப்பட்டன.

சூதாட்ட பிரியையும அபினுக்கு அடிமையாகவும விளஙகிய ஏடா தனது 36 ஆவது வயதில் காலமானார். என்றாலும அவர் திறமையை நினைவு கொண்டு இன்றைய கணினி மொழி ஒன்றுக்கு ஏடா என்ற பெயர் சூட்டியுள்ளனர்.

செயல் திட்டம அமைப்பது என்பது லேசான காரியம அல்ல. சரியான செயல் திட்டம இல்லாது கணினியை இயக்கப்

வொன்றுக்கும தனித்தனியே தீர்வு காண வேண்டும.


இறுதியாக இந்தச் சிறிய கூறுகளுக்குக் கிடைக்கப்பட்ட தீர்வுகளை ஒன்று சேருஙகள். அடேயப்பா! நமது பெரிய பிரச்சினைக்கு எவ்வளவு இலகுவாகத் தீர்வு கிடைத்து விட்டது!

இப்படிப் பிரச்சினையை தீர்க்கக் கூடிய சிறு பகுதிகளாகப் பிரித்துத் தீர்வு காண்பதைக்

திட்டம (Spaghetti Program) என்று கேலியாக கூறுவர்.

பிரச்சினைகளை சிறு சிறு சமாளிக்கக் கூடிய கூறுகளாகப் பிரித்துத் தனித்தனியே தீர்வு கண்டு பின்னர் முழுப் பிரச்சினைக்கும தீர்வு காணும தத்துவம கணினிக்கு மாத்திரமே உரியதல்ல.

நமது நாளாந்த வாழ்க்கையில் சந்திக்கின்ற எந்தப் பிரச்சினைகளுக்கும அது சொந்த வாழ்க்





★

செயல் திட்டம தயாராகும படிகள் (1) பிரச்சினையை வரையறுத்துக் கொள்ளுதல் (2) செயல் திட்டம வடிவமைத்தல் (3) செயல் திட்டம மொழிப்படுத்தல் (4) செயல் திட்டம நடைமுறைப்படுத்தல் (5) தவறுகளைத் திருத்தல் (6) செயல் திட்டத்தை பரீட்சித்தல் (7) செயல் திட்டம பற்றி ஆவணம தயாரித்தல் (8) பராமரிப்பு.

(ம)

★



# ‘கொம்பியூட்டர்’ என்ற ‘கணினி’யின் கதை

வேகம — (Speed);

கணக்கு போடுவதில் எதுவித தவறும விடாத கணினியின் திறமை — (Accuracy); –

அதன் காரணமாக அதில் நமக்குள்ள நமபிக்கை (Reliability); —

சுயமாக தானே இயஙகும கணினியின் குணம (Automaticity)

செயல்திட்டப் பிரகாரம இயஙகும பண்பு (Programability);

ஆகியவைகளால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் கணினி இன்றியமையாத கருவியாக விளஙகுகிறது.

பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சமன்பாட்டை கண்டறிந்ததும, பிரச்சினையைக் கணினிக்கு ஏற்ற விதமாக வடிவமைப்புச் செய்வது (Program Design — – புறோகிராம டிசைன்) ஆராயப்படும.

இந்த வடிவமைப்புப் பணியின் முதலாவது படி செயல் திட்டத்தைச் சுருக்கமாக வார்த்தைகளால் விளக்குவது ஆகும. இதனை "அல்கோரிதம" (Algorithm) எழுதுவது என்று சொல்வர்.

அல் கௌவரஸ்மி (Al Khowarazmi) என்ற அரபு கணித நிபுணர் ஒருவரின் பெயரிலிருந்து வந்த சொல்லே அல்கோரிதம ஆகும.

செயல் திட்டத்தின் ஒவ்வொரு படியும அது செயல்படுத்தப்பட வேண்டிய வரிசைக்கிரம முறையில் வார்த்தைகளால் சுருக்கமாக

பட்ட செயல் திட்டம – அடுத்த கட்டத்தில் வரைபடம ஒன்றினால் விளக்கப்படுகிறது.

எளிய வரிபடஙகள் – சதுரம – செவ்வகம போன்ற குறியீடுகள் மூலம செயல் திட்டத்தின் வரிசைக் கிரமம – கட்டளைகள் என்பன விளக்கப்படுகின்றன. இதனை வழிமுறை வரைபடம (Flow Chart — புளோசார்ட்) என்று குறிப்பிடுவர்.

"சேமிக்கும செயல் திட்ட" கொள்கையைத் தந்த வொன் நியூமன் (Von Neumann) என்ற கணித நிபுணர்தான் முதன் முதலில் வழிமுறை வரைபடம உபயோகிக்கும முறையை பாவனைக்கு அறிமுகப்படுத்தினார்.

செயல் திட்டத்தின் சகல செயற்பாடுகளையும மூன்று வகையாகப் பிரிக்கலாம. ஒன்று – எளிய வரிசைக் கிரமம (Simple Sequence — சிமபிள் சீக்குவென்ஸ்) மற்றது – எளிய கிளை வளைவுகள் (Simple Loop — சிமபிள் லூப்) – மூன்றாவது எளிய தேர்ந்தெடுப்பு (Simple Selection — சிமபிள் செலக்ஷன்)

இந்த மூன்றுவித செயற்பாடுகளையும வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்ட வழிமுறை வரைபடத்தை வைத்துக் கொண்டு –

கணினிக்கு புரிந்த மொழி ஒன்றில் செயல் திட்டத்தை மொழிப்படுத்தல் (Cording

செயல் திட்டம இயஙகுமபோது தீர்வுகள் என்ன என்று முதலே தெரிந்து பரீட்சார்த்த தரவுகளை (Test Data டெஸ்ட் டேட்டா) கணினிக்கு கொடுத்து எதிர்பார்க்கப்பட்ட விடை வருகின்றதா என்று அறிவது முக்கியம.

இந்த இரண்டு பணிகளையும முறையே செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (Execution of the Program) செயல் திட்டத்தை பரீட்சித்தல் (Testing the Program) என்று கூறுவர்.

இந்த இரண்டு பணிகளின் போதும செயல் திட்டம அமைத்த விதியில் பிழைகள் இருந்தாலும அல்லது செயல் திட்டத்தின் தர்க்க ரீதியில் பிழைகள் இருந்தாலும அல்லது உபயோகப் படுத்தப்பட்ட கணினி மொழியின் இலக்கண விதிகள் தவறாக உபயோகிக்கப்பட்டிருந்தாலும தவறான விடைகளோ அல்லது பாதியில் செயலிழப்போ வரும.

இந்தப் பிழைகளை பக் (Bug) என்று குறிப்பிடுவர். இந்தப் பிழைகளைக் கண்டறிந்து திருத்துவது "டீபக்" (Debug) எனப்படும.

மேலே குறிப்பிட்ட வழிகளில் உருவாக்கப்பட்டு "டீபக்" செய்து - தவறுகள் களையப்பட்ட செயல் திட்டம சிறந்த செயல் திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு – பாவனைக்கு விடப்படுகிறது.

யான விஷயஙகளையும ஆவணமாக (Document — டொக்கியூமென்ட்) பதிப்பித்துக் கொடுபட வேண்டும.

சில செயல் திட்ட அமைப்பாளர்கள் செயல் திட்டத்திலேயே அதை உபயோகிக்கத் தேவையான உதவிகள் பற்றி (Help Commands — "ஹெல்ப் கொமாண்ட்ஸ்") குறிப்பிட்டிருப்பார்கள்.

பயனீட்டாளர்கள் எதுவித சிரமமுமின்றிச் செயல் திட்டத்தை "உதவி"க் கட்டளைகளைப் படித்தே உபயோகித்துக் கொள்ளலாம.

இவ்வாறு பயனீட்டாளருக்கு இலகுவில் உதவக் கூடிய செயல் திட்டஙகளை "சிநேக பூர்வமான" என்ற கருத்தில் User Friendly (யூசர் பிரண்ட்லி) செயல் திட்டஙகள் என்று அழைப்பார்கள்.

இன்று இத்தகைய செயல் திட்டஙகள் உள்ள செயல் முறையஙகளையே பயனீட்டாளர்கள் விருமபி உபயோகிக்கிறார்கள்.

## புனித நீர் விலை புரியாது தவிப்பு

ஜோர்தான் நதி நீரை போத்தலில் அடைத்த புனித நீராக விற்பனை செய்ய யூகோஸ்லாவியா முடிவு செய்துள்ளது.

ஆனால் இதன் விலையை எப்படி நிர்ணயம செய்வது என்பதைத் தான் தீர்மானிக்க முடியாமல் திண்டாடுகின்றனர் அதிகாரிகள்.

ஏனெனில் இப்படியான ஒரு தயாரிப்புக்கு எவ்வாறான சட்டஙகளின் கீழ் எந்த வரி விதிப்பு அடிப்படையில் விலையை தீர்மானிப்பது என்பது புரியாமல் குழம்புகிறார்கள். ஏனெனில் யூகோஸ்லாவியா முன்னே பின்னே இப்படி ஒரு பொருளை விற்றதில்லை.

(ம—032)

# பேச்சுவார்த்தை இந்திய-பாகிஸ்தான்

காஷ்மீரில் மோதல் நடந்தால் அது அண்டை நாடுகளைப் பாதிக்கும்— ஆசியப் பிராந்தியத்தைப் பாதிக்கும், கடைசியாக உலக அரசியல் போக்கையும் பாதிக்கும்—

ஆகவே, காஷ்மீரில் தீ மூண்டு விடாது அதனை அணைப்பது மிகவும் முக்கியமானது—

காஷ்மீர் விவகாரத்தில் வரவேற்கத்தக்க மாற்றம் நிகழ்ந்துள்ளது— இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங், பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் புட்டோவுடன் காஷ்மீர் குறித்துப் பேசுவதற்கு தயார் என்று அறிவித்திருக்கிறார்—


ஒரு நிபந்தனை, அங்கே ஆயுதம் ஏந்தி நிற்பவர்களுக்கு உதவி வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும்—

எப்படியிருந்த போதிலும், இந்த பயமுறுத்தும் அறிக்கைக்கு சிறிது கவனம் செலுத்துவது அவசியம்— பாகிஸ்தான் என்ன சொல்லப் போகிறது?

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானின் பாத்திரம் பற்றி கடந்த சில தினங்களாக அமெரிக்காவில் பரபரப்பு தெரிவிக்கப்படுகிறது—

காஷ்மீர் விடுதலை முன்னணியின் போராளிகளின் பாகிஸ்தானுடனான நெருங்கிய உறவு குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது—

முன்னணியின் தலைவர் அமானுல்லா கான் பாகிஸ்தானைக் [illegible] அறிக்கை


வி பி சிங

யொன்று விடுத்துள்ளார்— அவருடைய போராளிகள் இந்திய இராணுவத்துடன் மோதுவதற்குத் தயார் என்று கூறியுள்ளார்

மறுபுறத்தில் அமெரிக்க உளவு நிறுவனம் பரம ரகசியமான அணுவாயுத தொழிற்சாலையிலிருந்து கடும் காவலுடன் வாகனங்களில் ஆயுதங்களை எடுக்கச் சென்றதாக தகவல் வந்துள்ளது.

இவை, பாகிஸ்தான் இராணுவத் தளங்களுக்கு அனுப்பப்பட்டன என்றும் செய்திகள் கூறுகின்றன—

இதற்கு இந்தியாவில் மாத்திரமன்றி, அண்டை நாடுகளிலும் வரவேற்பு இருக்கப் போவதில்லை—

ஏற்கனவே இது குறித்து இந்தியப் பத்திரிகைகள் தடல்புடலாக எழுதுகின்றன நாடாளுமன்றத்திலும் ஆக்ரோஷமான சமபவங்கள் நிகழ்ந்துள்ளன—

இங்கே இந்திய சார்போ, பாகிஸ்தான் சார்போ தேவையில்லை— இந்திய — பாகிஸ்தான் நெருக்கடி காரணமாக பாதிக்கப்படப் போவது ஆசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளே—

இதைத்தான் ஜெர்மனியின் முன்னாள் அதிபர் வில்லி பிராண்ட் இஸ்லாமாபாத் இராணுவக் கேந்திர ஆராய்ச்சி நிலையத்தில் நிகழ்த்திய உரை காட்டுகிறது—

பதுடில்லியில் இஸ்லாமாபாத்தும், ஆயுதக் கிடங்குகளில் கையைப் போடாமல் பேச்சுவார்த்தை மேசையை நோக்கி நடக்க வேண்டும்—

இந்த வகையில் சில பாகிஸ்தான் பிரமுகர்கள் சமீபத்தில் நெருக்கடியைத் தவிர்க்குமபடி விடுத்துள்ள அறிக்கை நல்ல சகுனமாகும்—

அத்தனைக்கும் சோலே இலங்கை உட்பட அண்டை நாடுகளின் தலைவர்கள் அமைதியான ராஜதந்திரம் பயின்று இவ்விரு நாடுகளைப் போருக்குச் செல்லாமல் நிறுத்த முயல வேண்டும்—

## ★ ரஷ்யாவில் பிளவா?

சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவின் அமெரிக்க விஜயத்தின் பின் அவர் உச்சியிலிருந்து கீழே இறங்க வேண்டி வருமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது—

சோவியத் உள்நாட்டு நிலவரம் — விசேடமான பொருளாதாரத் துறை ரொமபவும் மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது— இதனால் பதவி மாற்றம் அங்கே ஏற்படலாம்—

புதிதாக ரஷ்ய சமஷ்டிக் குடியரசின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போரிஸ் யெல்ட்ஸின் கொர்பச்சேவுக்கு சவாலாக உருவாகி வருகிறார்

ரஷ்ய சமஷ்டிக் குடியரசு சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் மிகவும் பெரியது— நாட்டின் மொத்த சனத்தொகையான 28-9 கோடி மக்களில், 14-8 சதவீதமானோர் அதாவது அரைவாசிக்கும் அதிகமானோர் ரஷ்ய சமஷ்டிக் குடியரசில் வாழ்கின்றனர்— நாட்டின் வருவாயில் 61 சதவீதத்திற்கும் அதிகம் அங்கிருந்து வருகிறது—

கொர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக இக் குடியரசின் ஜனாதிபதியாக யெல்ட்ஸின் தெரிவு செய்யப்பட்டிருப்பது கொர்பச்சேவுக்கு சவாலாக அமைந்துள்ளது—

கொர்பச்சேவ் — யெல்ட்ஸின் தகராறு பிரசித்தமானது ஆகவே இருவரும் சமாளித்துக் கொண்டு போக முடியாது என்று அரசியல் விமர்சகர்கள் எழுதுகின்றனர்—

ஆனால் அவர்களுக்கிடையில் வேறுபாடு என்னவாக இருந்தபோதிலும் பழைமைவாதிகளை எதிர்த்து சீர்திருத்தத்தைப் புகுத்த இருவரும் விருமபுகின்றனர்— ஆகவே, சமாளித்துக் கொண்டு போக இவர்களை அரசியல் நிலவரம் நிர்ப்பந்திக்கப் போகிறது—

நாட்டை முன்னெடுத்துச் செல்ல இவர்கள் இணைந்து செயல்பட வேண்டும்— ஆகவே சமரசம் செய்து கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை—

இவர்கள் மோதிக் கொண்டால் நாட்டுக்கு நஷ்டம் நெருக்கடிக்கு மேல் நெருக்கடி ஏற்பட்டு நாடே பிளவுபடக் கூடிய நிலை உள்ளது—

எனவே, இந்த இரு தலைவர்களும பிரிந்து செயல்படக் கூடாது என்று சோவியத் அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்—

## ★ அணு ஆயுத எதிர்ப்பு

அண்மையில், "அணு ஆயுதங்களுக்கு எதிராக உலகின் வாக்காளர்கள்" என்ற சர்வதேச மாநாடொன்று நடைபெற்றது— 21 நாடுகளிலிருந்து சுமார் 600 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்—

அணு ஆயுதப் பரிசோதனைகளால் ஏற்படக் கூடிய உயிரின் வாழ்க்கைச் சூழல் பிரச்சினைகள் மருத்துவப் பிரச்சினைகள், ஒழுக்க நெறிப் பிரச்சினைகள் முதலியவற்றை பற்றி அவர்கள் விவாதித்தனர்—

நெவாடா — செமபலாதின்ஸ்க் மக்கள் இயக்கம என்ற அமைப்பே இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது—

ஓராண்டுக்கு முன்பு இந்த இயக்கம அரமபிக்கப்பட்டது—

## பூலோக சஞ்சாரம்

இதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்— மக்களின் ராஜ்யச் செயல்பாடுகள், நாடாளுமன்றின் ராஜ்ய செயல்பாடுகள், அரசின் ராஜ்ய செயல்பாடுகள் என்ற இந்த மூன்று சக்திகளை யும் ஒன்றிணைந்தால் மிகச்சிக்கலான பிரச்சினைகளுக்கு கூட நம்மால் தீர்வு காண முடியும—

மக்கள் இயக்கத்தின் பயனாக கடந்த ஆண்டில் சோவியத் யூனியனில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த மொத்தம 18 அணு ஆயுதச் சோதனைகளில் 7 சோதனைகள் மட்டுமே நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது—


பெனாஸிர்

ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகள் ஆரமபமாகியுள்ள போதிலும காலாவதியான பழைய ஆயுதங்களே இவ்வாறு ஒழிக்கப்பட்டு வருகின்றன— அதே சமயத்தில் அணு ஆயுதங்களை நவீனப்படுத்துவது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது—

இதற்கு அணு ஆயுதச் சோதனைகள் உதவுகின்றன— எனவே இந்த அணுவாயுதச் சோதனைகளை நிறுத்தினால் தான் ஆயுதக் குறைப்பு என்பது அர்த்தமுடையதாக இருக்கும

அப்போதுதான் அணு ஆயுதமற்ற உலகத்தை 21ஆம நூற்றாண்டில் அமைக்க முடியும— இதற்கு நமது சக்திக்கியன்ற எல்லாவற்றையும நாம செய்ய வேண்டும் என்று மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதிநிதி கூறியுள்ளார்—

அழிவுப் பாதையில் செல்லாமல் இராணுவத் தொழில் தொகுதிகளைத் தடுத்து நிறுத்தச் செய்வதற்கு மக்களால்தான் முடியும—

இந்த நிலையில், அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஒரு பொதுவான கொள்கை வரியை வகுப்பதற்காக ஒரு சர்வதேச அணு ஆயுத எதிர்ப்பு மன்றத்தை அமைக்க இந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது—

இவ்வேளையில் அமெரிக்க, சீன. தாய்லாந்து மற்றும் ஜப்பானிய உயர் அதிகாரிகளின் கூட்டு முயற்சியுடன் ஏழாவது முறையாக நடைபெற்ற நான்கு காமபூச்சிய அரசியல் கட்சிகளின் மாநாடு உடன்படிக்கையொன்று கைச்சாத்தானதுடன் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது—

நொரோடம சிஹானூக்கும பிரதமர் ஹூன் சென்னும போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்— நாட்டின் முதலாவது தேசிய உயர் சட்ட சபை ஜூலை இறுதியில் கூட்டப்பட வேண்டும—

நீண்ட நெடுங்காலத்துக்குப் பின்னர் கமபோடியாவில் அமைதியை நிலைநாட்டலாம் என்ற நமபிக்கை தோன்றியுள்ள போதிலும டோக்கியோ மாநாட்டை கெமர் ரூஜ் கட்சி பகிஷ்கரித்துள்ளது— இந்த தஸ்தாவேஜுக்குத் தான் கட்டுப்பட்டு நடக்கப் போவதில்லை என்று கியூ சமபன் அறிவித்துள்ளார்—

கெமர் ரூஜ் கோஷ்டியின் குறிக்கோள்கள் இன்று வெளியாகியுள்ளன ஒருபுறத்தில் சிஹானூக் தலைமையிலுள்ள கூட்டு அரசாங்கம் வீழ்ச்சியடைவதைத் தடுக்க விருமபுகின்றன— மறுபுறத்தில் ஜனநாயகத் தேர்தல் மூலம் அதிகாரத்திற்கு வர முடியாது என்று அவர்கள் நன்றாக உணர்ந்துள்ளனர்—

கெமர் ரூஜ் கோஷ்டி டோக்கியோவில் உருவான உடன்படிக்கையை நிராகரித்தால் அவர்கள் தனிமைப்பட வேண்டி வரும் என்று அவதானிகள் கூறுகின்றனர்—

இந்த பொல்பொட் குழு சிஹானூக் ஹுன்சென் உடன்படிக்கையைத் தொடர்ந்து கமபோடியாவில் புதிய அரசியல் சூழல் ஏற்படப் போகிறது என்பதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது—

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை பாரிஸில் அரமபமாகும சமயத்தில் கமபோடியா அரசியல் நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும என்று பாரிசில் அவதானிகள் கூறுகின்றனர்—

[ந]

---

# இலக்கிய பீடம்...

(3ஆம பக்கத் தொடர்ச்சி) முடிந்தேன்— நான் உட்கார்ந்தும அதுவரை பக்கத்திலிருந்தவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்த ஒரு எம எல் ஏ எழுந்து, "தலைவர் அவர்களே என்னென்ன பொருள்கள் செய்யலா?" என்று மீண்டும கேட்டார்—

நான் உடனே, சிறிதும் தாமதிக்காமல் "காசு கேட்கும காவி செய்யலாம" என்றேன்— சபை சிரிப்பில் மாண்டது!

இப்படிக் கூறினார் கலைஞர் கருணாநிதி—

ராஜ் சுத்தானந்த பாரதியார் அவர்களின் நினைவு மலராக அட்டையில் அவருடைய படத்துடன் வெளிவந்திருக்கிறது—

இரண்டாவது இதழ் திரு நா முத்தையா அவர்களுடைய படத்துடன் வந்திருக்கிறது— இரண்டு இதழ்களும ஆத்மீக மணம் கமழ்கின்றன— சமயம், ஒழுக்க நெறி, பக்தி சான்ற பல கட்டுரைகள் இடமபெற்றுள்ளன— பிரதி விலை ரூ; 5—00 ஆண்டுச் சந்தா ரூ— 60—00 ஆயுள் சந்தா ரூ— 1000—00 கிடைக்குமிடம; ஆத்ம ஜோதி குருகுலம், 7ஆம வாய்க்கால்

## பிரிட்டன் வரவேற்பு

லண்டன், ஜூன் 8

அவசரகால சட்டம தென் ஆபிரிக்காவில் அகற்றப் பட்டதை இங்கிலாந்து வரவேற்றுள்ளது.

நான்கு ஆண்டு காலமாக அவசரகால சட்டம தென் ஆபிரிக்காவில் அமுலில் இருந்தது. அதனை அகற்றுவதென்ற முடிவு ஜனாதிபதி எப் டபிள்யூ கிளார்க் கால் எடுக்கப்பட்டது.

# ...சிறந்த உருக்குப் புடைப்புகள்

சுநவ் [illegible] [illegible]
சன சிரிப்பில் [illegible]ரண்டது!

இப்படிக் கூறினார் கலைஞர் கருணாநிதி—

## ஆத்மஜோதி

"ஆத்ம ஜோதி" ஒரு [illegible]மம பெருமை சமயப் பத்திரிகை— சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நாவலப்பிட்டியிலிருந்து வெளிவர ஆரம்பித்த மாத இதழ் இது— இதன் ஆசிரியர் சைவத் தமிழ்மணி திரு நா முத்தையா அவர்கள்—

1982 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது நாவலப்பிட்டியிலிருந்த ஆத்ம ஜோதி அச்சகம் தீக்கிரையாக்கப்பட்டது—

ஆகையால் ஆத்ம ஜோதி வெளிவருவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது— இப்போது அது மீண்டும் வெளிவருகிறது— கிளிநொச்சியில் உள்ள "குருகுலம்" என்ற தர்ம ஸ்தாபனம் ஆத்ம ஜோதியை வெளியிட முன் வந்திருக்கிறது— திரு முத்தையா கௌரவ ஆசிரியராக தொடர்ந்து பணியாற்றுகிறார்—

ஆத்ம ஜோதியின் சித்திரை வைகாசி இதழ்கள் வரப்பெற்றோம்— முதல் இதழ் தெய்வமாகிவிட்ட தமிழறிஞர் யோகிறுள்ளன— பிரதி விலை ரூ; 5-00 ஆண்டுச் சந்தா ரூ- 60-00 ஆயுள் சந்தா ரூ- 1000-00 கிடைக்குமிடம்; ஆத்ம ஜோதி குருகுலம், 7ஆம் வாய்க்கால் கிளிநொச்சி—

## நம்பிக்கை

தேவ ஊழியத்தை நோக்கமாகக் கொண்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் நம்பிக்கை என்ற இதழின் ஏப்ரல் - மே வெளியீடு கிடைக்கப் பெற்றோம்— இதன் ஆசிரியர் வீ ஏ எஸ் தர்மராஜா—

விவிலிய வேதத்தை ஆதாரமாகக் கொண்ட பல சிந்தனைக் கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன— இந்தியாவிலிருந்து வெளிவரும் "திராவிட சாயம்" என்ற பத்திரிகையிலிருந்தும் கட்டுரைகள் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன—

இந்த சமயத்துக்கும், கிறிஸ்தவ சமயத்துக்கும் உள்ள ஒற்றுமைகளும், உடன்பாடுகளும் சில கட்டுரைகளில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது இந்த நம்பிக்கை இதழின் விசேஷ அம்சம் [illegible] விலை [illegible]ப்பிடப்படவில்லை. கிடைக்குமிடம் நம்பிக்கை, 80/2. நல்லையா வீதி, மட்டக்களப்பு—

## சதிப் புரட்சியில் ஈடுபட்டால் 12 ஆண்டு சிறை

மணிலா, ஜூன் 9

பிலிப்பைன்ஸில் சதிப் புரட்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஆகக் கூடுதலான தண்டனையாக 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்—

இதற்கான புதிய சட்டமொன்றை பிலிப்பைன்ஸ் செனட் சபை வியாழனன்று நிறைவேற்றியது—


இதற்கமைய புரட்சிச் சதியில் ஈடுபடும் தலைவர்களுக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரும்—

பிலிப்பைன்ஸில் அரசுக்கெதிரான சதிப் புரட்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன— இன்னும் பல ஆண்டுகளுக்கு சதி நடவடிக்கைகள் தொடரலாம் என செனட் சபை உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்—

[எ]


## தலைசிறந்த உருக்குப் படைப்புகள்


உங்கள் அலுவலகத்திற்கும் இல்லத்திற்கும் உகந்த சிங்கர் உருக்குத் தளபாடங்கள்.
அவை உங்கள் வாழ்க்கையை எளிதாக்குவதுடன் அலுவலகத்திற்கும்
இல்லத்திற்கும் எழிலூட்ட வல்லவை.
சகல தளபாடங்களும் 20" எம். எஸ். கோல்ட் ரோல்ட் உருக்குத் தகடுகளினால்
உருவாக்கப்பட்டு தூய வண்ணச் சாயங்களில் வந்துள்ளன.




ரூபா. 7,190/-

ஆடை அலுமாரி
77" × 36" × 18"


முழுநீள நிலைக்கண்ணாடி. கழற்றி மாற்றக்கூடிய 3 தட்டுகள், 2 லாச்சிகள். சேலைகளுக்கான அலுமினிய கம்பிகள். பெறுமதிமிக்க பொருட்களை வைக்க இரகசியப் பெட்டகம்: கோட் கொழுவி. மூட்டுப் பிணையல் கதவுகளும் பாதுகாப்புப் பூட்டுகளும்.




ரூபா. 4,290/-

அலுவலக் சிற்றலுமாரி (2 லாச்சிகள்)
71" × 36" 18 1/2"


கழற்றி மாற்றக்கூடிய 3 தட்டுகள். 2 லாச்சிகள். மூட்டுப் பிணையல் கதவுகளும் பாதுகாப்புப் பூட்டுகளும்.




ரூபா. 5,790/-

fபைலிங் கபினெட்
54" × 18 3/4" × 24"

ஏராளமான fபைல்களை ஒழுங்குபடுத்தி வைக்கலாம். இழுவை லாச்சியும் பூட்டும் கொண்டது.




ரூபா. 4,490/-

கனிஷ்ட அலுவலக சிற்றலுமாரி
47 1/2" × 30" × 18"

3 நிலையான தட்டுகளும் பூட்டி வைக்கக்கூடிய மூட்டுப் பிணையல் கதவுகளும் கொண்டது.

GBI SLT 4355

சிங்கர் உருக்குத் தளபாடங்கள்
உங்கள் அலுவலகத்திற்கும் இல்லத்திற்கும் எடுப்பானவை

சிங்கர்*
மாசற்ற மேன்மை

# போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் அமிதாப்பச்சனின் பங்கு என்ன?

## ஆதாரம் இருந்தால் கைது செய்யும்படி சவால் விடுகிறார்

போபார்ஸ் பீரங்கி பேரத்தில் நான் ஊழல் செய்திருப்பது உண்மை என்று நிரூபித்து விட்டு என்னைக் கைது செய்ய தயாரா? என்று இந்திய பிரதமர் வி பி சிங்குக்கு நடிகர் அமிர்தப்பச்சன் சவால் விடுத்து இருக்கிறார்,

சுவீடன் நாட்டில் உள்ள போபார்ஸ் நிறுவனத்திடம இருந்த இந்திய ராணுவத்துக்கு பீரங்கி வாங்கியதில் ஊழல் நடந்ததாக புகார் கூறப்பட்டது,

இந்த ஊழலுக்கும இந்தி நடிகர் அமிதாப்பச்சன், அவரது தம்பி அஜிதாப்பச்சன் ஆகியோருக்கும தொடர்பு இருப்பதாக கூறப்பட்டது,

இதை அமிதாப்பச்சன் மறுத்தார், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் குடும்ப நண்பர் என்பதால் தன் மீது அபாண்டமாக பழி கூறுவதாக கூறினார், இப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாக அமிதாப் பச்சன் பரபரப்பான பேட்டி ஒன்று அளித்திருக்கிறார்,

அதன் விவரம வருமாறு—

கேள்வி- கடந்த சில மாதங்களாக உங்கள் மீது பல்வேறு ஊழல் புகார்கள் கூறப்பட்டு வருகிறதே, இது குறித்து உங்கள் கருத்து என்ன?.

அமிதாப்பச்சன் பதில்- என் பெயருக்கும, புகழுக்கும களங்கம கற்பிக்க வேண்டும என்ற கெட்ட எண்ணத்துடன் ஏராளமான பொய்ப் புகார்களைக் கூறிவருகிறார்கள். காரணமின்றி சொல்லப்படும அந்தப் புகார்களில் கொஞ்சம கூட ஆதாரம கிடையாது, இந்தப் பிரச்சினை விரைவில் தீர்ந்து விடும என்று நமபுகிறேன,

கே- பிரதமர் விபி சிங்குக்கு நீங்கள் ஒரு கடிதம எழுதினீர்களே? அதற்கு ஏதேனும பலன் கிடைத்ததா?.

ப- எதுவும கிடைக்கவில்லை. அந்தக் கடிதத்தை பெற்றுக் கொண்டேன் என்று கூட அவரிடம இருந்து பதில் வரவில்லை,

கே- மத்தியில் ஆட்சி பொறுப்பேற்றுள்ள புதிய அரசு உங்கள் மீது வேண்டும என்றே அவதூறு கூறுவதாகவும, வஞ்சம தீர்க்கும நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும நீங்கள் நினைக்கிறீர்களா?

ப- ஆம, அது உண்மை தான், இந்த அரசு என்னை குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் பார்க்கிறது அவர்கள் என் மீது வஞ்சம தீர்த்துக் கொள்ளப்பார்க்கிறார்கள்.

என்னை எந்த வகையில் பழிவாங்குவார்கள் என்பதை கடந்த ஜனவரி மாதமே கூறி இருந்தேன், அதன்படி "வருமானவரி இலாகா" மூலம என்னை நெருக்கினார்கள், என் வருமானத்தின் மீது 3 கோடியே 20 லட்சம ரூபாய் கூடுதலாக வரி விதித்தனர்,

1988ஆம ஆண்டு மார்ச் மாதம நானாக முன்வந்து என் சொத்து பற்றிய கூடுதல் விவரங்களை வெளியிட்டேன், ஆனால் அவர்கள் என் மீது வஞ்சம தீர்க்கும நடவடிக்கையில் சட்டத்துக்கு புறம்பாக ஈடுபட்டனர்,

என் வருமானம பற்றி கணக்கிட்டு வரி விதிப்பதற்காக விசேஷமாக அதிகாரிகளை நியமித்தனர், பல்வேறு வகையான நோட்டீசுகளை அனுப்பினார்கள்.

கடந்த சில மாதங்களாக எனக்கு அனுப்பிய நோட்டீசுக்கு கணக்கே கிடையாது, என் வாழ்க்கையிலேயே இவ்வளவு தூரத்துக்கு யாரும எனக்கு நோட்டீசு அனுப்பியதில்லை,

ஒரு பத்திரிகைக்கு நான் அளித்த பேட்டியின் ஜெராக்ஸ்" நகலை எடுத்து வைத்துக் கொண்டு என்னிடம சரமாரியாக கேள்வி கேட்டனர்,

தீபாவளியின் போது கையில் தீக்காயம ஏற்பட்டதாக பேட்டி



அமிதாப்பச்சன்

அளித்து இருக்கிறீர்கள், இந்த காயத்துக்கு எங்கே சிகிச்சை பெற்றீர்கள், அதற்கு என்ன செலவு ஆனது, அதற்கு கணக்கு எங்கே என்றெல்லாம மோசமான கேள்விகள் கேட்டு என்னை துன்புறுத்தினார்கள்,

உடல் சிகிச்சை பெற வெளிநாடு சென்றீர்களே, உங்களுடன் யார் யாரெல்லாம வந்தார்கள், அவர்களுக்கு விமான டிக்கெட் எடுத்தது யார்? செலவுக்கு பணம எங்கிருந்து வந்தது, வெளிநாட்டில் எங்கெல்லாம சென்றீர்கள், எவ்வளவு செலவழித்தீர்கள், அதற்கு கணக்கு எங்கே என்று பல கேள்விகள் கேட்டனர்,

இப்படிக் கேள்வி கேட்பதன் அர்த்தம என்ன? என்னை வஞ்சம தீர்த்துக் கொள்ளவும, என்னை குற்றவாளியாக்கவும வேண்டும என்றே இவ்வாறு செய்தனர்,

இப்போது என் தமபி மீது அந்நிய செலாவணி மோசடி குற்றச்சாட்டை தொடர்ந்துள்ளனர்,

போபார்ஸ் பீரங்கி பேர ஊழலில் எங்கள் மீது அபாண்டமாக பழி சுமத்துகிறார்கள், ஊழலில் கிடைத்த பணம "சுவிஸ்" வங்கியில் போடப்பட்டு இருப்பதாகவும, இது தொடர்பாக முடக்கி வைக்கப்பட்டுள்ள 6 வங்கிக் கணக்குகளில் ஒன்று அஜிதாப்பச்சனுக்கு சொந்தமானது என்றும கூறுகிறார்கள்,

எனக்கோ அல்லது என் குடுமபத்தினருக்கோ போபார்ஸ் பீரங்கி பேரத்தில் எந்த சமபந்தமும கிடையாது, அதே போல சுவிட்சர்லாந்து வங்கிக் கணக்குக்கும எங்களுக்கும எந்த தொடர்பும கிடையாது,

இதுபற்றி பொய்யான தகவல் வெளியிட்ட லண்டன் பத்திரிகை மற்றும சுவிசர்லாந்து பத்திரிகைகள் மீது வழக்கு தொடர்ந்து இருக்கிறோம, எங்களின் உரிய விளக்கத்தை வக்கீல் மூலம அனுப்பி இருக்கிறோம,

போபார்ஸ் பிரச்சினையில் நாங்கள் குற்றவாளியாக இருந்தால் தைரியமாக எப்படி கோர்ட்டுக்கு செல்ல முடியும, ஆனால் நாங்கள் குற்றமற்றவர்கள் எனவே தைரியமாக கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து இருக்கிறோம,

என் மீது குற்றம சுமத்துபவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன், என் மீது புகார் கூறுபவர்கள் ஆதாரங்களுடன் வாருங்கள் ஆதாரங்களைக் காட்டி என் மீது சொல்லும குற்றங்களை நிரூபியுங்கள்,

---

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்:திரு. ஆர்வி

[10—6—1990 தொடக்கம 16—6—1990 வரை; உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி பரணி கார்த்திகை 1ஆம கால்

மேஷம;- பொருளாதார வகையில் இதுவரை ஏற்பட்ட விரயங்கள் குறையும. மறைமுகமாக இருந்து வந்த எதிர்ப்புகள் குறைந்து பகைவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரியின் அன்பும ஆதரவும கிடைக்கும. நீண்ட நாட்களாக விடுபட்டிருந்த நண்பர்கள் வந்து சேர்வார்கள்.

### சிங்கம்

மகம் பூரம உத்தரம 1ஆம கால்—

சிங்கம;- தொழிலில் எதிர் பார்த்த பண உதவியும வசூலாகாமல் இருந்த பாக்கிகளும வந்து சேரும. குடுமபத்தில் அமைதியும, நிம்மதியும காணப்படும. ஆலய தரிசனம, ஸ்தல யாத்திரை போன்றவை செய்ய நேரிடும. உற்றார், உறவினர் அன்புடனும ஆதரவுடனும இருப்பார்கள். ஜவுளி வியாபாரிகள் ஆதாயமடைவார்கள்.

### தனு

மூலம பூராடம் உத்தராடம் 1ஆம் கால்—

தனு- தொழிலில் மந்த நிலை காணப்படும. புது முயற்சிகளில் ஒரு தொய்வு ஏற்படும. நீண்ட நாட்களாக இருந்து வந்த நோய் குறைய ஆரமபிக்கும. கொடுக்கல் வாங்கலில் சில தகராறுகள் ஏற்படலாம. வீடு, வாகனம போன்றவற்றால் செலவுகள் ஏற்படும. வெளிநாட்டில் இருந்து மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும

### ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்— ரோகிணி — மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்—

ரிஷபம;- தொழிலில் ஏற்பட்டிருந்த நஷ்டங்கள், சிக்கல்கள் படிப்படியாகக் குறையும. நண்பர்களுடைய உதவி கிடைக்கும. குடுமபத்தில் சுப காரியங்கள் இடமபெறும. செலவினங்கள் அதிகரிக்காவரு... சமாளித்துக்

### கன்னி

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்— அத்தம் சித்திரை 1ஆம கால்கள்—

கன்னி;- தொழிலில் சுறுசுறுப்பும, ஆர்வமும, உற்சாகமும ஏற்படும. பெரியவர்கள் அரசினர் உதவி கிடைக்கும. ஒரு புது முயற்சிக்கு அடிபோடப்படும. குடுமபத்தில் சுப காரியங்கள் இடம பெறும உற்றார் உறவினர் உதவி

### மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்— திருவோணம் — அவிட்டம 1 — 2ஆம் கால்கள்—

மகரம;- கௌரவம, புகழ், தேகாரோக்கியம நன்றாக இருக்கும. ஆனாலும வேலையில் சலிப்பும, மனக் கசப்பும ஏற்படக் கூடிய சூழ்நிலைகள் வரக் கூடும. பிரயாணங்கள் தள்ளிப் போடப்படும கடல் கடந்த பிர

---

# சிந்தாமணி எண் சோதிடம்

NUMEROLOGY

[10—6—1990 தொடக்கம 16—6—1990 வரை உள்ள பலாபலன்கள்]

ருந்த நஷ்டங்கள், சிக்கல்கள் படிப்படியாகக் குறையும். நண்பர்களுடைய உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் இடம்பெறும். செலவினங்கள் அதிகரித்தாலும் சமாளித்துக் கொள்ளலாம். பிள்ளைகள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள்.

பும், ஆர்வமும், உற்சாகமும் ஏற்படும். பெரியவர்கள் அரசினர் உதவி கிடைக்கும். ஒரு புது முயற்சிக்கு அடிபோடப்படும். குடும்பத்தில் சுப காரியங்கள் இடம்பெறும் உற்றார் உறவினர் உதவியாக இருப்பார்கள். வாரக் கடைசியில் தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம்.

தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். ஆனாலும் வேலையில் சலிப்பும், மனக் கசப்பும் ஏற்படக் கூடிய சூழ்நிலைகள் வரக் கூடும். பிரயாணங்கள் தள்ளிப் போடப்படும் கடல் கடந்த பிரயாணம் ஒன்றுக்குக் கருக்கூட்டும் கூடுதப் போக்குவரத்துக்கள் அனுகூலமாகும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால்கள்– திருவாதிரை – புனர்பூசம் 1, 2 3ஆம் கால்கள்–

மிதுனம்;– உத்தியோகத்தர்களுக்கு பல வகைகளில் மனத் திருப்தியற்ற நிலையிலிருந்த இவர்களது உத்தியோக வாழ்க்கையில் சரளமான நிலை அமையும். கூட்டாளிகளிடையே ஏற்பட்டிருந்த வீண் விரோதம் அகலும். கோர்ட் வழக்குகள் தள்ளிப் போடப்படும். உறவினர் உதவி கிடைக்கும்.

## துலாம்

சித்திரை 3 4ஆம் கால்கள்– சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்–

துலாம்;– உத்தியோகத்தர்களுக்கு நிம்மதி ஏற்படும் மேலதிகாரியின் கடுப்புக்கு ஆளாகியிருந்தவர்கள் அவற்றிலிருந்து விடுபடுவார்கள். செலவுகள் அதிகரித்தாலும் அதைச் சமாளிக்கும் வகையில் வருமானம் வந்து சேரும். கோர்ட் வழக்கு விவகாரங்கள் வெற்றியாக முடிவடையும்.

## கும்பம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்– சதயம் – பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்–

கும்பம்–: தொழில் முன்னேற்றம் காணப்படும். சக ஊழியர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சலுகைகளை சிலர் மீண்டும் பெற முடியும். வழக்கு விவகாரங்களில் முன்பிருந்த கெடுபிடிகள் குறையும். சிக்கல்கள் விடுபடும். நன்மையாகவே சில தீர்ப்புக்கள் கிடைக்கும்.

## கடகம்

புனர்பூசம் 4ஆம் கால்– பூசம் ஆயிலியம்–

கடகம்;– தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும் தொழிலாளர் பிரச்சினைகள் போன்றவற்றில் ஒரு இணக்கம் உண்டாக வழி பிறக்கும். தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்பனையாகும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியாக இருக்கும். கலைஞர்கள் புகழடைவார்கள்.

## விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால்– அனுஷம் கேட்டை–

விருச்சிகம்;– பொருளாதாரம் நன்றாக இருந்தாலும் அடிக்கடி பணத் தட்டுப்பாட்டுக்கும் இடமுண்டு. தொழிலில் ஒரு சிலர் மீது சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் விலக்கிக் கொள்ளப்படும் நிலை வரும். பாராமுகமாக இருந்த சக ஊழியர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். கணவன் – மனைவி இடையே சிறு தகராறு ஏற்படும்.

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் கால்– உத்திரட்டாதி - ரேவதி–

மீனம்;– குடும்பத்தில் இருந்து வந்த பல தொல்லைகள் நீங்கும். மறைமுகமாக நின்று எதிர்ப்புக்களைக் காட்டி வருபவர்களின் திட்டங்கள் செயலற்றுப் போகும். தெய்வ நம்பிக்கையும், இறை வழிபாடும் தெம்பையும், மன உறுதியையும் கொடுக்கும். பிள்ளைகளால் புகழும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

# சிந்தாமணி எண் சோதிடம்

## NUMEROLOGY

[10—6—1990 தொடக்கம் 16—6—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### 1

1 10 19 28 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

முதலவசிகரத்தால் காரியசித்தி– குடும்பசுகம்– எதிர்பாராத பிரயாணம்– அடிக்கடி பணத்தட்டுப்பாடு– பிரயாசை மிகுதி– காதலில் விரக்தி–

அதிஷ்ட நாட்கள்– திங்கள் புதன்–

### 2

2 11 20 29 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பணவரவு– புதிய பதவிப்பேறு சத்துருஜயம்– விருந்தினர் வருகை– கோபமிகுதி– துக்க சமபவங்கள் கேள்விப்படல்– மனச்சோர்வு– சஞ்சலம்–

அதிஷ்ட நாட்கள்– புதன் சனி

### 3

3 12 21 30 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

அதிகார விருத்தி– பயனற்ற பிரயாணம்– சத்துருஜயம்– வியாபாரத்தில் அபிவிருத்தி– அதிக இலாபம்– புத்திரரால் கவலை– அதிக யோசனை–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

### 4

4 13 22 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தனதானிய இலாபம்– அதிக செலவு– முயற்சிகளில் தடங்கல்– நண்பர்களின் உதவி– வீண் அலைச்சல்– கலைஞர்களுக்குப் புகழ்–

அதிஷ்ட நாட்கள்– திங்கள் சனி–

### 5

5 14 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

தொழில் மந்தம்– அகால போஜனம்– விருந்தினர் வருகை உறவினரால் உதவி– பிள்ளைகளால் மகிழ்ச்சி– பிரயாணம் கைகூடல்–

அதிஷ்ட நாட்கள்– புதன் வியாழன்–

### 6

6 15 24 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

உத்தியோக உயர்வு– இடமாற்றம்– வாகன சுகம்– பணவரவு– வீட்டுப் பிரச்சினை– வைத்தியச் செலவு– நித்திரையின்மை– யோசனைமிகுதி–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

### 7

7 16 25 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

முயற்சிகளில் வெற்றி– புகழ் அதிகரிப்பு– தனதானிய இலாபம்– பிரயாணக் கஷ்டம்– பிள்ளைகளால் செலவு– காதலில் மகிழ்ச்சி–

அதிஷ்ட நாட்கள்– திங்கள் சனி–

### 8

8 17 26 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பணவசதி– இலட்சுமீகரம்– வாக்குப்பலிதம்– பலவித பொருட்பேறு– ஆரோக்கியக் குறைவு– இனசனப்பகை– பூமியால் பலன்–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வியாழன்–

### 9

9 18 27ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

சுகபோக வாழ்க்கை– வாகன சுகம்– கொடுக்கல் வாங்கலில் திருப்தி– புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை– ரோக நீக்கம்– சயன சுகம்–

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வெள்ளி–

வர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன், என் மீது புகார் கூறுபவர்கள் ஆதாரங்களுடன் வாருங்கள் ஆதாரங்களைக் காட்டி என் மீது சொல்லும் குற்றங்களை நிரூபியுங்கள், நான் குற்றவாளி என்று நிரூபித்தால் தாராளமாக என்னைக் கைது செய்து ஜெயிலில் அடைக்கலாம், இதை நான் சவாலாகவே சொல்கிறேன்,

அதை விட்டு, விட்டு என் மீது அவதூறாக பொய்ப் புகார் கூறாதீர்கள்,

கே– பிரதம மந்திரி வி பி சிங் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப– இந்திய அரசியல்வாதிகளிலேயே மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவர் வி பி சிங,

கே– உங்கள் இருவருக்கும் இடையே "நட்புறவு" எப்படி இருந்தது?

ப– நாங்கள் முன்பு ஒன்றாக இருந்திருக்கிறோம், அவர் மந்திரியாக இருந்த போது சில முறை சந்தித்து பேசி இருக்கிறேன். என் மீது புகார்கள் கூறப்பட்ட பிறகு ஒருமுறை அவரது அழைப்பின் பேரில் டெல்லியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றேன், அவருடன் காலை உணவு சாப்பிட்டேன், என் மீது அன்புடனும், நட்புடனும் நடந்து கொண்டார், அதன் பிறகு சாதாரண முறையில் சந்தித்து பேசி இருக்கிறோம்,

கே– அரசியலை விட்டு விலகுவதாக நீங்கள் எடுத்த முடிவு இறுதியானது தானா?

ப– ஆம், என் முடிவில் மாற்றம் ஏதுமில்லை, அரசியலை விட்டு விலகும் முடிவில் ஒருபோதும் மாற்றம் கிடையாது,

மேற்கண்டவாறு அமிதாப் பச்சன் பேட்டி அளித்தார்,

(ம–10)

# இறைவனை இகழ்வது போல புகழ்ந்து பாடும் அருங்கலை

## சிவபெருமானை நிந்தாஸ்துதி செய்த சுந்தரரின் கவித்திறன்

ஒரு கருத்தை சொல்லும் போது அழகாகச் சொல்லுவது கவிஞர்களின் இயல்பு. வெவ்வேறு வகையாகச் சொல்வார்கள்—

இறைவனைப் புகழும் துதிகள் தமிழில் எவ்வளவோ இருக்கின்றன— அவை யாவும் ஒரே மாதிரி இருந்தால் சுவை உண்டாகாது. நம்முடைய துன்பங்களை எடுத்து முறையிடுவது இறைவனுடைய பெருமையை எடுத்துச் சொல்வது அவனுடைய திருவிளையாடல்களைச் சொல்வது — இப்படிப் பலவகையில் இறைவனுடைய துதிகள் இருக்கின்றன.

தேவாரத்திலும் பலவகையான துதிகளைக் காணலாம். இறைவனை முன்னிலைப் படுத்திச் சொல்வது படர்க்கையாக வைத்துச் சொல்வது என்று வெவ்வேறு வகையில் அமைந்த பாடல்கள் உள்ளன—

சில இடங்களில் இறைவனை இகழ்வது போலத் தோற்றும் பாடல்களும் இருக்கின்றன. ஆனால் அவை [illegible] அவனுடைய புகழைச் சொல்வனவாகவே இருக்கும். அவற்றை நிந்தாஸ்துதி என்று வடமொழியில் [illegible] பழிப்பது போலப் புகழ்தல் என்று தமிழிலே சொல்வார்கள். அப்படிச் சொல்வது ஓர் அலங்காரம்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுக்குத் தோழராக இருப்பவர். தம்பிரான் தோழர் என்பது அவருடைய பெயர்களில் ஒன்று. இறைவனை மிக எளியவனாக எண்ணிச் சில பாடல்களைப் பாடியிருக்கிறார். இறைவனிடம் மிக நெருங்கிக் கூறும் முறையில் அவை அமைந்திருக்கும்—

தமக்கு வேண்டிய பொருள்கள் இன்னவையென்றும் அவற்றை உடனே தந்தருள வேண்டுமென்றும் பாடுவார்- இன்னும் சில பாடல்கள் இறைவனைப் பரிகாசம் செய்வது போலவும் அமைந்திருக்கும். இவை யாவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனிடத்தில் கொண்ட தோழமைக்கு அறிகுறிகள்.

வேடிக்கையாக அமைந்த பாட்டு ஒன்றை இப்போது பார்க்கலாம்.

ஒரு குடும்பத்தில் வேலை செய்வதற்காக ஒருவன் போகிறான் போய்ச் சில காலம் வேலை செய்கிறான் பிறகு அந்த வீட்டில் வேலை செய்யத் தன்னால் முடியாது என்று கருதி விட்டு விட்டு வந்து விடுகிறான்.

அவனை அவனுடைய நண்பன் கண்டு "ஏன் அப்பா, அந்த வீட்டை விட்டு வந்து விட்டாய்?" என்று கேட்கிறான். "நமக்கும் அந்த வீட்டுக்கும் சரிப்பட்டு வராது. நம்மால் அங்கு வேலை செய்ய முடியாது என்று அவன் சொல்லுகிறான்.

"அதற்கு என்ன காரணம்?" என்று அடுத்தபடி கேள்வி வருகிறது. அதற்கு விரிவாகத் தான் பட்ட அனுபவங்களைச் சொல்லுகிறான்—

"அந்த வீட்டிலே எஜமானனுக்கு இரண்டு பெண்டாட்டிகள். இரண்டு பிள்ளைகள் வேறு வேலைக்காரனுக்கும் வயிறு இருக்கிறது- உணர்ச்சி இருக்கிறது- அவனுக்கும் வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டிய சுகங்கள் இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் கூட நினைக்காமல் அங்கே இருக்கிறவர்களெல்லாம் வேலை வாங்கினார்கள் ஆனால் எனக்கு என்ன வேண்டுமோ அதைக் கவனிக்கவே இல்லை.



வாகீச கலாநிதி

— கி. வா. ஜெகந்நாதன் :—

ஒரு மனைவி வாயே பேசுவதில்லை- ஆனால் பெரிய ஆரவாரம் செய்வாள்- ஒரு பையன் தனக்கு வேண்டியதை வேண்டிய மட்டும் வாங்கி வாங்கிச் சாப்பிடுவான் வேலைக்காரனுக்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டுமே என்கிற நினைவே இராது.

மற்றொரு பிள்ளையோ பார்த்தாலே பயப்படும்படி கையிலே ஆயுதத்தை வைத்துக் கொண்டிருப்பான்—

அவருடைய முதல் பெண்டாட்டி செய்த வேலைக்குத் தக்கபடி கூலி கொடுக்க மாட்டாள் மாதா மாதம் சம்பளம் கொடுக்க வேண்டுமே, அதற்கே தகராறு—

"அந்த வீட்டில் இருக்கிற அத்தனை பேரும் என்னுடைய நன்மையைக் கவனிக்காமல் தங்கள் தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள்— நான் அங்கே எப்படி வேலை செய்வது? எனக்கு வேண்டிய பொருள்களை எப்படிப் பெறுவது? சம்பளமும் கிடைக்காது சாப்பாடும் கிடையாது. வேறு நன்மைகளும் இல்லை. ஆகையினாலேதான் நான் வந்து விட்டேன்." என்று அவன் சொன்னான்.

இப்படி சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைப் பார்த்துப் பேசுகிறார்— "சுவாமி உங்களுக்கு நானும் என்னைச் சார்ந்த அடியார்களும் ஆட்செய்ய மாட்டோம்" என்று சொல்லுகிறார்—

ஓணகாந்தன் தளி என்ற திருக்கோயிலுக்குச் சென்ற போது இறைவனைத் தரிசித்து தேவாரம் பாட ஆரம்பித்தார். அப்பொழுது அவருடைய உள்ளத்திலே பரிகாசமாகப் பாட வேண்டும் என்று தோன்றியது போலும்! பழிப்பது போலப் புகழும் துறையிலே பாட ஆரம்பிக்கிறார்.

"ஓணகாந்தன் தளி உளீரே
உங்களுக்கு ஆட் செய்ய
மாட்டோம்"

காஞ்சிபுரத்தில் இருப்பது ஓணகாந்தன் தளி செய்ய மாட்டோம் என்று தம்மையும் தம்மைச் சார்ந்த அடியார்களையும் சேர்த்துச் சொல்லுகிறார் என்ன காரணம்?

உம்முடைய தலையின் மேல் ஒருத்தி இருக்கிறாள் அந்தப் பெருமாட்டி வாயே திறப்பதில்லை ஆனால் அவள் வரும்

[12ஆம் பக்கம் பார்க்க]

# அனைத்தும் சாத்தியம் அரசியலில்

—வலம்புரி ஜான் :—

பூனைகள் எலிகளைப்
புனித நீர் ஆட்டலும்
நண்டுகள் நரிகளுக்கு
நளபாகம் படைத்தலும்
அயிரை மீன் கொக்கிற்கு
அஞ்சனம் தீட்டலும்
அனைத்தும் சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

பூதத்தின் பற்களைப்
பூச்சிகள் தேய்த்தலும்
பொக்கை வாய்ப்பாட்டிகள்
பொன் மஞ்சள் பூசலும்
நாய்க்குட்டி பூதத்திற்கு
நாடு கொண்டாடலும்
அனைத்துமே சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

அலாவுதீன் விளக்கெரிக்க
அலைந்து நெய் கேட்டலும்
அரிச்சந்திரன் அரசிக்காய்
ஆயிரம் பொய் சொல்லலும்
காந்திமகான் கறிக்கடையில்
காசு பண்ணப் பார்த்தலும்
அனைத்துமே சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

புத்தன் விறகென்றே
போதிமரம் விற்றலும்
புனிதன் தனதென்று

சிட்டெடுக்க மறந்த கிளி
சில்லறைக்கு நிற்றலும்
அனைத்துமே சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

ஒட்டகத்தை குட்டி ஆடாய்
ஒடுக்கிய காட்டலும்
சுடுதற்கே சேவலென்று
தூயப்பூ கேட்டலும்
ஆண்குரங்கு பொட்டு வைக்க
அழகுநிலா பறித்தலும்
அனைத்துமே சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

தலைவர் கட்சி மாறினால்
தத்துவமாய் ஆக்கலும்
தொண்டர் கட்சி மாறினால்
"தூ"வென்றே தள்ளலும்
தேர்தலுக்கு மாறும் கூட்டு
தேவை என்றே சொல்லலும்
அனைத்துமே சாத்தியம்
அரசியலில் மாத்திரம்.

போனமுறை தேர்தலிலே
பொய்யன் என்றே சொல்லலும்
இந்தமுறை தேர்தலிலே
அய்யன் என்றே தூக்கலும்
போன தேர்தல் கூட்டினை
போட்டுடைத்து மாற்றலும்
அனைத்துமே சாத்தியம்

# கனடா ! கனடா ! கனடா !
# காணவாரும் ஜெகத்தீரே !

* 26 மில்லியன் (260 லட்சம்) சனத்தொகை கொண்டது கனடா. இலங்கையை விட ஒன்றரை மடங்குதான் அதிகம்!

[illegible] யாக வழங்கும் டொரன்டோ நகரம் ஒன்டாரியோ மாநிலத்திலும் உள்ளன!

பனி விழுந்து வெண்காடாக இருக்கும்! இக் காலத்தில் விசேஷ குளிர் தாங்கு ஆடைகளை அணிந்துதான் வீட்டுக்கு வெளியே [illegible]

வழுக்கிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் போது தொடர்ச்சியாக பத்து வாகனங்களாவது [illegible]

பார்க்க அறிமுகமோ லஞ்சமோ தேவையில்லை. ஒழுங்கான — விரைவான — பண்பான சேவை [illegible]

* 26 மில்லியன் (260 லட்சம்) சனத்தொகை கொண்டது கனடா. இலங்கையை விட ஒன்றரை மடங்குதான் அதிகம்! பரப்பளவோ 3 லட்சம் சதுர கிலோ மீற்றருக்கு! அதிகம் குடி நெருக்கமுள்ள பகுதிகள் ஒன்டாரியோ, கியூபெக் ஆகிய மாநிலங்கள் ஆகும். "சமஷ்டி" அரசமைப்பைக் கொண்ட இந் நாட்டில் 10 மாநிலங்களும் 2 யூனியன் பிரதேசங்களும் உள்ளன!

* கனடாவின் தலைநகரம் ஒட்டாவா. 1978 இல் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடந்த மொன்ட்ரியல் நகரம் கியூபெக் மாநிலத்திலும் ஆங்கில மொழி முதன்மையாக வழங்கும் டொரன்டோ நகரம் ஒன்டாரியோ மாநிலத்திலும் உள்ளன!

* இங்கே "நிச்சயமற்ற" விடயங்களில் ஒன்றாக காலநிலையைச் சொல்வார்கள். ஒரு நாளில் திடீரென்று மழை வரும். வெயில் காயும், குளிரும் மாறி மாறி! இருந்தும் பருவகாலங்கள் ஒழுங்காகவே தொடர்கின்றன– ஏப்ரலில் வசந்தம் துவங்குகின்றது, தொடர்ந்து கோடை, இலையுதிர் மாரி வருகின்றன. பனி விழும் மாரி காலம்தான் நம்மவருக்கு "கடக்கக்" கஷ்டமான காலம்! கடுங்குளிர். தெருவெங்கும் வீடுகள் மீதும் வாகனங்கள் மீதும் பனி விழுந்து வெண்காடாக இருக்கும்! இக் காலத்தில் விசேஷ குளிர் தாங்கு ஆடைகளை அணிந்துதான் வீட்டுக்கு வெளியே செல்ல வேண்டும்!

* வானளாவிய அடுக்குமாடித் தொடர் வீடுகள் நிறைந்து கிடக்கின்றன. பல விதமான வீட்டு வசதியும் உண்டு!

* இங்கு வசிப்போர் பெரும்பாலானோரிடம் கார் உண்டு. [நம் நாட்டவர்கள் உட்பட] அகன்ற, நன்கு பராமரிக்கப்படும் சாலைகள். நினைத்த இடத்தில் எல்லாம் நிறுத்திக் கதைக்க முடியாது. மாரி காலத்தில் பனியில் வழுக்கிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் போது தொடர்ச்சியாக பத்து வாகனங்களாவது முட்டி மோதிக் கொள்ளும். இதனால் அக்காலத்தில் காப்புறுதி நிறுவனங்களுக்கு இழப்புகள் அதிகம். கார்கள் அனைத்தும் இடது கை ஓட்டம்!

* நகரங்களில் ஒழுங்கான – அழகாகத் திட்டமிடப்பட்ட ரயில் வசதி உண்டு. மின்சார ரயில்கள், நிலத்தின் அடியில் ஓடும் சுரங்க ரயில்கள் இத்தியாதி. ஒவ்வொரு ரயில் நிலையத்துடனும் இணைப்பு பஸ் சேவை நேர்த்தியாக இயங்குகின்றது!

* அநேகமாக ஒவ்வொரு வீட்டுக்கும் டெலிபோன் இணைப்பு உண்டு. வீட்டிலிருந்து கொண்டே நேரடியாக வெளிநாட்டு அழைப்புகளைப் பெறலாம். நகர எல்லைக்குள் டெலிபோன் அழைப்புகள் எவ்வளவும் எடுக்கலாம். தனித் தனிக் கட்டணம் இடையாது. விரும்பியவர்கள் தாம் இல்லாத வேளைகளில் வரும் தொலைபேசிச் செய்திகளைப் பார்க்க அறிமுகமோ லஞ்சமோ தேவையில்லை. ஒழுங்கான – விரைவான – பண்பான சேவை எளிதில் கிடைக்கிறது!

* கனடா முழுவதுமே குடியேறிய நாடுதான். முதலில் பிரெஞ்சுக்காரரும் தொடர்ந்து ஆங்கிலேயரும் ஐரோப்பாவிலிருந்து வந்து சேர்ந்த ஆதிக்குடிகள் (பூர்வீகவாசிகள் – சிறு சிறு ஜாதிகள் மிகவும் கொஞ்சப் பேர்தான்) சமீப காலங்களில் மெக்ஸிகோ, ஸ்பெயின், எல்சல்வடோர், சீனா, இலங்கை, லெபனான், இஸ்ரவேல், ஆபிரிக்கா என்று எங்கெங்கு பூசல்கள், போர்கள், பிரச்சினைகள் இருக்கிறதோ அங்கிருந்தெல்லாம் வருகின்ற "அகதிகளை" ஏற்றுக் கொள்ளும் "புண்ணிய பூமி" இது

* ஆனால் வருகின்றவர்கள் திட்டமிட்டு உழைத்த செலவிட்டு வாழ்ந்தால் ஆனந்தமே. ஆனால் அகலக் கால் வைத்தால் அரோஹராதான்! நம்மவரில் பலர் கார்வாங்கவும் வீடு வாங்கவும் 12 ஆயிரம் டொலர் (நமது 4 லட்

■ அரசியலில் மாத்திரம்.

■ புத்தன் விறகென்றே
■ ப்பாதிமரம விற்றலும
■ புனிதன் தனதென்று
■ பொய்பல்லை நினைத்தலும
■ ரவிவர்மா ஓவியத்தை
■ ராப்பாடி வாங்கலும
■ அனைத்துமே சாத்தியம
■ அரசியலில் மாத்திரம.


■ காளிதாசன் அச்சகத்தில்
■ கணக்குப்பிள்ளை ஆதலும
■ அந்தப்புறக் காவலுக்காய்
■ அலெக்சாண்டர் அலைதலும
■ ஆயர்பாடிக் கண்ணனவன்
■ அமுல் தேட்டு அழுதலும
■ அனைத்துமே சாத்தியம
■ அரசியலில் மாத்திரம.

■ கட்டெறும்பு பெண் கேட்டு
■ கரடியைத் தேடலும
■ காட்டெருமை கத்தலுக்கு
■ கழுதை கை தட்டலும

இந்தமுறை தேர்தலிலே
அய்யன் என்றே தூக்கலுங்
போன தேர்தல் கூட்டினை
போட்டுடைத்து மாற்றலும
அனைத்துமே சாத்தியம
அரசியலில் மாத்திரம.

நாற்பது நாள் தேர்தலுக்காய்
நான்கு கோடி மாறலும
நான் மட்டும் மாறுவிட்டால்
நாளும என்னை ஏறலும
ஒவ்வொரு தேர்தலுக்கும
ஒன்று போல மாறலும
அனைத்துமே சாத்தியம
அரசியலில் மாத்திரம.

ஒன்று சேர்ந்து திருடுவது
உலகும மெச்சும வேதமா?
ஒரு கோடி காகம என்றால்!,
ஊர் மெச்சும கீதமா?,
எந்தக்கட்சி நல்ல கட்சி
எவனுக் கேனும தெரியுமா?,
அனைத்துமே சாத்தியம
அரசியலில் மாத்திரம.




கனடாவிலிருந்து

## — ஆ. பாஸ்கரதாஸ் —

[முன்னாள் இந்து விவகாரப் பணிப்பாளர்]

பெறவும் வீடு மாறும் போது தகவல் தரவும் ஏற்பாடுகள் உண்டு ஒலிப்பதிவு செய்து தகவல்கள் பெறும நமபர்களும உள்ளன. புலிகளின் குரல் செய்திகளைக் குறித்த இலக்கங்களைத் தட்டிப் பெறலாம்.

* அலுவலகங்களில் அலுவல்

சம்) கொடுத்து உறவினர்களை இங்கே அழைக்கவும் என்று கடன்பட்டு கஷ்டப்படுகின்றனர். அதற்காகச் சிலர் 2—3 வேலை கூடச் செய்கின்றனர்.

* நம்மவர்கள் (சுமார் 50 ஆயிரம்) இங்கேயும் மாதாந்தம் சீட்டுப் பிடிப்பதை மறக்கவில்லை. சீட்டுப் போட்டு பயன் பெற்றவர்கள் ஒரு புறம். சீட்டு முறிந்து முடங்கி வருந்துபவர்கள் ஒருபுறம்.

* பிரெஞ்சு, ஆங்கில மொழிவாரியான பிரச்சினையும் இங்கே அரசியலில் முக்கிய அம்சமாக இருக்கிறது. பிரெஞ்சு பெரும்பாலும பேசப்படும கியூபெக் மாநிலம் பிரிந்து போவதைத் தவிர்க்க ஒரு ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது–

* பொதுவாக உழைக்கவும், படிக்கவும் சிறந்த இடம் கனடா! இலங்கையில் என்ன படித்திருந்தாலும இங்கு படித்துப் பெறும அத்தாட்சிப் பத்திரத்துக்கே முதலிடம். சாதாரன தொழிற்சாலை, அலுவலக வேலைகள் மணிக்கு இவ்வளவு டாலர் என்னும் வீதத்தில் சம்பளத்துடன் கூடியன!

வாராந்தம அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை சம்பளம் இடைக்கும். வேலைக்குப் போனால்தான் சம்பளம். சுகமில்லை என்று மருத்துவ லீவு பெற முடியாது–

* "அடித்தல்", "இறங்குதல்", "சுத்துமாத்து" இவை நம்மவரின் பாஷை! அடித்தல் – போன் செய்தல் இறங்குதல் வெளியே புறப்படுதல், சுத்துமாத்து – ஏமாற்று இத்தியாதி!

* பொது நூலகங்களில் தரமான பல நூல்கள் உள்ளன. மொன்ட்ரீயல் நகரத்தில் லசால் என்னும கிராமத்து நூலகத்திலே பகவான் சாயிபாபா பற்றிய புத்தகம் உண்டு.

[ம].

# சட்டம் என்பது இருட்டறை—அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு

தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே கதையின் கருத்தில்... உரையாடலின் அமைப்பில்... புரட்சிகரமான புதுமையான உத்திகளைக் கையாண்டு ஒரு பெரிய திருப்பத்தையே உண்டாக்கியவர்களில் முதன்மையானவர்தான் அறிஞர் அண்ணா!

நீதிமன்றக் காட்சிகள் திரைப்படங்களில் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு அறிஞர் அண்ணா கதை வசனமெழுதிய "வேலைக்காரி" படம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது!

திரைப்படங்களின் மூலம் அழகு தமிழை வளர்த்த பெருமை அண்ணா அவர்களையே சாரும்! அவர் அமைத்துத் தந்த பா(ணி)தையிலேதான் பலரும் வசனமெழுதி வெற்றி பெற்றார்கள் என்பது தமிழ்ப்பட உலகம் அறிந்ததே!

இதோ இம்முறை "திரையின் தீந்தமிழாக" அறிஞர் அண்ணா வசனமெழுதிய "வேலைக்காரி" திரைப்படத்திலிருந்து நீதிமன்றக் காட்சிகளின் ஒரு சில கட்டங்களை இங்கே தருகிறோம்...



அறிஞர் அண்ணா

★

(பப்ளிக் பிராசிக்கியூட்டர்) கொலை... பகிரங்கமாகச் செய்யப்பட்ட கொலை!

துணிவோடு சட்டத்தைத் துச்சமாக மதித்துச் செய்யப்பட்ட படுகொலை!

பக்திமான் வேடம் பூண்டு பாதகச் செயல் புரிந்தவன் இதோ இந்த மூர்த்தி!

மூர்த்திதான் கொலை செய்தான் என்பதற்குச் சாட்சி இருக்கிறது!

கொலை செய்ததை அவனே ஒப்புக் கொண்டிருக்கிறான்... அதற்கும் சாட்சி இருக்கிறது!

கொலை செய்த இடத்திலேயே மூர்த்தியைப் பிடித்துக் கொண்டார்கள்... இதற்கும் உண்டு சாட்சி!

(சாட்சி சுந்தரகோஷைக் குறுக்கு விசாரணை செய்கிறார் வடநாட்டு வக்கீலாக வரும் பரமானந்தன்) உமது பெயர்?

(சுந்) சுந்தரகோஷ்!

(பர) பூர்வாசிரமப் பெயர்?

(சுந்) சுந்தூர்... சுந்தரம்!

(பர) சுந்தரகோஷ்... குரு கொலை செய்யப்படுவதை நீர் பார்த்தீர்?

(சுந்) ஆம்!

(பர) கொலை செய்து கொண்டிருக்கும் போதே பார்த்தீர்?

(சுந்) ஆம் பார்த்தேன்!

(பர) ஆனால் அதைத் தடுக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை — ஏன்?

மூர்த்தி குருதேவரைத் தாக்குகிறான்... அதை நீர் பார்த்தீர்... அவன் மீது பாய்ந்து அவனை மடக்கிக் கீழே தள்ளிக் குருதேவரைக் காப்பாற்ற வேண்டுமென்று உமக்குத் தோன்றவில்லை — ஏன்?

குருதேவர் கொலை செய்யப்படும்போது பிரதம சீடர் பெண் போல் ஏன் பதுங்கிக் கொள்ள வேண்டும்?

சுந்தரகோஷ் குருவைக் காப்பாற்ற முயற்சிக்காமல் ஏன் அங்கிருந்து ஓட வேண்டும்?

பிரதம சீடரே! மீண்டும் கேட்கிறேன்... கொலையைக் கண்டு பயந்தீரா அல்லது அப்போது நீர் இருந்த நிலையைக் கண்டு பயந்தீரா?

சுந்தரகோஷ்... உன் சூது கோர்ட்டாருக்குத் தெரியாது! உன் கள்ளக் காதல் கோர்ட்டாருக்குத் தெரியாது! நீ நடித்த நாடகம் கோர்ட்டாருக்குத் தெரியாது!

இவர்கள் காணட்டும் குருவுடன் நீ இருக்கும் போது மூர்த்தி உன்னைக் கண்ட கோலத்தை... அவர்களும் காணட்டும்!



வக்கீல் பரமானந்தனாக கே ஆர் ராமசாமி

[அவன் அணிந்திருந்த தலைப்பாகையைத் தட்டி வீழ்த்தி அவனது கோலத்தைக் கலைக்கிறான் பரமானந்தன்— சுந்தரகோஷ் பெண்ணாகக் காட்சி தருகிறான்! எல்லோரும் பரபரப்படைகின்றனர்!]

(பரமானந்தன்) இந்தப் பரம பக்தினிதான் பாதி ராத்திரி வேளையிலே வேஷமிட்டு ஊரை ஏய்த்துக் ஹரிஹரதாசுடன் குலவிக் கொண்டிருப்பதைக் கண்டு விட்டான் மூர்த்தி!

குருவும் சீடனும் காமுகனும் கள்ளியும் என்பதைக் கண்டான்... அதன் விளைவுதான் இக்கொலை!

ஆசிரமத்தைக் கண்டோம்... கடவுள் அருளுக்கு வழி காட்டப்படும் இடம் என்று பாமரர் நம்பும் இடம் காமவேள் நடனசாலையாக இருக்கக் கண்டோம்!

இளித்த வாயர்களுக்கு பகலிலே உபதேசம்... இன்பவல்லிகளுக்கு இரவிலே சரசமாடல்!

குருடனுக்குக் கோல் தேவையாக இருப்பது போல் ஊரை ஏமாற்றிக் குடிகெடுப்பவனுக்கு வேஷம் தேவைப்படுகிறது!

வேஷமணியாத வேதாந்தி... மோடி செய்யாத மாது... ஜோடி இல்லாத மாடப்புறா... சேடி இல்லாத ராஜகுமாரி இருக்க முடியாதாம்!

ஹரிஹரதாஸ் இத்தகைய ஓர் வேஷதாரி! இந்த ஆசிரமத்திலே காதினிலே குண்டலம் ஆட... கனத்த சாரீரம் பாட... காய்ச்சிய பால் தொண்டையில் ஓட... கண்கள் கதியற்றக் கன்னியரை நாட... கடவுள் அருளுக்கு வழிகாட்டப்பட்டதாம்!

சிரித்திடும் சிறு நரி சிவ சொரூபத்தில் இருந்தது! ஓம் சாந்தி என்று உரத்த குரலில் கூவி வந்த அந்தக் குருவைக் காண ஒழுக்கம் கூசிற்று... தருமம் இவன் இருக்கும் திக்கைக் காண மறுத்தது!

ஹரிஹரதாஸ் கொல்லப்பட்டது உண்மை! அவனைக் கொன்றது மூர்த்தி என்பது மறுக்க முடியாத உண்மை! படுமோசக்காரனைக் கொல்வது பரோபகாரம் என்று ஏன் நாம் மதிக்கக் கூடாது — பாம்பைக் கொல்வது பாவமா?

(பப்ளிக் பிராசிக்கியூட்டர்) தர்ம சாஸ்திர விதிப்படி நாம் இங்கே விசாரணை நடக்க வரவில்லை! சட்டத்தின்படி கொண்டு வரப்பட்ட ஒரு கொலை வழக்கை விசாரணை நடத்துகிறோம்!

(பரமானந்தன்) சட்டம் தர்மத்துக்குக் கட்டுப்பட வேண்டாம் என்பது என் நண்பரின் வாதமோ? சட்டம் ஒரு இருட்டறை... அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது!

★

இவ்வசனக் காட்சிகளில் வக்கீல் பரமானந்தனாக நடித்து அறிஞர் அண்ணாவின் அழகு தமிழுக்கே உயிரூட்டியவர் கே ஆர் ராமசாமி — தமிழ் சினிமா வரலாற்றிலேயே ஒரு திருப்புமுனையாக அமைந்த இப்புரட்சிப் படம் (வேலைக்காரி) 1949 ஆம் ஆண்டு ஏ எஸ் ஏ சாமியின் டைரக்ஷனில் வெளிவந்த படமாகும்!

## திரையில் தீந்தமிழ்

## சினிமா சிரிப்பு

புதிய தமிழ் சினிமாப் படங்கள் தியேட்டர்களுக்கு வரமுதலே இலங்கையிலுள்ளவர்கள் பலர் அப்படங்களை விடியோவில் பார்த்து விடுகிறார்கள்!

"மனைவி ஒரு மந்திரி" படத்தில் எஸ் வி சேகர் ஆடொன்றை ஒருவருக்கு விற்கும்பொழுது "இந்த ஆடு இங்கிலீஷ் பேசும் ஆடு" என்று சொல்லி ஒருவரை ஏமாற்றும் கட்டத்தில்...

நாளின் சுமையை நகர்த்திடுவான் — பாலின்
படராடை போன்மணக்கும பொன்வாய் நகைப்பில்
இடராடை கட்டேன் இனி!

★

குஞ்சித் தளிர்ப்பாதங் கொண்டு மடியேறிப்
பிஞ்சுச் சிறுவிரலாற் பிய்த்திடுவான்! — கொஞ்சிச்
சிரிக்குங்கால் மெல்லச் சிறுநீரைப் பெய்து
நனைக்குங்கால் என்செய்வேன் நான்?

★

அடுக்களை வீடு அவன் நடை பாதை
முடுக்கிடும மோட்டாரின் ஓதை — "புடுப்புடு"
என்றுவாய்ச் சத்தம எழுப்பியே என்பேரன்
கொண்டுவாய் செய்வான் குறும்பு!

★

வீட்டுக்குள் ஓடி விளையாடும பேரன்; பூங்
காட்டுக்குட் பூத்த கவின்மலரோ? — நேற்றைக்குத்
தான்; பிறந்தான் போலிருக்கு! தண்மதியம
வான்பிறந்த
தேன் சுரந்தாற் போலத் தினம!

★

நேரஞ் சுமையில்லை நேத்திரத் தூங்கவில்லை
பேரன் இவன்பிறந்த பின்பென்பேன் — சாரம
மிகுந்தகவி சாற்றற்கும மிக்கோனாய் வந்து
உகுந்த கரு தந்தான் "துரை!"

# எரியாத மீன் பந்தம்

— க. வாசுகி —

"மீனுக்கு மீண்டும் நோய்!" என்ற செய்தி நாடாளுமன்றத்திற்குள்ளும் ஒலித்த போது ஓவென்று வாய்விட்டு அலறிய ஒரேயொரு மனிதர் பந்தக்காரப் பரமேஸ்வரர்தான்.

மீன்பந்தம் பிடித்துப் பிடித்து ஊருக்குள் உயர்ந்தவர் மாத்திரமல்ல, பிரபல்யம் அடைந்தவரும் இவரே!

வேலை மாற்றமா? பதவி உயர்வா? அல்லது பதவி கவிழ்ப்பா? நோய் பேயில் வெளிநாடு போக வேண்டுமா?, நோயில்லாமல் மெடிக்கல் சேட்பிக்கட்டா?, எதுவானாலும் மீனைக் கொடுத்து ஜமாய்த்து விடுவார்.

இவர், இவருக்காக மனைவிக்காக, பிள்ளைகள், மச்சான்மாருக்காக மாத்திரம் மீன் பந்தம் பிடித்தவரல்ல, ஊரிலுள்ள பலருக்குமாகவும் மீன் காவித் திரிந்து வெற்றி வாகை சூட்டியுள்ளார்.

இவர் தயவால் பல அரசாங்க ஊழியர்கள் வெளியூர் வாடை தெரியாமல் இன்றும் குண்டான்சட்டிக்குள் குதிரை ஓடுபவர்களாக சொந்த ஊரிலேயே கடமை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பரமேஸ்வரத்தார் ஆசிரியராக நியமனம் பெற்றது, சக ஆசிரியை ஒருத்தியைக் காதலித்தது கலியாணம் முடித்தது, இன்று "றிட்டயர்" ஆகும் வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் காலம் வரையும் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள பாடசாலையிலேயே படிப்பித்துக் கொண்டிருப்பது எல்லாமே மீன் செய்த கெட்டித்தனம் தான்!

மீனைப் பந்தம் கொடுத்து காரியங்களை இவர் கச்சிதமாக முடித்துக் கொடுத்தால் இவருக்கு சந்தோஷமும் கிடைக்கும். அதனால் இவர் பந்தம் பிடிப்பதை மீனுக்கு நோய் ஏற்படும் வரை முழுநேர வேலையாக மேற்கொண்டு வந்தார்.

ஐம்பது ரூபாய் பெறுமதியுள்ள மீனைக் கொடுத்தால் இவருக்கு ஐந்நூறு ஆயிரமென்று தேறும். இதைவிட போத்தல் கோழியென்று வேறு, இப்படியெல்லாம் சம்பாதித்த ஹாயாக வாழ்ந்த

ஊரிலுள்ள எம் பி மாரால்

ஸ்தம்பித்த நிலையை அடைந்து விட்டன.

"பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பது பழமொழி, மீனென்றால் மினிஸ்டரும் தோளில் கைபோடுவார்" என்பது பரமேஸ்வரத்தாரின் புதுமொழி!

இப்போது அப்புது மொழிக்கும் செல்வாக்கில்லாமல் இருந்ததை நினைக்க நினைக்க பரமேஸ்வரத்தாரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

"மீனவர்களுக்கு மாத்திரமா நட்டம்? மீனை வாங்கி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு மாத்திரமா நட்டம்? பரமேஸ்வரத்தாருக்குமல்லவா பாரிய நட்டமாகப் போய் விட்டது!" என்ற செய்தி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வந்து மேலும் அவரை அழ வைத்தது.



ளுக்கு சீதனக்காசு சேர்த்துவிடலாம்" என்று திட்டம் போட்டிருந்தவரின் தலையில் இடி விழுந்தது போலாகி விட்டது.

இவரது பரிதாப நிலையைப் பார்த்து மனம் உருகிய இவருடைய மனைவி மங்கம்மா பரிவோடு பார்த்துச் சொன்னாள்.

"உங்களைப் பார்த்தால் எனக்கே பாவமாக இருக்கிறது.

உங்களுடைய பந்தம் கொடுக்கும் தொழிலுக்கு ஆபத்து வந்து சூழ்ந்ததை நினைக்க நினைக்க நெஞ்சம் வெடிக்குமாப் போல இருக்கிறது.

அதனால் எனக்குத் தோன்றிய கருத்தை உங்களிடம் சொல்கிறேன். மீனுக்கு ஆண்டவன் கிருபையால் சுகம் வரவேண்டும். அதுவரை உங்கள் தொழிலும் நடக்க வேண்டும். ஆகவே மீன் சாப்பிட்டுப் பழகியவர்களுக்கு அதைவிட மனசு கேட்காது. ஆகையால் நீங்கள் இப்படிச் செய்யலாம்" இப்படிச் சொன்னதும் பரமேஸ்வரத்தார் "எப்படி?, எப்படி? என்று ஆவலோடு கேட்டார்.

"நீங்கள் வழக்கம்போல மீன் பந்தம் பிடிக்கச் செல்லும் ஐயாமார்களின் வீடுகளுக்குச் சென்று அவரவர் மனைவிமார்களிடம் ஒரு ஐடியாக் கொடுக்கலாம். அதாவது மீனெண்ணெய்க் குளிசைகளைப் போட்டு குழம்பு வைக்கலாம் என்றும் கீரை, போஞ்சி, கத்தரிக்காய் போன்ற வெள்ளைக் கறிகளில் மச்சம் மணக்க மீனெண்ணெய்க் குளிசைகளில் மூன்று நான்கை உடைத்துப் போடலாமென்றும் சொல்லிப்பாருங்கள்.

அப்படிச் சொன்னால் அவர்கள் மீன்களுக்கு சுகம்வரும் வரை உங்கள் வேலையை ஒழுங்காகச் செய்ய உதவி செய்வார்கள்".

"ஆஹா, ஆஹா நீயல்லவோ மனைவி! இப்போதே போகிறேன்.,

அந்தப் பையை எடுத்துவா! சின்னத்துரை வாத்தியின் வீட்டிற்கு முன்னாலிருக்கும் "மேர்குரி லைற்" போஸ்ரை பிடுங்கி நம்ம வீட்டிற்கு முன்னால் புதைக்க வேணும்!,

இவன் தாமோதரக்கிளாக்கன் புதுக் கலியாணக்காரன் பாவம் ஊரோடு கச்சேரிக்கு ஆளை மாற்றலாக்க வேண்டும். இவள் அற்புத ரீச்சர் தண்ணியில்லாத ஊருக்க மாத்தவேணும், பள்ளிக்குச் சேர்ந்து பத்து நாளாகல்ல அதுக்குள்ள லவ் வாம லவ்.

மெய்தான் எவ்வளவு நாள் இவர் சிங்கத்தார் மகனுக்கு ஒரு கிளாக்குவேல எடுத்துத்தர வேணுமெண்டு ரெண்டாயிரம் தந்தவர், மங்கம்மா மீனெண்ணெய்க் குளிசைகள் வீட்டில இருக்கா?" என்றபடி உற்சாகத்தோடு எழுந்தார் பரமேஸ்வரத்தார்.

"இங்கேது, கிடந்த குளிசைகளைப் போட்டுத்தானே மத்தியானம் ஒரு சுண்டல் சுண்டித் தந்தனான். போகும் போது கடைகள்ள பாத்து வாங்கித்துப் போங்க!

இப்படி மனைவி சொன்னதும் பரமேஸ்வரத்தார் பையைத் தூக்கிக் கொண்டு விரைந்தார்.

"மீன் கொடுத்து வேலை முடித்த என் கணவர் மீனெண்ணெய்க் குளிசை கொடுக்கப் போகிறாரே! என்று எண்ணியபடி மங்கம்மா அவரைப் பார்த்த போது அவளையுமறியாமல் அவள் விழிகள் மலர்ந்தன. (இ)

# பணம் செய்த மாற்றம்

— அ. சௌரிதாசன் —

வெளிநாட்டில் ஐந்தாண்டு இருந் துழைத்து,
    வெகுமதிகள் தாம்கொண்டு இலங்கை வந்தாள்
பழிகூறிப் பழித்தவர்கள் பக்கம் வந்தே
    பரிவோடு வரவேற்று உபசரித்தார்
களிப்போடு தலைஜிவிக் கட்டி விட்டார்
    காலடியில் தாமிருந்து கடமை செய்தார்
வழித்துணைக்குக் கூடஅவர் சென்று மீண்டார்
    வையகத்தில் பணம்செய்த மாற்றம் கண்டீர்!

★

ஆடைகளைத் தோய்த்துலர்த்தி அணிய வைத்தார்
    அனுதினமும் அவள் மகிழ்வில் திருப்தி கண்டார்
"பாடை"யுதன் நினைவின்றி அயல்வீட் டாரைப்
    பகைகொண்டார் தகைசெய்ய மறந்து விட்டார்
ஈடிணையே இல்லாத பணத்தர் என்னும்
    இறுமாப்பில் உலகோரை எண்ணா நின்றார்
வாடிக்கை மறந்ததுவும் தலைகீழ் ஆக்கி,
    வைத்ததெல்லாம் வேடிக்கை;பணத்தால் கண்டீர்!

★

இரவுபகல் எனும்பேதம் இல்லா வாறு,
    இன்னிசைகள் வானொலியில் ஒலிக்க விட்டார்
பிரச்சினைகள் அத்தனையும் தீர்த்து வைக்கும்
    பிரபுநிலை கொண்டவராய் தர்க்கம் செய்தார்
மரம்போல இரும்பாக இதயம் கொண்ட
    மனிதர்களின் நிலைகண்டேன் மனது நொந்தேன்
கரம்கட்டி வாழுதற்குச் சித்தம் இல்லாக் —
    கவிஞன்யான், பணம்செய்த மாற்றம் கண்டேன்!




# அன்பின் சின்னம் முத்தம்

முத்தம் — அன்பின் சின்னம்; காதலின் தொடக்கம்; உடல் உறவின் முதல் அனுபவம்.

முத்தமிடுவதும், முத்தம் பெறுதலும் வாழ்க்கையில் மறக்க முடியாத, நினைக்கும் போதெல்

கேந்திரம் அதை அலசி ஆராய்ந்து ஆழமாக முத்தத்திற்கு (உதடுகளுக்கு) உத்தரவிடுகிறது. அதே நேரத்தில் முத்தத்தின் சுவையை முழுமையாக உணர்ந்த "செய்தி" அனுப்புமாறு

மாக வரும்போது மற்ற வாகனங்கள் ஓரமாக ஒதுங்கி அதற்கு வழிவிடுவது போல முத்தத்தின் உணர்ச்சி உடல் முழுவதும் நரம்பு மூலம் பரவும் போது

துடிப்பை அதிகப்படுத்துகிறது.

வயிற்றில் அமிலம் சுரப்பது அதிகமாகிறது. இதனால் ரத்த அழுத்தம் உயர்ந்து மூளைக்கு செல்லும் ரத்தத்தின் வேகம் அதிகரித்த உடம்பு முழுவதும் இனம்

தனது ஜோடியை உணர முத்தமிட்டு, சுவைத்து உடம்பின் மணத்தை முகர்ந்து பார்த்திருக்கலாம் என்றும் கூறி இருக்கிறார்கள்.

முத்தம் பற்றிய ஆராய்ச்சி

மேற்கொண்டு வந்தார்.

ஐமபது ரூபாய் பெறுமதியுள்ள மீனைக் கொடுத்தால் இவருக்கு ஐந்நூறு ஆயிரமென்று தேறும். இதைவிட போத்தல் கோழியென்று வேறு, இப்படியெல்லாம சமபாதித்து ஹாயாக வாழ்ந்தவருக்கு மீனுக்கு நோயென்றால் அழுகை வராதா என்ன?

மீனுக்கு நோய் என்றதும, பல தாரப்பிரதேச ரான்ஸ்பர்கள், நோயில்லாமலேயே மெடிக்கல்பில் எடுக்கும கெட்டித்தனங்கள் எல்லாம குமல்லவா பாரிய நட்டமாகப் போய் விட்டது!" என்ற செய்தி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வந்து மேலும அவரை அழவைத்தது.

ஊரிலுள்ள எம பி மாரால் மாற்ற முடியாதிருந்த இடமாற்றங்களை ஓராமீனைக் கொடுத்தே மாற்றி விட்ட பெருமைக்குரியவர் இந்தப் பரமேஸ்வரத்தார்,

"றிட்டய"ரானதும தீவிரமாக மீன்பந்தம தொடுத்த மக

# வீட்டின் விடி விளக்கு

— சோமலிங்கம் —

தந்தத்தின் வண்ண மேனியினாள் எந்த
சந்தையும காணா கடி மார்பாள்
பந்துகள் தங்கும நெஞ்சாவாள் நான்
பழக அனுமதி நிதம தருவாள்
சொந்தப் படுத்தி துணையாவாள் அந்த
தோகைக்கு நான் தான் உயிராவேன்
கொத்தார் சூடி கொண்டையிலே உளம
கொண்டவனாகப் பேணிடுவாள்!

★

கொன்றை மலரின் நிறமானாள் நல்ல
கோங்கு மொட்டு கொங்கையினாள்
ஒன்றையும உலகத்தில் மதியாமல் எனை
உளத்தில் வரைந்து களித்திடுவாள்
மன்றத்தில் ஒரு மயிலாக என்
மனத்தில் ஆடும இள மஞ்ஞை
சென்றதை மறந்து நாளைக்கும அதை
செய்ய முனையும ஓவியமாம!

★

மேட்டுத் திசைக் கதிர் உடல் வண்ணம நிதம
மெல்லியல் மேனி காட்டி நிற்கும
பாட்டில் எழுத அணியாவாள் இங்கு
பாதையில் அணியாய்ப் போகாதாள்
வீட்டில் எனக்கொரு விடிவிளக்காய் மையல்
வேதனை தீர்க்க ஒளி தருவாள்
நாட்டின் நிலைமை அவள் அறியாள் இரு
நயனமும என்னை தினம அறியும!

# பக்தி பாசம் காதல் அதன் உள் அடங்கி விட்ட விந்தை



முத்தம — அன்பின் சின்னம; காதலின் தொடக்கம; உடல் உறவின் முதல் அனுபவம.

முத்தமிடுவதும, முத்தம பெறுதலும வாழ்க்கையில் மறக்க முடியாத, நினைக்கும போதெல்லாம உடல் புளகாங்கிதம அடைந்து இன்புற வைக்கும அனுபவம ஆகும.

அதிலும குறிப்பாக குழந்தையிடமும, காதலியிடமும கிடைக்கும எச்சில் பதிந்த முதல் முத்தம தரும சுகானுபவத்துக்கு ஈடு இணை எதுவுமே இல்லை.

பாரதி பாடலில் முத்தம பற்றி ஒரு வரி:

"கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளமதான் கள்வெறி கொள்ளுதடி"

கன்னத்தில் முத்தமிட்டதற்கே "கள்" குடித்த போதை ஏற்பட்டால் ஈருடல் ஒருடல் ஆகி காற்றுப்புகா இறுக்கத்தில் உதட்டோடு உதடு பொருத்தி முத்தமிடும போது ஏற்படும அனுபவம, இன்பம, மோகம.

முத்தம கொடுக்கப்படும இடம, கொடுக்கும நபர், பெறும நபர், வயது இவை எல்லாவற்றையும பொறுத்து முத்தமிடுதலில் கிடைக்கும இன்பம. அதனால் ஏற்படும உணர்ச்சியின் அனுபவம மாறுபடுகிறது.

இளம ஜோடிகள் உடலும மனமும இணைந்து தழுவி துடித்து உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடும போது உடலில் ஏற்படும இரசாயன மாற்றங்கள், உணர்ச்சி கேந்திரங்கள் தூண்டி விடப்படும நிலை ஆகியவை பற்றி மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஹெர்பர்ட் என்பவர் அழகாக விளக்கி இருக்கிறார்.

உதட்டோடு உதடு சேர்ந்து மாறுபட்ட சுவையை உதடு உணர்ந்ததும முதலில் பாதிக்கப் படுவது மூளைதான். புதிய மாறுபட்ட சுவையால் சுறுசுறுப்படையும, மூளையின் உணர்ச்சி கேந்திரம அதை அலசி ஆராய்ந்து ஆழமாக முத்தத்திற்கு (உதடுகளுக்கு) உத்தரவிடுகிறது. அதே நேரத்தில் முத்தத்தின் சுவையை முழுமையாக உணர்ந்த "செய்தி" அனுப்புமாறு நாக்கில் உள்ள உணர்ச்சி, சுவை நரமபுகளுக்கு "கொசுறு" உத்தரவும பிறப்பிக்கப்படுகிறது.

மூளையின் உத்தரவுப்படி உடல்கள் கட்டித் தழுவும. இறுக்கம அதிகமாகி உதடுகள் ஆழப்பதிந்த ஆழமான முத்தத்தின் சுவை, உணர்ச்சிகள் பெறப்படுகிறது. இந்த உணர்ச்சியை முதுகு தண்டுவடம மூலமாக உடல் முழுவதும உள்ள அனைத்து உணர்ச்சி நரமபுகளுக்கும உடனடியாக மூளை அனுப்புகிறது.

தீயணைக்கும வண்டி வேகமாக வருமபோது மற்ற வாகனங்கள் ஓரமாக ஒதுங்கி அதற்கு வழிவிடுவது போல முத்தத்தின் உணர்ச்சி உடல் முழுவதும நரமபு மூலம பரவும போது உடலின் மற்ற பகுதிகளில் இருந்து மூளைக்கு வரும செய்திகள் ஓரம கட்டப்படுகின்றன.

அந்த அளவுக்கு முத்தத்துக்கு மூளை முக்கியத்துவம கொடுக்கிறது.

இவை அனைத்தும விநாடி நேரத்துக்கும குறைவான காலப் பொழுதில் நடக்கிறது.

தண்டுவடம வழியாக முத்தம பற்றிய செய்தியை அறிந்ததும இடுப்பு பகுதியை சுற்றி உள்ள நரமபுகள் கிளர்ச்சி அடைகின்றன. உணர்ச்சி சுரப்பிகள் அதிவேகமாக சுரக்க ஆரமபிக்கிறது. இவை ரத்தத்தில் மின்னல் வேகத்தில் கலந்து இதயத் துடிப்பை அதிகப்படுத்துகிறது.

வயிற்றில் அமிலம சுரப்பது அதிகமாகிறது. இதனால் ரத்த அழுத்தம உயர்ந்து மூளைக்கு செல்லும ரத்தத்தின் வேகம அதிகரித்து உடமபு முழுவதும இனம புரியாத இன்ப அதிர்ச்சி அலைகள் பரவ... முத்தத்தின் சுகத்தை அனுபவிக்கிறோம.

இத்தகைய சுவாரசியமும, இன்ப சுவையும நிறைந்த முத்தத்தின் "பூர்வ ஜென்மம" பற்றி ஆதாரபூர்வமான தகவல் எதுவும கிடைக்கவில்லை. இருப்பினும மனிதன் சுவையை, ருசியை அறியத் தொடங்கிய காலத்தில் இருந்தே "முத்தம" தோன்றி இருக்கும என்று ஆராய்ச்சியாளர்கள் அறிந்துள்ளனர்—

ஆடுகள் தஙகளது ஜோடியை அறிய முகர்ந்து பார்ப்பது போல மனிதன் ஆரமப காலத்தில் தனது ஜோடியை உணர முத்தமிட்டு, சுவைத்து உடமபின் மணத்தை முகர்ந்து பார்த்திருக்கலாம என்றும கூறி இருக்கிறார்கள்.

முத்தம பற்றிய ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகையில், ஐரோப்பிய நாட்டு மக்களிடையே முத்தமிடுதல் மரியாதை மிகுந்த கலாசார பழக்கமாகவே இருந்து வந்திருக்கிறது. அவர்களின் மூதாதையர்களான டியூடன்ஸ், கிரேக்கோ ரோமானியர்கள், ஆகியோரும முத்தமிடுதலை கலாசார பழக்கமாகக் கொண்டிருந்தனர் என்கிறார்கள்.


மற்றொரு வேடிக்கை என்னவென்றால் 19ஆம நூற்றாண்டின் தொடக்கத்தில் சீன நாட்டினரும, ஜப்பானியரும முத்தம என்றால் என்ன என்றே தெரியாமலேயே இருந்திருக்கிறார்கள். முத்தமிடும பழக்கமே அவர்களிடம இல்லாமல் இருந்திருக்கிறது.

மேற்கத்திய நாடுகளின் கதைகளை சீன மொழியில் மொழி பெயர்த்த போது அதில் "முத்தம" என்ற சொல்லுக்கு சரியான சீன வார்த்தை மற்றும பொருள் தெரியாமல் சீன மொழி பெயர்ப்பாளர்கள் தடுமாறி உள்ளனர். மூக்கு மூலம கன்னத்தை உரசுதல் என மொழி பெயர்த்தனர்.


இவர்களுக்கெல்லாம ஒருபடி மேலே ஜப்பானியர்கள் சென்று இருந்தனர். "முத்தம" என்பதற்கு அவர்களது அகராதியிலேயே வார்த்தை இல்லை. தாய் குழந்தைக்கு கன்னத்தில் கொடுக்கும "இச்"தான் முத்தம என்று கருதினார்கள். இது தவிர மற்ற வயதினரிடையே இந்த "இச்"சிடும பழக்கமகூட இல்லாமல் இருந்தது.

மலேஷியா மற்றும தெற்கு கடற்கரை தீவுப் பகுதிகளில் முகத்தோடு முகம சேர்த்து உரசிக் கொள்வதை "முத்தம"

[19ஆம பக்கம பார்க்க]



...... நாயகன் கையைத் தொட்டதுமே நாயகிக்கு நாணம் வந்து விட்டதே. இன்னும் கொஞ்சம் முன்னேறினால் எப்படி இருக்கும்? (முரளி – சிந்து)
[படம்: சாமி போட்ட முடிச்சு) (இ-10)



...... விட போதை த...க்கூடியது மாது. அந்த மாதுவே மதுவை ஊற்றிக் கொடுக்கிறாள் என்றால் ஏதோ ஏமாற்றப் போகிறாள் போலல்லவா தெரிகிறது–
[மலேஷிய வாசுதேவன் – ஜெயமாலினி]
[படம்: "ஆளை பார்த்து மாலை மாத்து"] (இ-10)

# கறுப்பாக இருப்பது முரளிக்கு அதிர்ஷ்டம்

இயக்குநர் கே பாலச்சந்தரின் நிறுவனமான கவிதாலயா மூலம் "பூ விலங்கு" படத்தில் புது இயக்குநர் அமீர்ஜானையும், நடிகர் முரளியையும் கே பி அறிமுகம் செய்து வைத்தார். ராசியான தயாரிப்பாளர் என்ற பெயரை பெற்றுவிட்ட பாலச்சந்தர் முரளியை தேர்வு செய்ததற்குக் காரணமே அவர் ஒரு மின்னும் கறுப்பு நிற நடிகர் என்பது தான்.

'ரஜனிகாந்த், விஜயகாந்த் போல நீங்களும் சற்று கறுப்பு நிற மேனியுடன் இருப்பதால் தான் நடிப்பு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா என்று நிருபர் கேட்டவுடன் சிரித்தபடியே முரளி சொன்னார்–

சிவப்பு நிற மேனி பெண்களுக்கு, நடிகைகளுக்கு இருப்பது அவசியம். என்னைப் போன்ற ஹீரோ நடிகர்களுக்கு கறுப்பு ஒரு அதிஷ்டம் தான். நான் கறுப்பாக தரு தரு என்று இருக்கவே இன்னொரு குட்டி ரஜனி என்று பாலச்சந்தர் சார் என்னை தன் படங்களில் நடிக்கக் கூப்பிட்டிருக்கிறார். விஜயகாந்தைப் பார்த்து விட்டு என்னைப் பார்க்கும் சிலர் என்னை அவர் தம்பியா என்று கூடக் கேட்டிருக்கிறார்கள். எனக்கு அவர் தம்பியாக ஒரு படத்திலாவது நடிக்க ஆசை உண்டு.

பொதுவாக நடிப்பு நிறத்தில் இல்லை என்பது என் எண்ணம். கறுப்பு நிற நடிகர்களை ஆக்ஷன் ஹீரோவாக்கி விடுகிறார்கள் அது தான் எனக்கு புரியவில்லை எவ்வளவு பெண் ரசிகைகள் கறுப்பு நிற நடிகர்களுக்கு (நான் உட்படத்தான்) இருக்கிறார்கள் தெரியுமா? கறுப்பு நிறமாக இருப்பது எனக்கு ஒரு குறை என்ற எண்ணம் தோன்றியதே இல்லை. கறுப்பு அழகு இல்லையா?" என்று சொல்லிவிட்டு "பளீர்" என்று சிரித்தார்.

"தமிழ்ப் பட உலகில் உங்களுக்கு நிரந்தரமான இடம் கிடைத்துவிட்டதாக கருதுகிறீர்களா?" என்றபோது இதுவரை சுமார் முப்பது படங்களில் நடித்து முடித்து இருக்கிறேன். என் சொந்த மொழியான கன்னடத்தில் நான் சுமார் 15 படங்கள்தான் நடித்திருக்கிறேன். நான் நடித்த இந்தத் தமிழ்ப் புத்தாண்டுக்கு வரும் படங்களுக்கு பிறகு இனி வரப்போகும் ஒவ்வொரு படமும் வித்தியாசமாக அமையும் என்று நம்புகிறேன் கைவசம் 10 படங்கள் வைத்திருக்கிறேன்! இங்கு நிரந்தர இடம் கிடைத்து விட்டது என்பதற்கு இது ஒரு அளவுகோலாக எடுத்துக் கொண்டால் அது எனக்கு கிடைத்து விட்டது. என்று எடுத்துக் கொள்ளலாமே!" என்று கூறிப்பிட்டார் முரளி.

பேசும்போது அடிக்கடி மீசையை கை விரல்களால் குறும்புத்தனமாக கிள்ளியபடி இருந்தார் அவர். "இந்த மீசை இல்லாமல் நடிக்கச் சொன்னால் நடிப்பீர்களா?" என்று கேட்டபோது,

"மீசை இல்லாமலா? ஊம்ம்..." என்று கூறிய முரளி சிறிது நேரம் யோசித்துவிட்டு "கமலுக்கு அமைந்ததுபோல அருமையான வேடம் கிடைக்குமானால் அது பற்றி யோசிப்பேன்" என்றார்.

"என் மனைவியிடம் கொள்ளை வைத்திருப்பதால் வேறு எந்த ...... நடிகையையும் "அந்த மாதிரி நோக்கத்துடன் பார்ப்பது கூட இல்லை. அதனால் கிசு கிசு அது இது என்று எதுவும் என்னைப் பற்றி வராது" என்று உத்தரவாதம் தந்தார் முரளி.

[ம-10]



ஆடிக்காட்டி ஆட்-வர்களை மயக்கும் டிஸ்கோ சாந்தி ஆடையைக் கழற்றி மயக்கப் போகிறாரோ? அல்லது மயங்கி விட்டாரோ? [படம்: "101 ராவுகள்"]

## எம். ஜி. ஆரின் வாழ்க்கை திரைப்படச் சித்திரம்

ஆப்பிள் கிரியேசன்ஸ் பட நிறுவனம் "நமது தெய்வம்" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறது– மறைந்த எம ஜி ஆரின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களை பின்னணியாகக் கொண்டும் அவரது தாய்ப் பாசம் – குழந்தைகள் நேசம் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையிலும் படக் கதை அமைக்கப்பட்டுள்ளது–

"நமது தெய்வம்" படத்தின் வசனத்தை கவிஞர் முத்துலிங்கம் எழுதுகிறார்–

டி நாராயணன் தயாரிக்கும் இதன் கதையை எழுதி காசி அரசு இயக்குகிறார்– இவர் பல இயக்குநர்களுடன் இணைந்து ஏற்கனவே பணியாற்றியவர்–

மனோரமா முக்கிய வேடத்தில் நடிக்கிறார்– மோகன்முத்து இதன் மூலம் புதிய நகைச்சுவை நடிகராக அறிமுகமாகிறார்– குட்டி நடிகை ஸ்ரீதேவியும் குழந்தைகளும் நடிக்கிறார்கள்–

(ம—10)

## "ஏழு ஸ்வரங்கள்"

"பூந்தென்றலில் ஒரு தேர் வந்தது, மேகங்கள் மலர் தூவி வாவென்றது..." என்று தொடங்... பாடினார்–

கஜேந்திரகுமார் வசனம் எழுத ஜி பி கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்ய கே ராஜ்கமல் இயக்கும் "ஏழு ஸ்வரங்கள்"

## கவுண்டமணி – செந்தில் கதா காலட் சேபம்

மருத்துவக் கல்லூரி ஆண்டு விழா மாணவர்கள் நடத்திய கலை நிகழ்ச்சிக்கு மாணவர்களே ......

அர்ஜுன் கனகா இணைந்து நடிக்கும் கே பிரபாகரன் வழங்கும் ஜூபிலி ஆர்ட்ஸ் "பெரிய ......

போகிறாள் போலல்லவா தெரிகிறது—
[மலேஷிய வாசுதேவன் — ஜெயமாலினி]
[படம்: "ஆளை பார்த்து மாலை மாத்து"] (இ-10)

பேரான்றவற்றை வெளிப்படுத்தும் வகையிலும் படக் கதை அமைக்கப்பட்டுள்ளது—

எம் ஜி ஆர் நடித்த சில முக்கியமான படங்களில் நல்ல கருத்துக்களை வலியுறுத்தும் காட்சிகளின் தொகுப்புகளும் படத்தில் இடம்பெறுகின்றன— "நமது

"பூந்தென்றலில் ஒரு தேர் வந்தது, மேகங்கள் மலர் தூவி வாவென்றது..." என்று தொடங்கும் பாடல் ஒன்று சாந்திபிலிம்ஸ் "ஏழு ஸ்வரங்கள்" படத்திற்காக ஏவி எம் மில் ஒலிப்பதிவானது— தேவா இசையில் எஸ் பி பாலசுப்பிரமணியம் இதைப்

கஜேந்திரகுமார் வசனம் எழுத ஜி பி கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்ய கே ராஜ்கமல் இயக்கும் "ஏழு ஸ்வரங்கள்" படத்தில் முன்னணி நட்சத்திரங்களுடன் விஜயகுமாரி, கல்யாணி ரவிச்சந்திரன், விஜயகுமார் திலீப் கவுண்டமணி, செந்தில் ஆகியோரும் நடிக்கிறார்கள்— (ம—10)

மருத்துவக் கல்லூரி ஆண்டு விழா மாணவர்கள் நடத்திய கலை நிகழ்ச்சிக்கு மாணவர்களே எதிர்ப்பு... கரகரத்த குரலிலே கவுண்டமணியும் செந்திலும் கதாகாலட்சேபம் நடத்த மாணவர்களின் ஆரவாரக் குரல்...

எந்தக் கல்லூரியில் இந்த விழா என்று கேட்டு விடாதீர்கள்

அர்ஜுன் கனகா இணைந்து நடிக்கும் கே பிரபாகரன் வழங்கும் ஜூபிலி ஆர்ட்ஸ் "பெரிய இடத்துப் பிள்ளை" படத்தில் இடம்பெறும் ஒரு காட்சி இது—

எம் கேசவன் ஒளிப்பதிவு செய்ய சந்திரபோஸ் இசை அமைக்க செந்தில்நாதன் டைரக்‌ஷனில் படம் வளர்ந்து வருகிறது— (ம—10)

# 10 ஆயிரம் மாடுகள்

## அலறித் துடித்திட

# பயங்கரச் சண்டை

குமார் மூவிஸ் தயாரித்துவரும் "ஒரு புதிய கதை" கர்நாடக மாநிலத்தில் உள்ள தலைக்காடு முடுக்குத்துறை ஆகிய பகுதிகளிலும் மைசூரை சுற்றியுள்ள பகுதிகளிலும் வேகமாக வளர்ந்து வருகிறது.

இந்தப் படத்துக்காக தொல்லகால அருகில் உள்ள "மத்தூர்" என்ற இடத்தில் நடைபெற்ற மாட்டு சந்தையில் சண்டைக் காட்சி படமாக்கப்பட்டது.

மத்தூர் மாட்டுச் சந்தை அந்தப் பகுதியில் புகழ் பெற்றது. 10 ஆயிரம் மாடுகளுக்கு மத்தியில் வில்லன் பவானியை கதாநாயகன் பிரபுராஜ் துரத்திச் சென்று மோதும் சண்டைக் காட்சி அங்கு படமானது—


ஒளிப்பதிவாளர் ராஜா என்ற கிச்சாஸ் வேகமாக செல்லும் வேனில் நின்றபடி அந்தக் காட்சியை படமாக்கினார்.

உமா கண்ணதாசன் எழுதி இசை அமைத்த "மலரோ மலர்தான்" எனத் தொடங்கும் பாடல் காட்சி தலைக்காடு பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் காவிரி நதிக் கரையில் படமாக்கப்பட்டது— கதாநாயகி மீனா பத்துக்கும் மேற்பட்ட நடன அழகிகளுடன் ஆடிப் பாடினார்.

இந்தப் பாடல் காட்சி 100 அடி உயரமுள்ள மலைக் குன்றின் மீது கிரேன் அமைத்து வித்தியாசமான கோணத்தில் படமாக்கப்பட்டது.

பி எம் ராஜாராம் கதை, திரைக்கதை, வசனம், தயாரிப்பில் உருவாகும் இந்தப் படத்தை ஆர் பாலசுப்பையா டைரக்ட் செய்கிறார்.

புதுமுகங்கள் பிரபுராஜ்—மீனா ஜோடியுடன் செந்தில், தியாகு, சிவராமன், மகேஷ்குரி, ராஜலட்சுமி, மகேஸ்வரி, கோகிலா ஆகியோரும் நடிக்கிறார்கள். [ம-10]



இரக்கம் கொண்ட ஜோடிக்கு உறக்கம் வந்து விட்டதோ?
[பிரபு — குஷ்பு] [படம்: "மைடியர் மார்த்தாண்டன்"]

# கோடம்பாக்கம் டயரி

ரஞ்சனிக்கும், இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் இடையே காதல் மலர்ந்து இருக்கிறது. காதலர் ரஞ்சனியின் தீவிர ரசிகர். இலங்கைக்கும், லண்டனுக்கும் இடையே பறந்து வியாபாரம் செய்து வருகிறார். இவர்கள் திருமணம் டிசம்பரில் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

★

சினிமாவில் அனைத்து தரப்பினர் மத்தியிலும் "நல்ல பெயர்" வாங்கிய கனகா சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்திடமும் "நல்ல பெயர்" வாங்கி இருக்கிறார். "அதிசயப் பிறவி" என்ற படத்தில் ரஜனிகாந்த் — கனகா ஜோடியாக நடிக்கிறார்கள். ஸ்டூடியோவில் தினமும் ரஜனிகாந்த் முன் கூட்டியே வந்து மேக்கப் போட்டு ஒரு மணி நேரம் காத்திருந்த பிறகுதான் கனகா வருகிறார்;

★

குயிலி தனது பம்பாய் கணவர் ஷெட்டியுடன் தனிக் குடித்தனம் நடத்துகிறார். இருவரும் சேர்ந்து பம்பாயில் ஒரு பங்களா வாங்கி இருக்கிறார்கள். இரண்டாவது ஞாயிற்றுக் கிழமைகளில் இருவரும் அங்கே சந்தித்துக் கொள்கிறார்கள்.

★

சரிதா தனது கணவர் முகேசை எப்படியாவது தமிழ்ப் பட உலகில் நுழைத்து பிரபலமாக்கி விடுவது என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். ராதாவுக்கு ஜோடியாக நடித்தால் கணவர் பிஸி ஆகிவிடுவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் நடக்கவில்லை. [ம—10]



புது முகங்கள் இணைந்து விட்டால் "ஒரு புதிய கதை" உருவாகி விடும். இதுதான் அதன் ஆரம்பமோ? [பிரபு - ராஜி - மீனா] (இ-10)

# அமலா வகுத்துள்ள இரகசிய திட்டங்கள்!

அமலா மிக விரைவில் தமிழ்ப் படங்களுக்கு "டாட்டா" காட்டி விட்டுப் போய்விடுவாரோ என்ற நிலை

ஷிவா என்ற தெலுங்குப் படம் (தமிழில் உதயம்) பிரமாதமாக ஓடிய பிறகு நடிகர் நாகார்ஜுனாவுடன் நாலு படங்களில் அமலா மிக நெருக்கமாக இதுவரை எந்த மொழிப் படத்திலும் எவருடனும் நடித்திராத அளவுக்கு ஒட்டி, உரசி, கொஞ்சிக் குலாவி நடித்திருக்கிறார்.

நீங்கள் நாகார்ஜுனுடன் ரகசியமாக ஒரு வீட்டில் தங்கி இருக்கிறீர்களாமே? நாகார்ஜுனா மனைவி லட்சுமியை அவர் விவாகரத்து செய்துவிடும்படி கூறிவிட்டு அவரை மணக்கப் போகிறீர்களாமே உண்மைதானா? உங்கள் ரகசியத் திட்டம் நாகார்ஜுனாவுடன் குடும்பம் நடத்த நடிப்பு தொழிலுக்கு முழுக்குப் போடுவதுதானா? என்று நிருபர் கேட்டார்.

இப்படி அமலாவிடம் கேட்கப்பட்டவுடன் அவருக்கு எடிக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. "இதோ என் ஹோட்டல் ரூம் சாவி. நான் அங்கேதான் தங்கி இருக்கிறேனா வேறு தனி வீட்டில் இருக்கிறேனா என்பதை கேட்டுப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள் என்று சிடுசிடுத்து இருக்கிறார். படப்பிடிப்பில் இருந்த நாகார்ஜுனாவிடமே போய் எங்கள் காதல், கல்யாணம் எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளுங்கள் என்றும் சொன்னார்.

நாகார்ஜுனாவிடம் இது பற்றி கேட்டபோது நழுவுகிற தண்ணீரில் நழுவுகிற மீனாக அவர் சொல்லிய பதில் இது.

"என்னுடைய மனைவி லட்சுமி இப்போது சிக்காகோவில் "கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்" என்ற மேல் படிப்பு படித்துக் கொண்டு இருக்கிறாள். அவள் என்னை நன்கு புரிந்து கொண்டுள்ள நல்ல பெண்மணி. அவளுக்கு என்னைப் பற்றி பேசப்படும் வதந்திகள் மீது நம்பிக்கை ஏற்படாது என்பது உறுதி.

ஆனால் படத்தில் நடிக்கின்ற நடிகர்-நடிகையர் ஏதாவது சில சமயங்களில் உண்மைக் காதலிலும் இறங்கிவிடுவது உண்டு என்றார்.

அமலா - நாகார்ஜுன் இருவருமே தங்கள் காதல், கல்யாணம் இரண்டையுமே ஒப்புக் கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. இது படவுலக வழக்கம்தான். இவர்கள் இருவருக்கும் நாகார்ஜுனாவின் பெற்றோர்கள் எதிர்ப்பு, மனைவி லட்சுமியின் எதிர்காலம் போன்றவை இப்போது கேள்விக்குறியாக இருக்கிறது என்கிறார்கள்.

ஜூன், ஜூலை மாதவாக்கில் நாகார்ஜுனாவுடன் அமலா திருமணம், படங்களுக்கு அடியோடு முழுக்கு போன்றவை உண்மைதானா என்ற சஸ்பென்ஸ் நிச்சயம் இன்னும் ஓரிரு வாரங்களில் தெரிந்துவிடும்.

பல நண்பர்கள், பட உலக பிரமுகர்கள் கூட நான் ஒரு நடிகரை காதலிப்பதாக நினைக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒன்றை சொல்ல நான் விரும்புகிறேன். காதல் என்பதும், கல்யாணம் என்பதும் ஒருவரின் தனிப்பட்ட விஷயம் என்கிறார் அமலா.

ஏதோ காரணங்களுக்காக தன் காதல் கல்யாணம், தன்னுடைய "அவர்" பற்றி எல்லாம் இப்போது அமலா சொல்லிவிட்டாலும், இந்த வருடம் தீபாவளி அவருக்கு தலைத் தீபாவளியாக அமையப் போவது உறுதி.

[ம-10]



# இயக்குனர் வேடம்

## தாங்கும் கங்கைஅமரன்

பாக்லா ஆர்ட் மூவீஸ் என்னும் நிறுவனம் "வானவில்" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது- இந்த படத்தில் ஏராளமான இசைக் கலைஞர்களுடன் இசை அமைக்கிறார் இளையராஜா-

கங்கைஅமரன் இரு பாடல்கள் எழுதுவதுடன் திரைப்பட இயக்குனராகவும் இந்தப் படத்தில் நடிக்கிறார்-

ரகுமானுடன்


சித்தாரா

ஆனந்தக் கூத்து

துடிப்பு மிகுந்த ஒரு பட்டதாரி கிராமத்து இளைஞனின் கலை உலக கனவுகளை வடித்துக் காட்டும் இந்தப் படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார் பாலு ராஜன்-

கிராமத்து இளைஞரான புது நடிகர் ராஜரிஷி நடிப்பதுடன் 3 பாடல்களும் எழுதுகிறார்-

சித்தாராவும் ரகுமானும் அன்பால் இணைந்த இளம் காதல் ஜோடி- சித்திரை நிலவொளியில் புதிய சொர்க்கம்





குடும்பத்தில் குதூகலம் மட்டுமல்ல குழப்பங்களும் உண்டு என்பதை "வேடிக்கை என் வாடிக்கை"யில் இடம் பெறும் இக்காட்சி எடுத்துக் காட்டுகிறதோ?
(எஸ் வி சேகர் விசு மனோரமா திவ்யா) (இ-10)

சித்தாராவும் ரகுமானும் அன்பால் இணைந்த இளம் காதல் ஜோடி- சித்திரை நில வொளியில் புதிய சொர்க்கம் படைத்து மகிழும் வானம்பாடிகள் "சுதா சுதா உன்னோட வா"-

இருவரும் இப்படி பாடி ஆடும் ஆனந்தக்கூத்து, கே ஆர் ஜி மூவீஸ் இன்டர்நேஷனல் "மனைவி வந்த நேரம்" படத்தில் இடம்பெறுகிறது-

பாபு ஒளிப்பதிவு செய்ய சந்திர போஸ் இசை அமைக்க காரைக்குடி நாராயணன் கதை வசனம் எழுதி இயக்கும் படம்-

(ம—10)

கிராமத்து இளைஞரான புது நடிகர் ராஜரிஷி நடிப்பதுடன் 3 பாடல்களும் எழுதுகிறார்-

சபாபதி ஒளிப்பதிவை கவனிக்க அம்சராஜ் தயாரிப்பு நிர்வாக பொறுப்பு ஏற்க பி பி ரமேஷ், நெல்லை மோகன், யஹாஸ் ஆகியோர் இணைந்து தயாரிக்கும் படம் "வானவில்"-

(ம—10)



ஆசை நாயகனுக்கு காதல் தூது விட கனகாவுக்கு நாய் தான் கிடைத்ததோ? [படம்: "துர்கா"] (இ-10)

# இந்திப் பட உலகத்தை கலக்கினார் தமிழ் நடிகை

இந்தியில் பிரபலமான நடிகைகளில் பெரும்பாலோர் தென்னிந்தியர்களே! மாலா, பத்மினி, ஹேமமாலினி, ரேகா, ஜெயப்பிரதா, ஸ்ரீதேவி என்று அகில இந்தியாவின் கனவுக் கன்னிகளாக திகழ்ந்தவர்கள், திகழ்பவர்கள் தென்னிந்தியப் பெண்கள்தான். இப்போது அந்த வரிசையில் புதிதாக சேர்ந்திருக்கிறார் புதுமுகம் பாக்யஸ்ரீ.

பாக்யஸ்ரீ தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். முதன் முதலாக இவர் நடித்ததே இந்திப் படத்தில்தான். அப் படத்தின் பெயர் "மைனே ப்யார் கியா" என்பது. இதன் கதாநாயகன் சல்மான் கான். இவரும் புதுமுகமே. இவருக்கும் இது தான் முதல் படம்.


முற்றிலும் புதுமுகங்களையே வைத்து புதுமுகமான சூரஜ் என்ற இளைஞர் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்த காதல் கதை இது.

மாபெரும் நட்சத்திரங்கள் நடித்த சூப்பர் படங்களை எல்லாம் தூக்கிச் சாப்பிட்டு ஏப்ப மிட்டு திரையிட்ட 205 தியேட்டர்களிலும் வெள்ளி விழாவைத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு வருடம் ஓடும் என்கிறார்கள். இதன் வெற்றி மாபெரும் சாதனை.

தமிழ் நடிகை கதாநாயகியாக நடித்த இந்திப் படம் சக்கை போடு போடுவதில் சந்தோஷம்தான். இந்தப் படம் தமிழுக்கும் வருகிறது. தமிழில் இதன் பெயர் "காதல் ஒரு கவிதை-"

படத்தில் டீன் ஏஜ் பெண்ணாக நடித்துள்ள அவருக்கு வயது 20. இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த காலத்திலேயே ஹிமாலேதாசனி என்ற தனது காதலனைக் கல்யாணமே செய்து கொண்டார். ஒரு படத்தோடு சினிமாவுக்கு முழுக்குப் போட்டு விட்டு "அபிமன்யு" என்ற மகனுக்குத் தாயாகி குடியும், குடித்தனமுமாக ஒதுங்கிவிட்ட பாக்யஸ்ரீயை எப்படியும் நடிக்க வைத்துவிடுவது என்று பணக் கத்தைகளோடு பட அதிபர்கள் படை எடுத்த போது "சினிமாவுக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஒத்துவராது" என்று கூறி நழுவி விட்டார்.

[ம-10]



அள்ளி அணைத்தும் அவசரப்படுவது சரியா? பாக்யராஜ், சில்க் சுமிதாவுக்கு ஆறுதலாக தரப் போகிறாரோ?
[படம்: அவசர போலீஸ் 100"] (இ-10)

## உஷ்... இது ரகசியம்

ரோஹிணமான நடிகை படப்பிடிப்புக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு அடிக்கடி "திடீர்" என்று பம்பாய் பறந்து விடுகிறாராம். அப்படி அங்கே அவசர மிக முக்கிய வேலைதான் என்ன? உறவுக்காரர்களை சந்தித்து குசலம் விசாரிக்கத்தானாம்! அங்கே குசலம்! இங்கே டிமிக்கி கொடுப்பதால் பட அதிபருக்கு சங்கடம்!] பல ஆயிரம் நஷ்டம்.

★

காவலன் எடுக்க வந்த செந்தூர் வேலனுக்கும் கரகாட்டக்காரன் சாதனை நாயகனுக்கும் அப்படி என்ன பிணக்கு "அவர் தொடக்கத்தில் ஒப்புக் கொண்டதை விட ஊதிய ரேட்டை பல மடங்கு உயர்த்திவிட்டார். என்ன செய்வது? என்று வருத்தப்படுகிறார்- பட தயாரிப்பாளர் இருவர் இடையே சமரசம் ஏற்படட்டும். காவலன் வெற்றி பவனி வரட்டும்.

★

செவ்வாழை பழம் போன்ற நகைச்சுவை சரளத்தின் தங்கையும் சினிமாவில் நடிக்கப் போகிறாராம். "திறமை இருந்தால் தாராளமாக நடிக்கலாம். சிபாரிசு மட்டும் செய்ய மாட்டேன்!" என்று அக்காள் சரளம் கூறிவிட்டாராம்! அக்காள் தயவு இல்லாமல் தங்கை நடிகை ஆக முடியுமா?

[ம—10]

# பரிசோதனை



—பாராதாஹிர்—

ஒரு மாதகாலமாக ரிபாயைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்காத தால் மனதுக்குள் வருத்தமாக இருந்தது– "இன்று எப்படியும் அவரை சந்தித்தாக வேண்டும்" என்ற ஆதங்கத்தில் காலை பதி னொரு மணியளவில் அவருடைய நகைக் கடைக்குச் சென்றடைந் தேன்.

ஒரு மாத இடைவெளிக்குப் பின்னர் என்னைக் கண்ட ரிபாய் க்கு மகிழ்ச்சி தாளமுடியவில்லை. என்பதை அவரது முகபாவனை படம்பிடித்துக் காட்டிக் கொண்டி ருந்தது–

அவர் என்னை அன்புடன் வர வேற்று அமரச் செய்து விட்டு, நகை வாங்க வந்த சில வாடிக் கையாளருடன் உரையாடிக் கொண்டிருந்தார்–

கண்டியிலே பிரபல்யமாக விளங்கும் அந்த நகைக் கடைக்கு பல வாடிக்கையாளர்கள் சமூக மளித்துக் கொண்டே இருந்தனர்–

ரிபாயும் சக ஊழியர்களும நகைகளை விற்பனை செய்யும பணியில் தீவிரமாகவே ஈடுபட் டுக் கொண்டிருந்தார்கள்.

வேலை பார்க்கும அமீர், வாடிக்கையாளர் கேட்கும நகை களைக் காண்பிக்க எத்தனிக்கும்

ரிபாய் அமீருக்கு "பளார்" என்று அறைந்த விட்டார். இதனை சற் றும எதிர்பாராத அமீர் தடுமாற் றத்துடன் தலை குனிந்தான்.

எனக்கோ அடிபட்டவனை பார்க்க மிகுந்த பரிதாபமாக இரு ந்தது– வந்திருந்த வாடிக்கையா ளர்களும அமீரை அனுதாபத்து டன் பார்த்தனர்–

ஏற்கனவே அமீரைப் பற்றிய தகவல்களை ரிபாய் என்னிடம கூறிவைத்திருந்தார். அவனை கல்விப் பொதுத்தராதர சாதா ரணதரத்தில் திறமையாக சித்தி யடைந்துவிட்டு, மேற்படிப்பை தொடர முடியாமல் வேலைக்கு சேர்த்தானாம.

**சின்னஞ் சிறுகதை**

குடும்பத்தில் ஆண்களுள் அவன் ஒருவன் மட்டுமாம். அவ னது தந்தை "ஹாட்எட்டக்" வந்து மௌத்தாப் போய் விட் டாராம.

திருமண வயதை எட்டிவிட்ட

நமபிக்கையானவன் என்றும் அமீ ரைப் பற்றி ரிபாய் என்னிடம போற்றிப் புகழ்ந்த சந்தர்ப்பங் கள் பல.

இப்படியிருந்தும் "அரைந் தானே" எனும போது வியப் பாகவே இருந்தது. "உள்ளோ ன்று வைத்து புறமொன்று செய்து விட்டானே பாவி.

அமீர் ஏழையாக இருந்தாலும் அவனுக்கென்று தன்மானம இல் லையா? முதலாளி என்ற தெம் பில நாலு பேருக்கு மத்தியில் அறைந்து விட்டாரே" என்று என் உள்ளம கொதித்தது.

அவ்விடத்தில் நிகழ்ந்த சமபவ த்தோடு ரிபாய் மீது எனக்கிருந்த அன்பு, பாசம எல்லாம் நொடிப் பொழுதில் மறைந்து அமீர் மீது வெறுப்பாகவே இருந்தது–

உடனே இருக்கையை விட்டு எழுந்தேன். வந்தவழியைப் பார் த்து சென்றுவிட கால்கள் எத்த னித்தன. இருந்தாலும ஓரிரு வார்த்தைகளை ரிபாயிடம் கதைத்து விட்டுச் செல்லலாம என எண்ணங்கள் மோத அவர் பக் கத்தில் சென்றேன்.

"என்ன ரிபாய் என்ன இருந் தாலும நீங்கள் இப்படி நடந்தி ருக்கக் கூடாது– நீங்கள் முதலா ளியாக இருக்கலாம் அதற்காக தொழிலாளிகளை

போல ஒரு மனிதன்தானே நீங்கள் களே ஒரு நாள் அவனைப் பற்றி என்னிடம புகழ்ந்து விட்டு, தவறு தலாக அவனால் இழைக்கப பட்ட செயலுக்காக இப்படி அறைந்து விட்டீர்களே.

உங்களுடைய சுயரூபம் இதிலே பிரதிபலிக்கிறது– பணம இருக்கிறது என்ற தெம்பில் எத னையும் சாதிக்க விருமப வேண் டாம. அது உங்களுக்கே அழி வைத் தந்துவிடும் என்பதையும மறந்துவிட வேண்டாம்"

நான் குட்டிப் பிரசங்கம ஒன்றை கோபத்தினால் கொட்டித் தீர்த்துவிட்டு, வீடு திரும்ப ஆயத் தமானேன்–

எல்லாவற்றையும பொறுமை யாக செவிமடுத்துக் கொண்டி ருந்த ரிபாய் என்னை செல்ல விடாது தடுத்து கடையின் உள் அறைக்கு அழைத்துச் சென்று அமர்த்தி விட்டு பேச ஆரமபித் தார்–

"அமீர் தவறுதலாக இழை த்த செயலுக்காக நான் அவனை அறையவில்லை. அவன் மீதுள்ள பிரியத்தினால்தான் அப்படி நடந்து கொண்டேன்" என்றான் ரிபாய்.

எனக்கு ரிபாய் பேசுவதில் வியப் பாக இருந்தது. மேலும ரிபாயே தொடர்ந்தார்.

"எனது இந்த கடையை நடத் திச் செல்ல நம்பிக்கையான ஒரு வன் தேவைப்பட்டான். அப்படி யான ஒருவனை இவ்வளவு நாட் களும தேடிக் கொண்டிருந்தேன். எனக்கு முற்றிலும பொருத்தமான வனாக அமீர் தென்பட்டான்.


எனவே எனது நோக்கம அவ னுக்கு ஒரு அறையைக் கொடுத்து அவமானப்படுத்துவதற்கு மாறாக ஆராய முற்படுவதாக அமைந்தது அதில் நான் வெற்றியும பெற்று விட்டேன்–

பொறுமையின் கூலி சுவர்க்க மேயாகும. என்னால் கொடுக்கப் பட்ட அடியையும் வாங்கிக் கொண்டு பல பேர்கள் மத்தியிலும பொறுமையாக இருந்த அவன் மீது எனக்கு மேலும நமபிக்கை பிறந்துவிட்டது–

எனவே இந்த நிமிடத்திலிரு ந்தே இந்த கடையின் திறப்பை அவனிடமே ஒப்படைக்கப் போகி றேன். யாருமேயற்ற அனாதை யான எனக்கு இனி தமபி என்று கூறிக் கொள்ள அமீர் இருக்கி றான்.

இனி நான் அனாதையுமல்ல, அவனது குடுமபமே என் குடும பம. இதில் எனக்கு ஆத்ம திருப்தி உண்டு" என்று தன் மனதை திற ந்து கூறினார் ரிபாய்–

ரிபாயின் திட்டம் வெற்றியில் நடைபோடுவதை எண்ணுகையில் எனக்கும் திருப்திகரமாக இருந் தது– ஆனால் ஒரு சிறு சமபவத்தில் எனது உயிருக்கு உயிரான நண்ப



# புற்று நோயை உடன் அறிய வசதி

உங்கள் கையில் ஒரு காயம பட்டு விடுகிறது என்று வைத் துக் கொள்ளுங்கள். உடனே அந் தக் காயத்துக்கு மருந்து போடு கிறீர்கள். நாளடைவில் காயம ஆறிப்போய் விடுகிறது.

றும பருக்களை எடுத்துக் கொள் ளுங்கள். உடலின் கட்டளையை மீறி தோலில் தோன்றும அதி வளர்ச்சி தான் பருக்கள்.

ஒரு காயத்தை மிகச் சரியாக மூடி அடையாளம தெரியாக

என்று டாக்டர்கள் நமபுகிறார் கள்.

பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர் களால் வடிவமைக்கப்பட்டு உரு வாக்கப்பட்டுள்ள இந்த மருத்

ரிபாயும் சக ஊழியர்களும் நகைகளை விற்பனை செய்யும் பணியில் தீவிரமாகவே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேலை பார்க்கும் அமீர், வாடிக்கையாளர் கேட்கும் நகைகளைக் காண்பிக்க எத்தனிக்கும் போது, நகை தவறுதலாக மேசையிலே விழுந்துவிட்டது.

இதனைக் கண்ட முதலாளி

குடும்பத்தில் ஆண்களுள் அவன் ஒருவன் மட்டுமாம். அவனது தந்தை "ஹாட்எட்டக்" வந்து மௌத்தாப் போய் விட்டாராம்.

திருமண வயதை எட்டிவிட்ட சகோதரிகள் அவனுக்கு மூவராம் இளைய சகோதரிகள் இருவராம். அவன் நல்ல பையன் என்றும்

கணக்குத் தீர்த்து விட்டுச் செல்லலாம் என எண்ணங்கள் மோத அவர் பக்கத்தில் சென்றேன்.

"என்ன ரிபாய் என்ன இருந்தாலும் நீங்கள் இப்படி நடந்திருக்கக் கூடாது. நீங்கள் முதலாளியாக இருக்கலாம் அதற்காக தொழிலாளிகளை அடிமைப்படுத்த நினைக்கக் கூடாது.

அமீருக்கு என்று தன்மானம் இல்லையா? அவனும் உங்களைப்

உண்டு" என்று தன் மனதை திறந்து கூறினார் ரிபாய்.

ரிபாயின் திட்டம் வெற்றியில் நடைபோடுவதை எண்ணுகையில் எனக்கும் திருப்திகரமாக இருந்தது. ஆனால் ஒரு சிறு சம்பவத்தில் எனது உயிருக்கு உயிரான நண்பனையே தவறாக எடை போட்டு விட்டேன் என்று என் மனம் பதைபதைத்தது.

(இ)

# கவிதை வரும் நேரம்!

— செ. குணரத்தினம் —

கவிதை வரும் நேரம்!
கடன்காரன் தேடிவர — மாமா
கள்ளருந்தி ஆடிவர!
இடம்மாறி மாமியோட — எனக்கு
எழிலான கவிதைவரும்!

★

கைக்குழந்தை கதறியழ — மனைவி
கடுஞ்சினத்தில் பதறிவர!
மைக்குவளை தவறிவிழ — பேனா
மறுதலிக்கக் கவிதைவரும்!

★

ஓவென்று மழைபொழிய — வெள்ளம்
ஓடிவந்து குடியெழுப்ப!
பாரெல்லாம் பதறியழ — எனக்கு
பலவிதமாய்க் கவிதைவரும்!

★

"ஷெல்" வந்து வீட்டில்விழ — கூரை
சிதறிப்போய் றோட்டில்விழ!
"வள்" ளென்று நாய்கதற — எனக்கு
வடிவான கவிதைவரும்!

★

அடுப்பினிலே பூனைதூங்க — மனைவி
அடுக்களையுள் இருந்தழுங்க!
கொடும்பசியால் மக்கள்வாட — எனக்கு
கவிதைநூறு எழுதவரும்!

# புத்துணர்ச்சியுடன் வேலை ஆரம்பம்

காலையில் ஒருவர் தன் வேலைத் தலத்துக்குச் செல்லும் போது அவரிடம் புத்துணர்ச்சி இருக்க வேண்டும். பலி கடா கொலைக் களத்துக்கு செல்வதைப் போல அவர் வேண்டா வெறுப்புடன் தன் வேலைத் தளத்துக்கு செல்வாரானால் அவரால் அந்நிறுவனம் எந்த நன்மையும் அடையப் போவதில்லை.

நமநாட்டில் பல நிறுவனங்கள் நாளுக்கு நாள் நசிந்து வருகின்றன என்றால், ஆமையாக நமது பொருளாதார வளர்ச்சி இருந்து வருகிறது என்றால் வளர்ச்சித் திட்டங்கள் படுத்து விடுகின்றன என்றால் வேலையில் ஆர்வமின்மையே அதற்கான முக்கிய காரணம். அதாவது ஊழியர்களுக்கு

மேல் நாடுகளில் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு தமது ஊழியர்களுக்கு பல நிறுவனங்கள் நல்ல சம்பளம் பல வசதிகள் ஆகியவற்றை அளித்து வேலையில் அவர்களுக்கு ஆர்வத்தையும் திருப்தியையும் ஏற்படுத்தும் வகையில் காரியமாற்றி வருகின்றன.

ஏனெனில் வேலையில் பிடிப்பும் ஆர்வமும் இருக்குமானால் வீண் விரயம் தவிர்க்கப்பட முடியும். வேலை நேரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட முடியும். உற்பத்தி அதிகரிக்கப்பட முடியும். இதன் மூலம் நிறுவனங்கள் ஏராளமான பணத்தை மிச்சம் பிடிக்கவும் முடியும்.

ஊழியர்கள் பேரில் நிறுவனத்தினர் தனிப்பட்ட கவனம் எடுத்துக் கொள்வது இன்னுமொரு ஊக்குவிப்பு முறையாகும். நிர்வாகம் தன் மீது அக்கறை கொண்டுள்ளது என்று ஊழியர்கள் நினைக்க ஆரம்பிக்கும் போது விசுவாசத்துடன் அவர்கள் தமது பணிகளை செவ்வனே செய்து முடிக்கிறார்கள் என்பது புதிய நிர்வாக சிந்தனை.

ஊழியர்களிடம் வேலை வாங்குவதற்கும் மிருகங்களிடம் வேலை வாங்குவதற்கும் அநேகமாக அதிக வித்தியாசமில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஒரு பணியைச் சரியாக செய்து முடிக்கும் போது பரிசாக உணவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் தான் மிருகங்கள் இட்ட பணியைச் செய்து முடிக்கின்றன.

ஏனெனில் ஊழியர்கள் தமது எஜமானர்களிடம் நாயைப் போல விசுவாசமாக இருந்த காலமெல்லாம் இப்போது மலையேறி விட்டது. ஊழியர்களின் புதிய சிந்தனைக்கு ஏற்றார் போன்ற நிர்வாகக் கொள்கைகளே இனி மேல் செல்லுபடியாகும்.

(இ 032)

உங்கள் கையில் ஒரு காயம் பட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அந்தக் காயத்துக்கு மருந்து போடுகிறீர்கள். நாளடைவில் காயம் ஆறிப்போய் விடுகிறது.

காயம்பட்ட இடத்தில் மீண்டும் சதை வளர்ந்து எந்த இடத்தில் காயம்பட்டது என்ற அடையாளமே தெரியாத வகையில் காயம் முற்றாக மறைந்து விடுகிறது.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தோமானால் உடலின் நுணுக்கமான சில விஷயங்களை நாம் புரிந்து கொள்ளலாம்.

எந்த ஒரு அடிப்படையில், யாருடைய உத்தரவின் கீழ் காயத்தை மறைக்கும் பணி கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டது?

காயத்தை மறைக்கும் வகையில் வளர்ந்த சதை ஏன் கூடுதலாக வளராமல் தன் பணி முடிந்ததும் வளர்ச்சியை நிறுத்திக் கொண்டது?

சாதாரண விஷயமாக தென்பட்டாலும் நம் உடல் மேற்கொள்ளும் மிக நுட்பமான பணிகளில் இதுவும் ஒன்று. இதற்கு விடை சொல்வது மிகவும் கடினமான விடயம்.

இதேசமயம் உடலில் தோன்றும் பருக்களை எடுத்துக் கொள்ளுங்கள். உடலின் கட்டளையை மீறி தோலில் தோன்றும் அதி வளர்ச்சி தான் பருக்கள்.

ஒரு காயத்தை மிகச் சரியாக மூடி அடையாளம் தெரியாத வகையில் செப்பனிடும் உடலின் நடைமுறையில் எங்கோ ஏற்படும் தவறுகள் காரணமாக உடலில் கட்டிகள், பருக்கள் தோன்றுகின்றன.

ஆனால் இந்த அதிகப்படி சதை வளர்ச்சியெல்லாம் புற்றுநோய்க் கட்டிகள் அல்ல.

அப்படியானால் புற்றுநோய்க் கட்டிகள் என்றால் என்ன?

உடலின் கட்டளைகளை மீறி புற்றாக வளரும் சதைக் கோளம் தான் புற்றுநோய். அவை தனி ராஜ்யத்தை அப்பகுதியில் அமைத்துக் கொள்கின்றன. உடலின் வளங்கள் உறிஞ்சப்படுகின்றன. இவ்வாறான நிலை ஏன்? எப்படி? ஏற்படுகிறது என்பது தான் புரியாத விஷயமாக இருக்கிறது.

இதற்கான விடைகளைக் கண்டுகொண்டால் புற்றுநோயை வெற்றிகொண்டு விடலாம்.

நியூக்ளியர் மெக்னடிக் ரிஸோனன்ஸ் ஸ்பெக்ட்ரோ மீட்டர் என்ற சாதனம் இந்த வகையில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று டாக்டர்கள் நம்புகிறார்கள்.

பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த மருத்துவ சாதனம் இங்கிலாந்து மருத்துவ ஆராய்ச்சி சபையிடம் உள்ளது.

இக்கருவியைப் பயன்படுத்தி புற்றுநோய்க்கு நல்ல பலன் அளிக்கக் கூடிய புதிய மருந்து வகைகளை மருத்துவ நிபுணர்களால் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்குமாம்.

உடலின் உயிரியல் ரசாயன மாற்றங்கள், கட்டிகளின் பின்னணி உண்மைகள் ஆகியவற்றை இதன் மூலம் மருத்துவ நிபுணர்கள் உணர்ந்து கொண்டு தக்க மருந்துகளைத் தயாரிக்கக் கூடியதாக இருக்கும்.

ஏனெனில் இந்த உண்மைகளை அறிந்து கொண்டால் தான் மருந்துகள் எவ்வாறு புற்றுநோய் கட்டிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நிர்ணயிக்க கூடியதாக இருக்குமாம்.

உடலின் சதை வளர்ச்சி தன்மை எப்படி தடம் புரளுகிறது என்பதையும் அதன் காரணங்களையும் கண்டறிய என்எம் ஆர் என சுருக்கமாக அழைக்கப்படும் இக்கருவி எதிர் காலத்தில் பெரிதும் உதவுமாம்!

(ம-032)

## மனைவியின்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாத்தையும் துக்கிட்டான்"

"நீங்க பாக்டரிக்கு போனதுக்கு அப்புறம் தினமும் உங்க மனைவி அவங்க காதலனுக்குப் போன் பண்ணி அவனை வீட்டுக்கு வரவெச்சு அவனோட வழக்கத்துக்கு விரோதமா பாக்டரியிலேருந்து சீக்கிரம் வந்த நீங்கள் அவங்க ரெண்டு பேரும் ஒண்ணாயிருக்கிறதைப் பார்த்துவிட்டு கடுமையான கோபத்தோடு நீங்க வீட்டை விட்டு வெளியே போனதையும் சொல்லிட்டான்.

"நீங்க வீட்டுக்கு வந்து போன விசயம் உங்க மனைவிக்குத் தெரியாது. நடராஜனும் அதை உங்க மனைவிகிட்டே சொல்லல்லே. உங்களுக்குத் துரோகம் செய்த மனைவியை நீங்கள் பழிவாங்கத் துடிச்சீங்க. உடனடியா அதைச் செய்யாமல் அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தீர்கள்.

இரண்டாவது மணநாளைக் கொண்டாட ஒரு பிக்னிக் போகலாமே என்று உங்கள் மனைவி கேட்ட போது சரியென்ற நீங்கள் அந்த மலையுச்சியை பிக்னிக் ஸ்பாட்டாகத் தேர்ந்தெடுத்தீர்கள். உங்கள் திட்டத்துக்கு முழு வடிவம் கொடுத்தீர்கள் ஆனால் மோதிரம் எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்து விட்டது"

நித்தியானந்தம் தலை குனிய சக்கரவர்த்தி அவர் கைகளில் விலங்கு மாட்டினார்-(இ-10)

# மலையக மாருதம்



தயாரிப்பு : கே. தமிழ்மாறன்

## தாயகம் திரும்பாதோருக்கு குடியுரிமை வழங்க வேண்டும்

— டி. அய்யாத்துரை —

[தலைவர் தொழிலாளர் தேசிய சங்கம்]

இந்திய கடவுச் சீட்டுப் பெற்றுத் தாயகம் திரும்ப முடியாதிருக்கும் மக்கள் பிரச்சினை தொடர்பாக தீர்வொன்று காண தொழிலாளர் தேசிய சங்கத்தின் தூதுக் குழுவொன்று 1987ஆம் ஆண்டு இந்தியா சென்றது.

தாயகம் திரும்பியோர் தவிர மீதமுள்ளவர்களின் எண்ணத்திற்கு மாறாக கட்டாய நாடு கடத்தல் இருக்கக் கூடாது மக்கள் விருப்பப்படி அவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதற்கேற்ப செயல்பட வேண்டும் என இந்திய அரசையும், தமிழக அரசையும் தூதுக் குழு கேட்டுக் கொண்டது.

இச் சந்தர்ப்பத்தில் தொழிலாளர் தேசிய சங்கம் இதனை சுட்டிக் காட்டுவது அவசியம் எனக் கருதுகிறது.

இந்திய வம்சாவளி நாட்டற்ற மக்கள் தொடர்பாக இலங்கை - இந்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது. 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் உடைமைகள், சொத்துக்கள், சேமிப்புக்கள் சூறையாடப்பட்டன.

இந்தியப் போக்குவரத்து கட்டுப்பாட்டு இந்தியக் கடவுச் சீட்டு பெற்றவர்களில் ஒரு பகுதியினர் தாயகம் திரும்ப முடியாத நிலை தோன்றியது.

அவ் ராணுவத்திரமல்ல ஒப்பந்தம் செய்தபோது கைச்சாத்திட்ட அவ்வேளை கடவுச் சீட்டுப் பெற்ற குடும்பங்களின் தலைமுறையினர் வேறொரு நாட்டிற்கு செல்ல விரும்பாததன் காரணமாகவே இப் பிரச்சினை எழுந்தது.

வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட நிலைமை காரணமாக இலங்கை அரசாங்கம் இந்திய அரசோடு 1987 ஆம் ஆண்டு ஓர் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

இலங்கையிலிருந்து அகதிகளாகக் குடிபெயர்ந்துள்ள மக்களை இலங்கை அரசு திருப்பி ஏற்பது அதே நேரத்தில் தாயகம் திரும்பாமல் இருப்பவர்களைத் திருப்பி அனுப்புவதும் உடன்படிக்கையில் ஓர் அம்சமாகும்.

இந்த உடன்படிக்கையை இந்திய வம்சாவளியினர் ஏற்க முடியாத என்ற நிலைமை மலையகத்தில் தோன்றியபோது தொழிலாளர் தேசிய சங்கத்தின் தூதுக் குழு இந்தியா சென்று உண்மை நிலைமையை இந்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் தெளிவுபடுத்தியது.

அச் சந்தர்ப்பத்தில் நாம் ஓர் தெளிவான கொள்கையோடு தாயகம் திரும்புவோரின் பிரச்சினையை முன்வைத்தோம். இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் விவகாரத்தோடு, இந்திய கடவுச் சீட்டு பெற்ற மக்களின் பிரச்சினையையும் ஒன்றாக்கி சிக்கல்களை உருவாக்கக் கூடாது இந்தியக- அது மட்டுமல்ல இப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு சீர்தூக்கிப் பார்த்த தாயகம் திரும்பியவர்கள் தவிர எஞ்சியிருக்கும் மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

1987 ஆம் ஆண்டு நாடற்றவர்களாக இருக்கும் சகலருக்கும் குடியுரிமை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் இதே அடிப்படையில் தான் இம் மக்களின் பிரச்சினையை அணுகினோம். எமது சங்கம் இப் பிரச்சினையில் அன்று முதல் இன்று களின் பிரச்சினையை தனியாகவே நோக்க வேண்டும்.

இன்றுள்ள நிலைமையில் எல்லாவிதமான சொத்து சுகங்களையும் இழந்த இந்தியா திரும்ப முடியாதிருக்கும் மக்களை கட்டாயமாக நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிட வேண்டும்.

தாயகம் திரும்ப மறுக்கும் மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை கொடுப்பதற்கு இந்திய அரசும், மாநில அரசும் முயல வேண்டும்.

இப்படித்தான் நாம் பேச்சுவார்த்தைகளின் போது தெளிவுபடுத்தினோம்.

எமது தூதுக் குழு இலங்கை திரும்பியவுடன் இந்தியத் தூதுவரை சந்தித்துப் பேசியபோதும் இதே கருத்தைத்தான் வலியுறுத்தான் செயல்பட்டு வந்துள்ளது.

ஆகவே, ஒரு லட்சம் பேரை நாடு கடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ள இவ்வேளையிலும் நாம் இதையே வலியுறுத்தி வருகின்றோம். திடீரென்று இப் பிரச்சினையை பூதாகாரமாக்கி பல கோணங்களில் செயல்பட முற்பட்டுள்ளதால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் அச்சமும், பதற்றமும் கொண்டுள்ளனர். இது தவிர்க்க முடியாததொன்றாகும்.

இப் பிரச்சினை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக புதிய கோர கோணத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அதனால் மலையக தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் ஒரே விதமான கருத்தினைக் கொண்டிருப்பதை பத்திரிகை வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இந் நோக்கில் கூட்டான ஒரு செயல் திட்டத்தோடு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி கடவுச் சீட்டுப் பெற்றவர்களுக்கு அவர்கள் ... இப் பிரச்சினைக்கு தீர்வு காணுமே ஒரே வழியாகும்.

ஆகவே, தொழிலாளர்கள் இப் பிரச்சினை தொடர்பாக பதற்றமோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை. அதற்கான நடவடிக்கை ... நாம் முன்னின்று செயல்படுவோம். ... இப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முயற்சி எடுப்போம்.

## அன்பின் சின்னம்

[15ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று கூறிக் கொண்டார்கள்.

இந்தியாவைப் பொறுத்த அளவில் வேத காலத்திலேயே (கிறிஸ்து பிறப்பதற்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு) முகர்ந்து பார்த்து உடலில் முத்தமிடும் பழக்கம் இருந்திருக்கிறது. மகாபாரத காலத்தில் இருந்துதான் உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடும் பழக்கம் தோன்றியுள்ளது என்று கூறப்படுகிறது.

பண்டைக்கால ரோமானியர்கள் கீழ்கண்ட விதமான முத்தங்களை அங்கீகரித்து இருந்தனர். நட்புறவை வெளிப்படுத்த கன்னத்தில் முத்தமிட வேண்டும். காதல் உணர்ச்சியை வெளிப்படுத்த கன்னத்தில் முத்தமிட வேண்டும். முன் நெற்றியில் முத்தமிட்டால் அது மரியாதையை வெளிப்படுத்துவதாகும். கரங்களில், பாதங்களில் முத்தமிடுவது பக்தியை வெளிப்படுத்துவதாகும்.

பிரான்சில் முத்தத்துக்கு என்று தனி இலக்கணமே வைத்திருந்தனர். காதலிப்பவர்கள், உடல் உறவு கொள்பவர்களைத் தவிர மற்றவர்கள் உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிட்டால் அது பாவச் செயல் என்று கட்டுப்பாடு விதித்திருந்தார்கள்.

நிர்வாணமாக ஆணும், பெண்ணும் சேர்ந்து குளிப்பதை பின்லாந்து நாட்டு மக்கள் கௌரவமாகக் கருதினார்கள். அதே நேரத்தில் இவர்கள் உதட்டில் முத்தமிடுதலை அசிங்கம் என்றும், அவமானம் என்றும் ஒதுக்கி வைத்தனர்.

மனிதர்கள் மட்டுமின்றி பெரும்பாலான மதங்களும் மத புத்தகங்களும் முத்தம் பற்றி குறிப்பிடாமல் இல்லை. பிரார்த்தனையின் போதும், பாவ மன்னிப்பு பெறும் போதும் முத்தம் வழங்குவதை பழக்கமாக உருவாக்கி இருக்கின்றன.

அந்த பழக்கம் இன்று வளர்ந்து பெருகி மனித வாழ்க்கையின் அத்தியாவசியமான முக்கிய செயல்களில் ஒன்றாகி விட்டது.

ரோமில் உள்ள செயின்ட் பீட்டர் தேவாலயத்தில் உள்ள மேரியின் வெண்கல சிலை பாதம் பக்தர்களால் முத்தமிட்டே தேய்ந்து போய் விட்டது. 5ஆம் நூற்றாண்டில் இருந்தே இந்த சிலையின் வலது காலை பக்தர்கள் முத்தமிட்டு வந்திருக்கிறார்கள்.

(ம—10)

## தங்கத்தில் ஆசை இல்லை

பெண்களுக்கு தங்க நகை அணிய அதிக ஆசை இதனால் தங்கம் விலை உயர்ந்து விட்டது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் பெண்களுக்கு பொன்னாசை இல்லை. அதனால் தங்க விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. ஐரோப்பிய மக்களுக்கு தங்க நகை மீது ஆசை இல்லா விட்டாலும், முத்து பவளம், மணி மாலைகள் அணிய விரும்புகின்றனர்.

(ம—10)

## நெருக்கமான நகரம் மெச்சிக்கோ

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நகரம் எது தெரியுமா? வட அமெரிக்காவில் உள்ள மெச்சிகோ நகரம் தான்.

அங்கு ஒரு கோடியே 80 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இரண்டாவது இடத்தை ஜப்பான் தலைநகர் டோக்கியோ பிடித்துள்ளது. டோக்கியோ நகரில் ஒரு கோடியே 72 லட்சம் மக்கள் உள்ளனர்.

(ம—10)

## பிரயாணிகளுக்கு மன ஆறுதல்

லண்டன் நகரின் பாதாள ரயில் சேவையில் பயணம் செய்பவர்கள் வியர்வை நாற்றத்தைச் சகிக்க முடியாமல் இனி மூக்கைப் பொத்திக் கொள்ள வேண்டியதில்லை.

ஏனெனில் ஜன நெருக்கம் காரணமாக இயற்கையாக எழக் கூடிய இந்த நாற்றத்தில் இருந்து விடுதலையளிக்கும் பொருட்டு ஒவ்வொரு ரயில் பெட்டிகளிலும் வாசனை தெளித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு ரயிலுக்கும் வெவ்வேறு வாசனை தெளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு பயணிகளுக்கு பெரும் ஆறுதலை அளித்திருக்கிறது.

ஆனால் இலங்கை பயணிகளுக்கு, குறிப்பாக பஸ் பயணிகளுக்கு இந்த பிரச்சினையே இல்லை. ஏனெனில் அவர்கள் தான் ஏற்கனவே வியர்வை நாற்றத்துக்கு பழக்கப்பட்டு அதை ஒரு நறுமணமாகவே ஏற்றுக் கொண்டு விட்டார்களே!

(வி-032)

இலங்கைத் துறைமுக அதிகாரசபை

இறக்குமதியாளர்களுக்கும் சரக்கினை அகற்றும் நிலையங்களுக்குமான

அறிவித்தல்

1984-12-17 ஆந் திகதிய 328/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1984

தாக செய்தபோது கைச்சாத்திட்ட அல்லது கடவுச் சீட்டுப் பெற்ற குடியுரிமை பெற்றவர்கள் மாண்டுபோய் விட்டனர். இரண்டாம் தலை சீட்டு பெற்ற மக்களின் பிரச்சி னையையும் ஒன்றாக்கி சிக்கல் களை உருவாக்கக் கூடாது. இங் கிய கடவுச் சீட்டு பெற்றவர் னையை அணைகிறோம். எமது சமுதாய இப் பிரச்சி னையில் அன்று முதல் இன்று வரை தெளிவான உறுதியோடு ... தீர்வு காணவே முயற்சி எடுப்போம். [நி]

# மலையகக் கலைகள் மங்கிப் போக விட்டு விடலாமா?

மலையக மக்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டு வாழ்பவர்கள். இம்மக்கள் வாழும் தங்களது பிரதேசத்து மண் வாசனையை பிரதிபலிக்கும் கலை, கலாசாரப் பாரம்பரியப் பண்பாட்டுக் கோலங்களும் தொடர்புபடுத்தப்பட்டே காணப்படுவதனை அவதானிக்கலாம்.

தமக்கெனத் தனியான மொழி நடை, கலையுணர்வுகள், பண்பாடுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் தனித்துவத் தன்மை கொண்ட இந்த உணர்வுகள் இன்று மங்கிக் கொண்டு வருவதனையும் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

இசையில் மாறுபாடுகள் யாருக்கும் இல்லை. இசையுடன் சேர்ந்ததுதான் வாழ்க்கையும். மனித வாழ்வில் மகன் முதலாக ஆரம்பமாகும் "ஆராரோ ஆரிவரோ" என்ற தாலாட்டு இசையில் தொடங்கி இறுதியாக மரணிக்கும் நிலையில் "ஒப்பாரி" கோலத்தோடு முடிவடைகின்றது.

இந்த இசைப் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து, அதற்கேற்ப பல்வேறு தாள வாத்தியங்களும் இன்று இம்மக்கள் மத்தியில் பிரிக்க முடியாதனவாக ஒன்றித்து விட்டன.

பிரித்தானிய காலங்கொட்டு வேலைத் தளத்துக்குச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் "தப்பு" எனும் இசைக் கருவி தற்போது பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

மலையகத்திலுள்ள தோட்டங்களில் நடைபெறும் விசேட வைபவங்கள் திருமணம், மரணம் மற்றும் எல்லாப் பண்டிகைக் காலகட்டங்களிலும் 'தப்'போசை கணீரென்ற ஒலியுடன் கேட்கக் கூடியதாக இருக்கும்.

இந்தத் தப்போசைகளைக் கொண்டு நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளும் சக்தி மலையக மக்களுக்குண்டு.

அத்துடன் கூத்து வடிவங்களாகத் திகழும் பொன்னர் சங்கர் கதை, அருச்சுனன் தபசு, காமன் கூத்து போன்றவற்றுடன் கரகாட்டம், கோலாட்டம், கும்மியாட்டம் போன்ற கலையம்சங்களுடன் "தப்பு" தொடர்புபட்டுள்ளது.

இதே போல, "சேகண்டி" எனப்படும் ஒருவகை கருவி கோவில்களில்தான் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறே உடுக்கு, செண்டைக் கட்டை, உறுமி மேளம் போன்றவும் காலத்தால் கலந்துள்ளன.

உடுக்கு பரவலாக பேயோட்டுதல், உரு அடிதல் போன்ற பல்வேறு கூத்துக்களிலும் பரிணமித்துள்ளது. இன்று தென்னிந்தியாவிலே திரைப்படப் பாடல்களிலும் உடுக்கு ஓசையைப் பயன்படுத்தி வருவதனைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

இவ்வாறான இசைக் கருவிகளின் பயன்பாடுகள் இன்று பெரிதும் நலிவடைந்து கொண்டே வருகின்றன. இவ்வாறு நலிவுறுந் தன்மை இம்மக்களின் பாரம்பரிய நிலைப்பாட்டினை மாற்றியமைத்து விடலாமல்லவா?

மக்களோடு மக்களாகக் கலந்து இம்மக்கள் தனியுணர்வுகளைத் தட்டி எழுப்பும் இவ்வகை இசைக் கருவிகளுக்கு நடந்தது என்ன?

மேலைத்தேய கலாசாரத் தாக்கங்கள், அல்லது நாகரிக மோகங்கள் இவர்களது உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்து விட்டனவா?

ஒரு தேசிய இனத்துக்கு இருக்க வேண்டிய சகல அம்சங்களையும் கொண்டுள்ள போது இவ்வாறான நிலைமைகள் அதனை உதாசீனப்படுத்தி விடலாமோ எனக் கவலை கொள்வோருமுளர்.

பண்டைய இசைக் கருவிகளின் இசையைக் கேட்டவுடன் நாமும் நையாண்டி செய்கிறோம். ஜாதி ரீதியாக பிரிக்கப்பட்டு இழிவுபடுத்துகிறோம். அவற்றை இசைப்பவர்களும் கூட கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மலையக இசைக் கருவிகளின் செயற்பாட்டுக் கலையம்சங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். அந்த வகையில் இவ்வகையிலான நலிவுறுத் தன்மையிலிருந்து அதனை மீட்டெடுக்க உந்து சக்திகள் தேவை.

எவ்வாறு ஏனைய நவீன இசைக் கருவிகளை பழகுவதற்கு இன்றைய இளைஞர்கள் ஆர்வம் செலுத்துகின்றனரோ, அவ்வாறே பாரம்பரிய இசைக் கருவிகளும் கைவிடாது பேணப்பட வேண்டும்.

"நாமும் செய்ய மாட்டோம்; பிறரையும் செய்யவிட மாட்டோம்" இதுதான் இன்றைய தத்துவம். எனவே, நடைமுறை ரீதியாக மலையகத்தில் நாம் கண்டு உணரும் இந்நிலையை படித்த இளைஞர் கூட்டமாவது உணர வேண்டும். படித்த வாலிபர்கள் தமது ஓய்வான நேரங்களில் இக்கருவிகளைப் பழகுவதில் ஆர்வமும், ஊக்கமும் செலுத்துதல் அவசியமும் நிர்ப்பந்தமுமாகும்.

சமூகநல அமைப்புகளும், நிறுவனங்களுங்கூட மலையக பாரம்பரிய கலைகளுக்கு ஊக்குவிப்பு அளிக்க முடியும்.

இந்து கலாசார, தமிழ் மொழி அலுவல்கள் அமைச்சர் பல்வேறு துறையிலும் தமிழை, சமயத்தை வளர்த்தெடுப்பதற்காகவும், குறிப்பாக தமிழிலுள்ள இயல், இசை, நாடகத் துறைகளை ஊக்குவிக்கப் பாடுபடுகின்றாரோ, அதே போல இவற்றிலும் கூடுதலான அக்கறை செலுத்துவது அவசியமாகும். (நு-408)

1984-12-17 ஆந் திகதிய 328/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட, 1984 இன் 2 ஆம் இலக்க இலங்கைத் துறைமுக அதிகார சபையின் (வாப்பு எழுதவினைஞர்களைப் பதிவு செய்தல்) ஒழுங்கு விதிகளுக்குச் சகல இறக்குமதியாளர்களினதும் சரக்கினை அகற்றும் நிலையங்களினதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது-

மேற்கூறிய அறிவித்தலின் 2 ஆம் இலக்க ஒழுங்கு விதி கீழ்க் காணப்படும் வகையில் வாசிக்கப் படுகின்றது-

"எந்தவொரு ஆளொருவருக்கும் கீழ்க் காணப்படும் அவசியமானவைகள் இருந்தாலொழிய, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் (இதன் பின்னர் "துறைமுக அதிகார சபை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) எந்தவொரு கூடமொன்றிலிருந்தோ இடைப்போக்கு மடுவம் ஒன்றிலிருந்தோ அல்லது துறையொன்றிலிருந்தோ எந்தவிதமான சரக்குகளையும் விடுவிப்பதற்கான கப்பற் சரக்கு ஒப்படைத்தல் ஆவணங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுதலாகாது-

(அ) வாப்பு எழுதவினைஞரொருவராகத் துறைமுக அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல்; அத்துடன்

(ஆ) துறைமுக அதிகார சபையினால் அது தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டொன்றினை வைத்துள்ளவராகவிருத்தல்;

எனினும் தனிப்பட்ட பிரயாணப் பொதிகளையும் வேறு விசேட அனுப்பப்பட்ட சாமான்களையும் பாரமேற்பதற்காக வரும் ஆளொருவர் தொடர்பாக, மேற்குறிப்பிட்ட பதிவு செய்யப்பட்டிருத்தல் மற்றும் அனுமதிச் சீட்டுக்குப் பதிலாக அவ்வாளினது கடவுச்சீட்டோ அல்லது தேசிய அடையாள அட்டையோ ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்."

மேற்குறிப்பிட்ட ஒழுங்கு விதி 1990 ஒகஸ்து 01 ஆந் திகதியில் (90-08-01) இருந்து துறைமுகங்களிற் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும், இவற்றை விட தனிப்பட்ட பிரயாணப் பொதிகள் உரிமையாளர்களினால் அவர்களது கடவுச்சீட்டு/தேசிய ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்த அகற்றப்படும் சந்தர்ப்பத்திலும் படைச் சேவைகள் மற்றும் ஏனைய முக்கிய அரசாங்க நிலையங்கள் தொடர்பான விசேட அனுப்பப்பட்ட சாமான்கள் திணைக்களத்தின் அடையாள அட்டையைச் சமர்ப்பித்த அகற்றப்படும் சந்தர்ப்பத்திலும் மாத்திரமே அனுமதிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கு விதியினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு கப்பற் சரக்கினை அகற்றும் பணியை மேற்கொள்ளும் போதுமானளவினதான ஊழியர்களை, மேற்கூறிய அதிவிசேட கசெற்றிற் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கிணங்க வாப்பு எழுதவினைஞர்களாகப் பதிவு செய்து கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு சகல இறக்குமதியாளர்களிடமும் சரக்கினை அகற்றும் நிலையங்களிடமிருந்தும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தங்களது வாப்பு எழுதவினைஞர்கள் துறைமுகப் பிரதேசத்தினுள் நிற்கும் போது அவர்களது அளடையாளப் பட்டிகளை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்துமாறு சகல இறக்குமதியாளர்களிடமும் கப்பற் சரக்கு அகற்றும் நிலையங்களிடமும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தலைவர்,
இலங்கைத் துறைமுக அதிகார சபை

திகதி 90-06-01

## மணிக் கவிதை

### எங்கே நிம்மதி?

தொடர்ந்து வரும் சோகங்கள்
தொடர்கதைதானா?
கடந்து வந்த பாதைகளைக்
கவலையுடன் பார்க்கிறாள்!
மரணத்தின் வாசலுக்குள்
மனிதர்கள் நுழைவதுபோல்
மங்கையவள் கலங்குகிறாள்
மனநிம்மதி தேடுகிறாள்!

★ தெ லோஜனா

### விதவனானேன்!

அவனியில் இல்லை என்றாலும்
அகத்திலவளுடன் வாழ்ந்தேன்!
அன்புக்குரியவள் அவளை
அண்மையில் இழந்து விட்டேன்!
விதவனாகித் தவிக்கிறேன்
விதி முடிய வேண்டுகிறேன்!

★ ஜெய பிரகாஷ்
(அபுதாபி)

### புதிய உறவு!

இனிய புதுமலர் ஒன்று பூத்தது
இதயத்தில் குடி புகுந்தது!
வாலிபத்துக்கு விடிவு வந்தது
வாழ்வுக்கு அர்த்தம் புரிந்தது!
புது உறவுப் புதுமலரே...
புது உலகம் காண்போம் வா?

★ என் றொபர்ட்

### கனியாத காதல்

வானில் நீந்தும் நிலவே...
வந்தேன் பின்னால் மேகமாக!
விண் மீன்கள் கூட்டமோ
கண் விழித்துக் காத்தன!
காவலையும் மீறி நானும்
காதல் கூறக் காத்திருந்தேன்!
காலையில் சூரியன் உதித்ததும்
காணவில்லை உன்னை நானும்!
நீலநிற வானம் ஆனேன்
நினைந்துருகித் தேடலானேன்!

★ ஜெ சுதர்சினி

### இதுதான் நிஜம்!

பெண்களைக் கண்டு
பேய் இரங்குவது பொய்யல்ல!
அதனால்தானோ என்னவோ
ஆண்களை எல்லாம் இவர்கள்
ஆட்டிப் படைக்கிறார்கள்!

★ அலி ஜின்னா
(சவூதி அரேபியா)

### எதிர்பார்ப்பு?

என் நெஞ்சில் நீக்கமற
நிறைந்திருந்தாய் அன்று!
நினைவுகளின் நிழலாகி
...

# பொறாமைக்குப் பரிசு!

## மாஸ்டர் சிவலிங்கம்

முன்னொரு காலத்திலே இத்தாலி நாட்டிலே இரு வணிகர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருவன் பெயர் டொன்செசாரி, மற்றவன் பெயர் டொன் ஹோராவானி. கப்பலில் நாடு நாடாகச் சென்று வாணிபம் செய்வதிலே இருவரும் திறமை மிக்கவர்கள்.


வணிகன் டொன் ஹோராவானி கடவுள் பக்தியும் பண்பும் உள்ளவன். ஏழைகள் மீது இரக்கம் காட்டுபவன். எல்லோருடனும் அன்பாகப் பழகுபவன்.

வணிகன் டொன் செசாரி முரட்டுச் சுபாவமும் பொறாமைக் குணமும் உடையவன். மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பதைக் கண்டால் அவனுக்குப் பொறாமை ஏற்பட்டு விடும்.

நற்குணம் படைத்த டொன் ஹோராவானி ஒரு தடவை தனது கப்பலிலே விலை உயர்ந்த பல விதப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கடற் பிரயாணத்தை ஆரம்பித்தான்.

கடலின் மத்தியிலே உள்ள சில தீவுகளில் தனது பொருட்கள் பலவற்றை விற்பனை செய்து விட்டு இறுதியில் ஒரு சிறிய தீவை அடைந்தான்.

இயற்கை அழகுமிக்க அந்தத் தீவை ரசித்தபடி கடற்கரையிலே ஹோவானி நின்...



அரசர் சோகமே உருவாகக் காணப்பட்டார்... சோகப் புன்னகையோடு ஹோராவானியை அவர் வரவேற்றார்... தான் கப்பலிலே விலை உயர்ந்த பொருட்கள் பல கொண்டு வந்திருப்பதாக அரசரிடம் தெரிவித்தான் ஹோராவானி.

"வணிகர் தலைவனே! எங்கள் நாட்டிலே உணவுப் பொருட்களும் மற்றும் பொருட்களும் தினசரி சேதமடைந்து கொண்டேயிருக்கின்றன... காரணம் எங்கள் தீவில் ஆயிரக்கணக்கான எலிகள் உள்ளன... அவை தான் இந்த அழிவுக்குக் காரணம்...

எலிகளைத் தொலைத்துக் கட்டுவதற்கு எங்களால் ஆன அனைத்தும் செய்து விட்டோம் ஆனால் பயன் கிடைக்கவேயில்லை..." என்று வேதனை...

செய்யும் நோக்கத்தோடுதான் எங்கள் தீவுக்கு வந்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிறோம்... வாருங்கள், உங்களை அழைத்துச் சென்று எங்கள் அரசரிடம் சேர்ப்பிக்கிறோம்" என்று கூறினர்.

வணிகன் ஹோவானி மகிழ்ச்சியுடன் அச்சிப்பாய்களின் பின்னால் சென்றான். அழகிய அரண்மனையை அடைந்ததும் அரசரின் முன் சென்று பணிவோடு தலைதாழ்த்தி வணங்கினான்...

...விப்படுகிறேன்... பூனை என்ற பொருள் எப்படியிருக்கும்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் மன்னர்.

"பிரபு! பூனை என்பது சிறிய நாயைப் போன்ற பிராணி. எலிகளின் பரம விரோதி! எலிகளே பூனையின் பிரதான உணவு... எனது கப்பலிலே சில பூனைகள் உள்ளன... அவற்றில் சிலவற்றை தங்களுக்கு...

என்று கேட்டான் ஹோவானி!

பூனைகள் என்ற சொல்லைக் கேட்டதும் ஹோவானியை ஆச்சரியத்துடன் கூர்ந்து நோக்கினார் மன்னர்!

"பூனைகளா...? அப்படியென்றால் என்ன பொருள்...? பூனை என்ற சொல்லை முதன் முதலாக இப்போதுதான் கேள்...

"ஆஹா... அப்படியா...? மிக மகிழ்ச்சி! இப்போதே சென்று அவற்றைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார் அரசர்!

சிறிது நேரத்தில் நான்கு பூனைகளைக் கொண்டு வந்து அரசரிடம் ஒப்படைத்தான் வணிகன் ஹோவானி!

அரண்மனையில் நடமாடிய எலிகளைக் கண்டதும் நான்கு பூனைகளும் குதித்தோடிச் சென்று அவற்றைப் பிடித்துக் கொன்று குவித்தன...

இந்தக் காட்சியைக் கண்டதும் அரசர் உட்பட அனைவரும் துள்ளிக் குதித்து மகிழ்ந்தனர்... அரண்மனையில் பல பாகங்களிலிருந்தும் ஓடிவந்த சிப்பாய்களும் பணியாட்களும் திறந்த வாய் மூடாமல் ஆச்சரியத்துடன் பூனைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்...

பெருமகிழ்ச்சி அடைந்த அரசர் ஹோராவானி குழுவினருக்கு அரண்மனையில் பெரு விருந்தளித்துப் பாராட்டியதுடன் விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் யானைத் தந்தங்கள் சந்தனக் கட்டைகள் ஆகியவற்றை அள்ளி அள்ளி வழங்கினார்...

அத்தோடு தங்க நாணய மூடைகளையும் அன்பளிப்புச் செய்தார்... ஹோராவானி குழுவினர் மிக மகிழ்ச்சியுடன் நாடு திரும்பினர்.

ஹோராவானி பெருஞ் செல்வத்தோடு திரும்பியிருக்கிறான் என்ற செய்தி பொறாமைக்காரன் டொன் செசாரியின் காதுக்கும் எட்டியது... அவன் ஹோராவானியைச் சந்திக்க அவனுடைய வீட்டுக்குச் சென்றான்...

ஹோவானி செசாரியை அன்போடு வரவேற்று உபசரித்தான்... பின்பு தான் ஒரு தீவுக்குச் சென்றதாகவும் அத்...




## செல்லும் வழி எது?



தம்பி தங்கைகளே! தனது புத்தகத்தைத் தவற விட்ட இவர் அதனைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுங்கள்.

அதைக் கேட்டதும் பொறாமைக்காரன் செசாரியின் உள்ளம் வேதனையடைந்தது... அவனுடைய உள்ளத்திலே பொறாமைத் தீ பற்றி எரியத் தொடங்கியது...

ஹோராவானியை விட அதிகளவு பொருட்களைத் தான் அடைய வேண்டும் என்று பேராசைப்பட்டான்.

சில தினங்களின் பின் விலை மதிப்பற்ற அபூர்வப் பொருட்கள் பலவற்றைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு ஹோராவானி குறிப்பிட்ட தீவை அடைந்தான்... தீவின் அரசரை சந்தித்து தான் ஹோராவானியின் பிரிய நண்பன் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

ஹோராவானியின் நண்பன் என்று அறிந்ததும் பெரு மகிழ்ச்சி அடைந்த அரசர் அவனை வரவேற்று உபசரித்தார்... தான் கொண்டு வந்திருந்த அபூர்வப் பொருட்கள் பலவற்றை செசாரின் அரசருக்கு வழங்கினான்...

சில பூனைகளை வழங்கிய ஹோராவானிக்கு அவ்வளவு அன்...

...கோட்டை கட்டிக் கொண்டிருந்தான் செசாரி...

அரசர் தமது மந்திரிகளை அழைத்து செசாரிக்கு என்ன அன்பளிப்புச் செய்யலாம் என ஆலோசனை நடத்தினார்...

"அரசே! தன் நாட்டின் அபூர்வப் பொருட்களை தங்களுக்கு அன்பளிப்புச் செய்த அந்த வணிகனுக்கு நமது நாட்டின் அபூர்வப் பொருட்களைத் தான் அன்பளிப்புச் செய்ய வேண்டும்.

ஆகவே நமது நாட்டிலே அபூர்வப் பொருட்களாக இருப்பவை பூனைகளே! இரு பூனைகளை ஒரு கூட்டிலே அடைத்து அந்த வணிகனுக்கு அன்பளிப்புச் செய்து விடுங்கள்" என்று அமைச்சர்கள் அனைவரும் ஒரேமனதாகக் கூறினர்.

அரசர் ஒரு இரும்புக் கூட்டிலே இரண்டு பூனைகளை அடைத்து டொன் சொரிக்கு வழங்கினார். பொறாமைக்காரன் செசாரி அசட்டுச் சிரிப்புடன் அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டான்...

என் நெஞ்சில் நீக்கமற
நிறைந்திருந்தாய் அன்று!
நினைவுகளின் நிழலாகி
வாட்டுகின்றாய் இன்று!
உனக்காக உயிர் வாழும்
என் வாழ்வில் இது போதும்!
எதிரெதிராய் எனைக் கண்டும்
நீ பார்க்கும தோரணை ஏன்?
இன்னுமின்னும் எதனை நீயும்
எதிர்பார்ப்பதைச் சொல்லி விடு!

★ எஸ் நந்தா

## ஏமாந்தேன்!

எல்லாமே முடிந்து விட்டதனால்
எல்லைத் துயர் கண்டுவிட்டேன்!
எனக்கென்று இனி எவருமில்லை
எல்லாம அவன் செயல் என்றே
எண்ணியெண்ணி வாடுகிறேன்!
ஏமாற்றுவோர் இருக்கும வரை,
என் போன்ற ஏமாளிகளும்
ஏமாறத்தான் செய்திடுவர்!

★ அ ஜெலா

## வாழ்வே மாயம்!

தூயவன் நீ என்றல்லவா
துதித்து நானும நேசித்தேன்!
துணிந்து செய்த தவறுகளால்
துக்கப்பட்டுப் பயனில்லை!
துஷ்டர்கள் சகவாசத்தால்
தூய்மைதனை இழந்திட்டாய்!
துளிக் கண்ணீர் சிந்தினாலும!
துயரங்கள் மறைவதில்லை!
துண்டித்த பாசம இன்று
தூர விலகிப் போகிறது!

★ கன வசந்தி

## இ (பி) றப்பு!

நீர் ஊற்றுக்களை விட
நிலத்தில் எங்கு பார்த்தாலும்
இரத்த ஊற்றுக்களே
இன்று ஏராளம ஏராளம்!
குழந்தைகளின் பிறப்பை விடக்
[illegible]லயத்தில் இன்று எங்கும்
குவிகின்ற பிரசவங்கள்...
அத்தனையும் ஆயுதங்கள்!

★ பர்ஹானா பாயில்

தீவை அடைந்தான்–

இயற்கை அழகுமிக்க அந்தத் தீவை ரசித்தபடி கடற்கரையிலே ஹோவானி நின்றான்... அப்போது இரு சிப்பாய்கள் அவனை நோக்கி வந்தனர்–

"உங்களைப் பார்த்தால் அந்தக் கப்பலின் உரிமையாளர் போல் தெரிகிறது... வாணிபம




டுவதற்கு எங்களால் ஆன அனைத்தும செய்து விட்டோம் ஆனால் பயன் கிடைக்கவேயில்லை..." என்று வேதனையோடு கூறினார் மன்னர்–

"பிரபு! பூனைகளின் உதவியுடன் எலிகளைத் தொலைத்துக் கட்டி விடலாமே? இந்தத் தீவில் பூனைகள் இல்லையா?"

அன்பளிப்புச் செய்கிறேன்... அவை குறுகிய காலத்தில் எலிகளைத் தொலைத்துக் கட்டி விடும..." என்று கூறினான் ஹோவானி!

தீவின் அரசருக்குச் சில பூனைகளை அன்பளிப்புச் செய்து விட்டு பெருஞ் செல்வத்தோடு திருமபியதாகவும மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்...

பலவற்றை செசாரின் அரசருக்கு வழங்கினான்...

சில பூனைகளை வழங்கிய ஹோவானிக்கு அவ்வளவு அன்பளிப்புகளை வழங்கிய அரசர் விலை மதிப்பற்ற பொருட்களை வழங்கிய எனக்கு எவ்வளவு பொருட்களை அள்ளியள்ளித் தரப் போகிறாரோ... என்று தனக்குள்ளேயே மனக்

வழங்கினார்– பொறாமைக்காரன் செசாரி அசட்டுச் சிரிப்புடன் அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டான்...

"பேராசை பெருநட்டம என்று பெரியவர்கள் சொல்வது முற்றிலும உண்மைதான்" என்பதை அவன் அப்போது புரிந்து கொண்டான்–

[இ]

# உதைபந்தாட்டக் கழகங்கள்

# உலகில் 70,000 இருக்கின்றன

## வாரந்தோறும் 1 லட்சம் ஆட்டங்கள்

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை ஒழுங்கு செய்து நடத்திவரும சர்வதேச உதைபந்தாட்ட சமமேளனம 1904 ஆம ஆண்டு மே 21ஆம திகதி பாரிஸ் நகரில் தோன்றியது.

இச்சம்மேளனம ஆரமபிக்கப்பட்ட 26 ஆண்டுகளின் பின்னரே 1930 ஆம ஆண்டு உருகுவேயில் முதல உலக சாமபியன் போட்டி நடத்தப்பட்டது.

1924, 28 ஆம ஆண்டு ஒலிமபிக் உதைபந்தாட்ட சாமபியன் என்ற அடிப்படையிலேயே உருகுவேக்கு, உலக சாமபியன் போட்டியை நடத்தும பொறுப்பு வழங்கப்பட்டது. 13 நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்ட முதல் போட்டியின் போது 18 ஆட்டங்களே நடத்தப்பட்டன.

1930 ஆம ஆண்டு ஜூலை 13ஆம திகதி ஆரமபமான இம முதல் உலகப் போட்டியில் ஆர்ஜன்டீனாவை இறுதியாட்டத்தில் தோற்கடித்த உருகுவே உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

உலகக் கிண்ண முதல் நாள் ஆட்டத்தில் முதல் கோலைப் போட்டவர் ஒரு பிரெஞ்சுக்காரர். மெக்ஸிகோவுக்கும பிரான்சுக்கும இடையில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் பிரெஞ்சு அணி சார்பாக முதல் கோலைப் போட்ட இவரது பெயர் லூசியன் லொரன்ட் என்பதாகும. 82 வயதான இவர் பிரான்சில் வாழ்ந்து வருகிறார்.

உலகெங்கும 70 கோடி உதைபந்தாட்ட ரசிகர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 70 ஆயிரம உதைபந்தாட்டக் கழகங்கள் வாரமொன்றுக்கு ஒரு லட்சம ஆட்டங்களில் கலந்து கொள்கின்றன. இந்த ஆட்டங்கள் மூலம கிடைக்கும வருமானம சில வளரும நாடுகளின் வருடாந்த பட்ஜெட் தொகையை விட அதிகம.

இத்தாலி 90 போட்டியில் பஙகெடுத்துக் கொள்ள 120 நாடுகள் தெரிவாட்டஙகளில் கலந்து கொண்டன. இரண்டாண்டுகளாக உலகெஙகும நடைபெற்ற இந்த 300 ஆட்டஙகளில் தெரிவான 24 அணிகளே இப்போது இத்தாலியில் ஒன்றையொன்று சந்திக்கவுள்ளன.

இந்த 24 அணிகளில் 14 ஐரோப்பாவைச் சேர்ந்தவை, அமெரிக்கா 40 ஆண்டுகளின் பின்னரும எகிப்து 56 ஆண்டுகளின் பின்னரும இமமுறை உலகக் கிண்ணப் போட்டியில கலந்து கொள்ளும வாய்ப்பைப் பெற்றுள்ளன.

முதல் தடவையாக அரபு நாடொன்று, ஐக்கிய அரபு குடியரசு, இறுதி சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த முறை 1986 ஆம ஆண்டு இறுதி சுற்றாட்டஙகளில் கலந்து கொண்ட 24 அணிகளில் இமமுறை இத்தாலிக்குச் செல்லும வாய்ப்பைப் பெற்றவை, இஙகிலாந்து, உருகுவே, ரஷ்யா மேற்கு ஜெர்மன் பிரெஸ்சில், தென்கொரியா ஸ்பெயின், பெல்ஜியம, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகள் மட்டுமே.

இமமுறை கிண்ணத்தைக் கைப்பற்றலாம என எதிர் பார்க்கப்படும இத்தாலி ஏற்கனவே 1934 38 ஆம ஆண்டுகளில் வெற்றிபெற்று உலக சாமபியனாக வந்திருக்கிறது. 1958, 62, 70 ஆம ஆண்டு போட்டிகளில் பிறெஸ்சில் வெற்றியீட்டியது. நெதர்லாந்து 1974, 78 ஆம ஆண்டுகளில் வெற்றியீட்டியது.

உலகக் கிண்ண வரலாற்றைப் பார்க்கும போது தென் அமெரிக்க நாடொன்று ஐரோப்பிய மண்ணில் ஒரே ஒரு தடவை மட்டுமே வெற்றியீட்டியிருக்கிறது என்று தெரியவருகிறது.

1958 ஆம ஆண்டு சுவீடனில் பிறெஸ்சில் வெற்றி பெற்றதைத் தான குறிப்பிடுகின்றாம.

ஐரோப்பிய மண்ணில் ஆர்ஜன்டீனா எப்போதும எடுபடுவதில்லை.

பொதுவாகவே போட்டியை ஏற்று நடத்தும நாட்டு அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுவது வழக்கம.

இதுவரை ஒரு ஐரோப்பிய அணிகூட தென்அமெரிக்க நாடொன்றில் உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் எண்ணிக்கையை விட சர்வதேச உதைபந்தாட்ட சமமேளனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகம.

ரோம ஒலிமபிக் அரஙகில் இறுதியாட்டம நடைபெற்று முடிந்ததும அமமைதானத்தை 20X13 மற்றும 6.5X5 செனறி மீட்டர் அளவு கொண்ட மூன்று லட்சத்து ஆறாயிரம துண்டுகளாக பாகக்கப் போகிறார்கள்.

இத்துண்டுகள் ஒவ்வொன்றும 85 அல்லது 170 டாலருக்கு விற்பனை செயயப்படும. உதைபந்தாட்டப் பித்துப் பிடித்தவர்களுக்கு நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்வதற்காகத்தான் இப்படி ஒரு விநோத ஏற்பாடு!

(இ–032)

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

செல்வன் எம் மகேந்திரன்,
அலவத்துகொட.

கே— என் காதலி அடிக்கடி என் மீது "சந்தேகப் படுகிறாள் இதற்கு என்ன செய்வது?

ப— எதுபற்றிச் சந்தேகம்? நீர் அப்படி என்ன மன்மதனா?

★

இ அலாவுதீன்,
இ பலுல்தீன்,
பொ/திவுளானை.

கே— பெண்களின் உடைகளை ஆண்கள் அணிந்தால் துணி விலை கூடுமா?

ப— நிச்சயமாக! ஒன்றுக்கு இரண்டு காஞ்சிபுரம் தேவைப் படும் அல்லவா?

★

ஏ பீ மன்சூர்,
கெகுணகொல்ல.

கே— இன்றைய உலகில் சிறந்த ஆட்சியாளர் எனத் தாங்கள் கருதக் கூடியவர் யார்?

ப— சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவைச் சொல்லலாமா?

★

எம் எம் ஹாத்தில்,
இசட் ஏ எம் நஜீப்தீன்,
வறக்காமுறை.

கே— "இருண்டவன் கண்ணுக்கு மருண்டது எல்லாம் பேய்" என்பார்களே — தங்களின் கண்களுக்கு எது பேய்?

ப— பிழையாகச் சொல்கிறீர்களே — "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுதான் பழமொழி.

★

ஆர் சுலைஹா ராசிக்,
மதவாச்சி.

கே— பெண்கள் தாம் அடங்கி நடக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே — ஆண்களுக்கும் அடக்கம் தேவை இல்லையா?

ப— ஆண்கள் ஏற்கனவே அடங்கிப் போய் விட்டார்கள்! அதனால் தான் இப்போது பெண்களுக்குப் புத்தி சொல்கிறார்கள்!





ஔவையார்

கும் இரவில் காணும் கனவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப— இராக்கனவு படுக்கையில் மட்டும் வரும்! பகல் கனவு ஆபீஸ் நாற்காலியிலும் வரும்!

★

இர்ஷாட் தைபுதீன்,
வறக்காமுறை.

கே— அன்றைய புலவர்கள் பெண்களின் முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பிட்டார்கள்! ஆனால் இன்றும் அவ்வாறு கூற முடியுமா?

ப— என்றும் கூற முடியும்! ஏனென்றால் இன்றுவரை சந்திரன் அழகாகத்தானே இருக்கிறது!

★

எம் எச் ஸகரியா,
கல்ஹின்னை.

கே— ஊமை கனவு கண்டால் அதை எப்படி சொல்வான்?

ப— சொல்லத் தவிப்பான் என்பதாலேயே "ஊமை கண்ட கனா போல" என்ற பழமொழி வழக்கில் வந்தது!

★

பௌசுல் ஹினாயா,

வேண்டிய முக்கியமான அழகு எது?

ப— பெண்ணுக்கு அழகு தருவது அவளுடைய தலைமுடி என்று ஔவைப் பிராட்டியே சொல்லி விட்டாரே! "குஞ்சியழகு" என்று நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?

★

முஹம்மது பைஸல் ஹபீள்,
வெலிகாமம்.

கே— பெண்களின் மனதைக் கவரும் மலர் எது?

ப— மனோரஞ்சித மலராகத்தான் இருக்க வேண்டும்!

★

பி விஜே ஸுந்தர்,
அலுத்கம.

கே— பேசுவதற்கும் கேட்பதற்கும் இனிமையான மொழி எது?

ப— அவரவரின் தாய்மொழி ஒன்றுதான், கேட்பதற்கும் பேசுவதற்கும் இனிமையாக இருக்கும் — வேறு மொழிகள் இனிமை என்று சொல்வதெல்லாம் வெறும் பம்மாத்து!

★

செல்விகள் ரிஸ்னா ஜிப்ரி,
ரிஸ்வியா றஹீம்,
தர்கா நகர்.

கே— மதுரையை எரித்த கண்ணகியைப் போன்ற காரிகைகளை நீர் சந்தித்ததுண்டா?

ப— அவசியம் இல்லை! ஏனென்றால் தீப்பெட்டி இப்போது மலிவு விலையில் கிடைக்கிறதே!

★

எம் இஸட் றிஸ்வி அஹமட்,
வரக்காப்பொல.

கே— நீங்கள் உங்கள் மனைவிக்காகக் கண்ணீர் சிந்திய சந்தர்ப்பம் ஏற்பட்டதுண்டா?

ப— தலைப் பிரசவத்தில் அவர் தத்தளித்த போது!

★

க பாலசுப்பிரமணியம்,
சேவுட்.

கே— மனம் அமைதியாக இருக்க ஒரு வழி கூறுங்கள்?

ப— ஒரே வழி தியானம் தான்!

எஸ் ஆயிசா,
சித்தி லறிபா,
வகமல்கொல்லாவ—

கே— "சீனா தேசம் சென்றேனும் சீர் கல்வியைக் கற்றுக் கொள்" என இஸ்லாம் மதம் கூறுகிறதே — இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப— சீனா அந்தக் காலத்தில் கல்வியில் சிறந்த நாடாக இருந்திருக்கிறது என்பது இந்த கூற்றால் தெரிகிறது!

★

பாய்ஸா,
மண்தண்டாவெலை—

கே— உங்களது கல்யாணம் காதல் கல்யாணம் தானே? அதில் மலரும் நினைவுகள் உண்டா?

ப— அப்பப்பா! ஏராளமாக உண்டப்பா நீ ஒரு பொல்லாத பெண்ணப்பா!

★

செல்வி— ஈஸீஹா,
சீனன்கோட்டை—

கே— "தாய் சொல்லைத் தட்டாதே" என்றால் தந்தை சொல்லைத் தட்டலாமா?

ப— நாம் தட்ட எத்தனித்தால் அவரே தட்டி விடுவாரே! அந்த நிலையில் தாய் இல்லை! அதனால் நம்மைத் தட்ட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்!




பண்டைய இராட்சத டைனோசரை உருவகித்து தீட்டப்பட்ட வரைபடம். (ம)

# இராட்சத டைனோசர் மறைந்த மாயம் என்ன?

டைனோசர் என்ற பொது வான பெயரில் அழைக்கப்பட்டு வந்த இராட்சத மிருகங்கள் சுமார் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் வாழ்ந்து வந்தன. மெஸோசொய்க் என்று அழைக்கப்படும் காலப்பகுதிக்கு முன்னர் உலகில் காணப்பட்ட இவை இக்காலப் பகுதியின் முடிவில் உலகில் இருந்து முற்றாக மறைந்து விட்டன.

இந்த டைனோசர்கள் ஆரம்பத்தில் பல்லி மற்றும் உடும்பைப் போன்றுதான் சிறியதாகக் காட்சியளித்தன. ஆனால் அன்றைய இயற்கை வளங்கள் அவற்றின் வளர்ச்சிக்கு மிகச் சாதகமாக இருக்கவே பிரமாண்டமான உருவங்களைக் கொண்டதாக இவை விரைவிலேயே உருமாறின.

சில வகை டைனோசர்கள் ஐம்பது தொன் எடை கொண்டவையாகவும் இருந்தன என்றால் எவ்வளவு பிரமாண்ட தோற்றம் கொண்டவையாக அவை இருந்திருக்க வேண்டும்!



பட்ட மாற்றமே இவற்றின் வாழ்க்கை முறை மற்றும் உணவு வசதிகளைப் பாதித்து அவற்றின் அழிவுக்கும் காரணமாயிற்று என்பது ஒரு கோட்பாடு.

விண் கற்கள் சரமாரியாக பூமியைத் தாக்கியதாகவும் அல்லது பூமிக்கருகே சிதறிப் போன ஒரு பாரிய வால் வெள்ளியின் லட்சக்கணக்கான துண்டுகள் பூமியைத் தாக்கி புகை மண்டலத்தை எழுப்பியதாகவும் நெருப்பும் புகையுமாக காற்று மண்ட

தனிமைப்பட்டுப் போன அவை போதிய உணவின்றி மடிந்திருக்க வேண்டுமென்பதும் வேறு ஒரு கோட்பாடாகும்.

டைனோசர்களின் காலகட்டத்தில் ஏனைய பாலூட்டிகளும் தலையெடுக்க ஆரம்பித்தன. இவை டைனோசர்களின் முட்டைகளையும், குட்டி டைனோசர்களையும் பதம் பார்க்க ஆரம்பித்ததால் இனப் பெருக்கமின்றி இப்பிரமாண்ட இனம் அழிந்தொழிந்தது.

இங்கு ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

அழிந்து போனதாகக் கருதப்படும் டைனோசர்கள் உலகின் எங்காவது ஒரு கண்காணாத மூலையில் இருக்கக் கூடுமா? அது சாத்தியமா?

சாத்தியம் என்பதை இரண்டு காரணங்களைக் கொண்டு சொல்ல முடியும்.

மத்திய ஆபிரிக்காவின் கொங்கோ சதுப்பு நிலப்பகுதியின் மனிதர் அண்டாத அடர்ந்த கானகத்தில் டைனோசரையொத்த பெரும் மிருகமொன்று நடமாடி வருவதாக அப்பகுதி ஆதிவாதிகள் கூறுகின்றனர்.

இம்மிருகம் எப்படியான தோற்றம் கொண்டது என்று கேட்கப்பட்ட போது அவர்கள் கூறிய பதில்கள் டைனோசரைச் சுட்டுவதாகவே இருந்தன.

யானையைப் போல பெரியது. ஆனால் பாம்பைப் போன்ற நீள உடலமைப்பு கொண்டது. வாலும் காணப்படுகிறது என்று



லீ குவான்யூ

★

எம அஸ்வத் ஹுசைன்,
நாவலப்பிட்டி.

கே– கமலஹாசன், ரஜனிகாந்த், பிரபு, சத்யராஜ், விஜயகாந்த் ஆகிய ஐவருடைய நடிப்பிலும் உங்களுக்கு எவருடைய நடிப்பு மிகவும் பிடிக்கும்?

ப– ரஜனியின் நடிப்புத்தான்!

★

எம பிசுருள் ஹுதா,
காலி.

கே– நீங்கள் ஒரு விஞ்ஞானியாக இருந்தால் முதலில் எதைக் கண்டு பிடிப்பீர்கள்?

ப– பசி போக்கும் குளிகையை!

★

சு சரவணன், ரமேஸ்,
உறுகல – எஸ்டேட்.

கே– வெட்கப்படும் பொழுது பெண்கள் எப்படியிருக்கிறார்கள்? ஆண்கள் எப்படியிருக்கிறார்கள்?

ப– பெண்கள் மேலும் அழகாக இருக்கிறார்கள்! ஆண்கள் மேலும் கோழைகளாக ஆகி விடுகிறார்கள்!

★

ஒ எம நவாஸ் மும்தாஜ்,
தெல்தெனிய–

கே– மனிதன் நிம்மதியாக வாழ என்ன தேவை?

கே– ஓரளவு பணம் – பின்னர் போதும் என்ற மனம்!

★

செல்வி ரிஸ்வியா சனூர்தீன்,
உயன்வத்த.

கே– பகலில் காணும் கனவுக் [...]

[...] ப– சொல்லத் தவிப்பான் என்பதாலேயே "ஊமை கண்ட கனா போல" என்ற பழமொழி வழக்கில் வந்தது!

★

பௌசுல் ஹினாயா,
அஸ்வத்தும.

கே– கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று கூறுபவர்களைப் பற்றிச் சில வரிகள் கூறுங்களேன்?

ப– பாவம்! அவர்கள் தேன் சுவை அறிய விரும்பாத சிற்றெறும்புகள்!

★

செல்வி சபியா சரீப்,
மக்கொன.

கே– மனிதனின் வெற்றிக்குக் காரணம் என்ன?

ப– காரணங்கள் இரண்டு! ஒன்று விடா முயற்சி... மற்றது பிராப்தம்!

★

செல்வி நுசுரா அஸீஸ்,
மாத்கொளை–

கே– ஒரு பெண்ணுக்கு இருக்க [...]



ரஜனிகாந்த்

[...] தத்தளித்த போது?

★

க பாலசுப்பிரமணியம,
சேவுட்.

கே– மனம் அமைதியாக இருக்க ஒரு வழி கூறுங்கள்?

ப– ஒரே வழி தியானம் தான்!

★

சுலோச்சனா பழனிசாமி,
மாத்தளை–

கே– உங்களுக்குத் திடீரென "லொட்டோ" சீட்டிழுப்பில் முதற் பரிசு கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

ப– கிடைக்காது! ஏனென்றால் நான் லாட்டரிச் சீட்டுக்களை ஒருபோதும் வாங்குவதில்லை! பாடுபட்டு உழைத்துச் சம்பாதிப்பதில் நம்பிக்கையுடையவன் நான்!

★

எம எஸ் எப் ரபீக்கா,
வறக்காமுறை.

கே– வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது "ஏண்டா இதில் மாட்டிக் கொண்டோம்" என்று எண்ணியது உண்டா?

ப– மாட்டிக் கொள்வதிலும் ஒரு இன்பம் இருக்கிறது அல்லவா!

★

எல் எஸ் ராஜா,
மத்தளை–

கே– பயப்பட வேண்டிய நால்வரில் மனைவியையும் சேர்த்து நடந்த வாரப் பதிலில் கூறியிருக்கிறீரே? அப்படி என்ன? நீர் மனைவிக்குப் பயந்துதான் வாழ்கிறீரோ?

ப– நான் வெறும் மனைவி என்று சொல்லவில்லையே– மனையாள் என்று அல்லவோ சொல்லியிருக்கிறேன் மனையை ஆளுகின்ற சிறப்புடைய ஓர் அரசி போன்ற பெண்மணியின் தர்ம ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்பது இதன் பொருள். இதைப் பயந்து நடப்பது என்றும் கொள்ளலாம் அல்லவா?

சில வகை டைனோசர்கள் ஐம்பது தொன் எடை கொண்டவையாகவும் இருந்தன என்றால் எவ்வளவு பிரமாண்ட தோற்றம் கொண்டவையாக அவை இருந்திருக்க வேண்டும்!


டைனோசர்கள் பிரமாண்டமான தோற்றம் கொண்டவையாக காணப்பட்டாலும் பெரும்பாலானவை தாவரபட்சிணிகளாகவே இருந்தன. நிறைய நீரும், சுத்தமான காற்றும், புதிய மண்ணும் ஏராளமாக இருந்த கால் தாவரங்களும் பிரமாண்டமான தோற்றம் கொண்டவையாக, அடர்த்தியாக வளர்ந்தன.

டைனோசர்களும் வயிறு நிறைய இவற்றை உண்டு உடலை வளர்த்துக் கொண்டன. இதே சமயம் வேறு சில டைனோசர்கள் மாமிச பட்சணிகளாகவும் விளங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது.

சில டைனோசர்கள் நான்கு கால்களைப் பயன்படுத்தின. சில இரு பின்னங்கால்களை உபயோகித்து நடக்க ஆரம்பித்தன.

டைனோசர்கள் எப்படி உலகில் இருந்து அழிந்து மறைந்தன என்பது இன்னும் சிதம்பர ரகசியமாகவே இருந்து வருகிறது. டைனோசர்கள் மறைவுக்கு விடை காண பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் சரியான விடையை யாருமே அறியார்.

டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் உலகில் வேகமாக மாற்றங்கள் நடந்து வந்தன. சிறிய உருவம் கொண்ட இவை பிரமாண்டமான தோற்றத்தைப் பெறுவதற்கு எந்த இயற்கைச் சூழல் காரணமாக இருந்ததோ அதே இயற்கைச் சூழலில் ஏற்[...]



புதை பொருள் ஆய்வாளர்கள் மீட்டெடுத்த ஒரு இராட்சத டைனோசரின் எலும்புக் கூடு. பிரிட்டிஷ் நூதன சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. (ம)

[...]லத்தில் உயர எழும்பி சூரிய வெளிச்சத்தை நீண்ட நாட்களுக்கு மறைத்ததாகவும் ஒரு கோட்பாடு கூறுகிறது.

இதனால் சூரிய வெளிச்சம் மறைக்கப்பட்டு உலகை அந்தகாரம் சூழ்ந்தது; இதைத் தொடர்ந்து தாவரங்கள் சூரிய வெளிச்சமின்றி வாடிப் போயின.

இதனால் டைனோசர்களுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. மேலும் தாவரங்களுக்கும் மிருகங்களுக்கும் சுவாசிக்க முடியாது போனது.

பெருந்தீனியை உணவாகக் கொள்ளும் டைனோசர்கள் இச்சூழ்நிலையைத் தாங்க முடியாமல் மடிந்து மறைந்து போயின என்பது இக்கோட்பாடு.

நிலப்பகுதி ஒன்றை விட்டு ஒன்று விலகிச் செல்ல ஆரம்பித்த போது பக்டீரியா நோய்களுக்கு டைனோசர்கள் ஆளாகி மறைந்திருக்க வேண்டும் என்பதும் கண்டங்கள் நகர்ந்ததால் [...]

இப்படி பல்வேறு கோட்பாடுகள் டைனோசரின் திடீர் மறைவுக்கு விளக்கம் சொல்கின்றன. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் மொன்டானா என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது பாறையாகிப் போன சில டைனோசர் முட்டைகளும் குட்டி டைனோசர்களின் எலும்புகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

பறவைகள் குஞ்சுகளுக்கு இரையூட்டுவதைப் போலவே டைனோசர்களும் நடந்துகொண்டன என்பதையே இது எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

டைனோசர்கள் அழிந்து போனாலும் அவற்றை நினைவு கூர்ந்திடத்தக்கதாக பல பிராணிகள் இப்போதும் உலகில் இருந்து வருகின்றன. டைனோசரைப் போன்ற ஆனால் சிறிய உருவங் கொண்ட பிராணிகள் அடர்ந்த காடுகளில் வசித்து வருகின்றன.

[...] யானையைப் போல பெரியது. ஆனால் பாம்பைப் போன்ற நீள உடலமைப்பு கொண்டது. வாலும் காணப்படுகிறது என்று அவர்கள் இம்மிருகத்தின் அடையாளங்களைச் சொன்ன போது டைனோசரையே அது குறிப்பதாக உயிரியல் நிபுணர்கள் உணர்ந்து கொண்டனர்.

கொயிலகாந்த் என்பது லட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மீனினத்தின் பெயர். ஆரம்பகால மீனினமான இந்த கொய்லகாந்த் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மறைந்து போனது

இது உயிரியல் விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் இம்மீன் உயிருடன் கடலில் இருந்து பிடிக்கப்பட்ட போது உயிரியல் துறையில் இச்சம்பவம் ஒரு அதிர்ச்சி அலையையே ஏற்படுத்தியது.


மறைந்து போன ஒரு மீனினம் இப்போதும் எப்படி வாழ்ந்து வர முடியும்? இது சாத்தியமானால், டைனோசர் ஒன்று வீதி வழியாகச் சென்றது என்று யாராவது நாளை என்னிடம் சொன்னாலும் அதையும் நான் நம்பவே செய்வேன் என்றார் ஆச்சரியம் தாள முடியாத ஒரு உயிரியல் அறிஞர்.

கொங்கோ சதுப்பு நிலத்தில் உலவி வருவது காலத்தோடு எதிர்நீச்சல் போட்ட ஒரு டைனோசரா? இதைத் தவிர உலகின் கண்காணா மூலைகளில் இதே போன்ற மறைந்து போனதாகக் கருதப்பட்டு ஊரும் பண்டைய உயிரினங்கள் இயற்கையின் விசித்திர சக்தியால் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா?

(ம–032)

WOMAN & HOME

# மனையும் மங்கையும்



## பெண்களுக்கும் முடி உதிர்ந்து வழுக்கைத்தலை ஏற்படுமா?

### அதற்கு நிவாரணம் கண்ட அமெரிக்கர்

முப்பது வயதைத் தாண்டிய ஆண்கள் எதிர்நோக்கும் பெரும பிரச்சினை தலை வழுக்கையே! தலைமுடி உதிர்வதைத் தடுக்க இன்ற கடைகளில் ஏகப்பட்ட மருந்துகள் கவர்ச்சிகரமான உறுதி மொழிகளுடன் கிடைத்து வந்தாலும் உண்மையில் வழுக்கையைத் தடுத்து நிறுத்த மருந்து இன்னும கண்டுபிடிக்க வில்லை என்பதே உண்மை,

எவராவது ஒருவர் வழுக்கை விழுவதைத் தடுத்த நிறுத்த நம்ப கமான ஒரு மருந்தைக் கண்டு பிடிப்பாரானால் ஒரே நாளில் அவர் உலகப் பெரும கோடீஸ்வரராகி விடுவார் என்பது நிச்சயம.

ஏனெனில் வழுக்கையை நிறுத்த மருந்து கிடைக்காதா என்று யோசித்தபடி உலகெங்கும லட்சக்கணக்கான வழுக்கையர்கள் தமது மொட்டைத் தலையைச் சொறிந்த வண்ணம இருக்கிறார்கள்.

இவர்களுக்கு ஆறுதல் தரக் கூடிய வகையில் அமெரிக்காவில் மினொக்ஸிடில் என்ற பெயரில் மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது- நமபகமான பலனை இம்மருந்து தருகிறதாம, இதைத் தொடர்ந்து அமெரிக்காவில் இம்மருந்தைப் பெண்களுக்கும் சிபாரிசு செய்திருக்கிறார்கள்-

ஆண்களுக்கு வழுக்கை விழுந்தாலும பரவாயில்லை, சமாளித்துக் கொள்வார்கள். ஆனால் சில பெண்களுக்கு முடி உதிர்ந்து உச்சந்தலையில் மெல்லியதாக இளம பிறை உதயமாவது உண்மையில் கவலைக்குறிய விஷயம ஆகும.

ஆண்களுக்கு வழுக்கை விழுந்தாலும அதை தன் முதிர்ச்சிக்கும கௌரவத்துக்கும அடையாளமாக அவர்களால் காட்டிக் கொள்ள முடியும ஆனால் பெண்கள் நிலையோ பரிதாபகரமானது!

இம்மருந்து முடி உதிர்வுக்கு ஆளாகியிருக்கும பெண்களிடையே பெரும வரவேற்பைப் பெறும என்பதில் சந்தேகம கொள்ளவே தேவையில்லை விலான மருந்தை பெண்கள் தினத்துக்கு இரண்டு தடவைகள் தலையில் பூசிக் கொள்ள வேண்டும- இதை இடை நடுவில் விட்டுவிட முடியாது. கடைசிவரை தொடர்ந்து பூசி வந்தால்தான் புதிதாக வளர்ந்த மயிர்கள் உதிர்ந்துவிடாமல் இருக்கும

மேலும நான்கு மாத காலத்தின் பின்னரே சிகிச்சையின் பலன் தெரிய ஆரமபிக்கும. அப்புறம முடி உதிர்வை சுத்தமாக இது நிறுத்திவிடும என்ற சொல்லி விடுவதற்கில்லை கட்டுப்படுத்தும அவ்வளவுதான்-

ஆண்களுக்கும பெண்களுக்கும நமபிக்கை அளித்துள்ள இந்த வளர்ந்த மயிர்கள் உதிர்ந்து விடா மினொக்ஸிடில் எப்படி கண்டு பிடிக்கப்பட்டது என்பது ஒரு சுவாரஸ்யமான விடயம்-

உயர் இரத்த அழுத்த நோய்க்கென ஒரு மருந்து கண்டு பிடிக்கப்பட்டது- இம மருந்து வியாதியஸ்தர்களுக்கு கொடுக்கப்பட்ட போது அவர்களது தலைக்கேசம வேகமாகவும் அடர்த்தியாகவும் வளர்வதை டாக்டர்கள் கவனித்தனர்-

இதைத் தொடர்ந்தே வழுக்கையர்களுக்கு ஆறுதலை அளிக்கக் கூடிய இம் மருந்து கண்டு பிடிக்கப்பட்டது-

சிலருக்கு இயற்கையாகவே முடி உதிர ஆரமபிக்கிறது வேறு சிலருக்கு மருந்துகளின் பக்க விளைவுகளினால் முடி உதிர...

...புகளை அமைதிபடுத்தும மருந்துகள் கர்ப்பத்தடை மாத்திரைகள், இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகள் அதிகப்படி விட்டமின் ஏ ஆகியவை முடி உதிர்வுக்குக் காரணங்களாக அமைகின்றன-

(இ 032)

## கருச்சிதைவுக்கு ஆளாகும் பெண்களுக்குப் புது வாழ்வு

கருச் சிதைவுகள் பெருமளவில் பெண்களின் கர்ப்பப் பருவத்திலேயே தான் ஏற்படுகின்றன- இதனால் பெண்கள் உடல் உள ரீதியாக பெரிதும பாதிக்கப்படுகின்றனர்-

தாயின் வயிற்றில் வளரும சிசுவில் சில குறைப்பாடுகள் உண்டாகுவதால் கருச்சிதைவு ஏற்படுவது வழக்கம- கருவுற்ற மூன்று மாதங்களில் கருச்சிதைவு உண்டாவதுண்டு-

குறைப்பாடுடைய குழந்தை ...

மூன்று மாத காலத்தில் உடல் உறவு வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது-

கருச்சிதைவு ஏற்பட்ட பின்னர் எவ்வளவு நாள் கழித்து உடல் உறவு வைத்துக் கொள்ளலாம? இன்னுமொரு குழந்தையைப் பற்றி, எப்பொழுது சிந்திக்கலாம? என்ற பல கேள்விகள் தாயாக விருமபும பெண்ணின் மனதில் அலைமோதுவதுண்டல்லவா-

...றவை தள்ளிப் போட வேண்டியதில்லை-

கருச்சிதைவு ஏற்பட்டு பேரிழைப்பு ஏற்பட்டால் பாரிய ஏமாற்றம ஏற்படும- எனவே அப்படிப்பட்டவர்கள், கருச் சிதைவின் பின் உடலுறவு

கொள்ள (மன அளவில்) தயாராக இருக்க மாட்டார்கள்-

இப்பிரச்சினையை கணவனும, மனைவியும நல்ல விதத்தில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும-

## ஆரம்பக் கட்டத்தில் மார்பு புற்று நோயை விரட்ட நவீன சிகிச்சை

பெண்களை அழிக்கும ஆட்கொல்லி நோயாக மார்பகப் புற்றுநோய் உருவெடுத்துள்ளது. ஆரமப கட்டத்திலேயே மார்பகப் புற்றைக் கண்டு பிடித்து சிகிச்சை அளித்தால் பிழைக்க முடியும, நோய் முற்றி, ஏனைய இடங்களுக்கும புற்று பரவிவிடுமானால் மார்பகப் புற்று நோயைக் குணப்படுத்துவது மிகவும அரிது. ஏனெனில் நோய் முற்றிய ஒரு பெண்மணி இரண்டாண்டு காலமே உயிர் வாழ முடியுமாம!

மார்பகப் புற்றுநோயைக் குணப்படுத்த இரசாயன சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை நோயைக் குணப்படுத்தக் கூடியனவாக இருந்த போதிலும சில பக்க விளைவுகளையும உருவாக்கி விடுகின்றன

புற்று நோய்க் கட்டிகளைத் தாக்கி அழிக்கும இந்த இரசாயன சிகிச்சை, இரத்தத்தை உற்பத்தி செய்யும எலும்பு மச்சையையும பாதித்து விடுகின்றது, இதனால் இரத்த உற்பத்திக் குறைவுக்கு நோயாளி ஆளாகி விடுகிறார்,

இந்த ஆபத்தைத் தவிர்க்கும வகையில் பதுமுறை ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள் அமெரிக்க புற்றுநோய் ஆய்வாளர்கள். இதன் பிரகாரம ஒரு நோயாளி தீவிர இரசாயன சிகிச்சைக்கு ஆளாக்கப்படும முன்னர் அவரது எலும்பு மச்சையில் சிறிதளவு அகற்றப்படுகிறது. சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும மச்சை எலும்பில் வைக்கப்பட்டு விடுகிறது. எலும்பு மச்சையைப் பாதுகாக்கும இந்த சிகிச்சை ...

சிசுவில் சில குறைப்பாடுகள் உண்டாகுவதால் கருச்சிதைவு ஏற்படுவது வழக்கம். கருவுற்ற மூன்று மாதங்களில் கருச்சிதைவு உண்டாவதுண்டு.

குறைப்பாடுடைய குழந்தைகள் பிறப்பதை தடுக்க இயற்கையாளும் வழி முறையே இது என்று கூறலாம்.

நல்ல உடல் நலம் உடைய பெண்களிடையே ஏழு பிரசவங்களுக்கு ஒன்று வீதம் இவ்வாறு சிசு முதிர்ச்சியடையும் முன்னே கருச்சிதைவில் முடிவடைவது உண்டு.

கருவுற்ற பெண்ணுக்கு அதிகமான காய்ச்சல் போன்ற நோய் [illegible] ஏதாவது ஏற்பட்டால் இவ்வாறு கருச்சிதைவு ஏற்படுவதுண்டு.

ஒரு சில பெண்களுக்கு இவ்வாறு மீண்டும், மீண்டும் கருச்சிதைவு உண்டாவது உண்டு. எனவே அவர்கள் கருவுற்ற காலத்தில் நேர்ந்த சிக்கல்களை ஆராய சிறப்புப் பயிற்சி பெற்ற டாக்டர்களை நாட வேண்டும்.

கருப்பை வாயில் ஏதாவது குறைபாடு இருந்தாலும் இவ்வாறு கருச்சிதைவு ஏற்படுவதுண்டு.

இந்த கருச்சிதைவை எப்படி தவிர்க்கலாம். அதற்கான சிறந்த வழிமுறைகள் எவை?

முன்பே ஒரு முறை கருச்சிதைவு உண்டாகியிருந்த மீண்டும் [illegible] அதனால் நல்ல சத்துள்ள உணவை உண்ண வேண்டும்.

போதுமான உறக்கம் அவசியம். [illegible] ஒழுங்கான [illegible] உடல் நிலையை ஒழுங்குப்படுத்த வேண்டும்.

அத்தோடு கருவுற்ற முதல்

பற்றி, எப்பொழுது சிந்திக்கலாம்? என்ற பல கேள்விகள் தாயாக விரும்பும் பெண்ணின் மனதில் அலைமோதுவதுண்டல்லவா.

கருச்சிதைவு ஏற்பட்ட பின்னர், அந்தப் பெண் நல்ல உடல்

கொள்ள (மன அளவில்) தயாராக இருக்க மாட்டார்கள்.

இப்பிரச்சினையை கணவனும், மனைவியும் நல்ல விதத்தில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும்.

(இ-455)

னது!

இம்மருந்து முடி உதிர்வுக்கு ஆளாகியிருக்கும் பெண்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகம் கொள்ளவே தேவையில்லை.

ஆனால் இந்த லோஷன் வடி

தக கூடிய இ- மருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

சிலருக்கு இயற்கையாகவே முடி உதிர ஆரம்பிக்கிறது. வேறு சிலருக்கு மருந்துகளின் பக்க விளைவுகளினால் முடி உதிர ஆரம்பிக்கிறது. மூட்டு வீக்க நோய் எதிர்ப்பு மருந்துகள், நரம

ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள் அமெரிக்க புற்றுநோய் ஆய்வாளர்கள். இதன் பிரகாரம் ஒரு நோயாளி தீவிர இரசாயன சிகிச்சைக்கு ஆளாக்கப்படும் முன்னர் அவரது எலும்பு மச்சையில் சிறிதளவு அகற்றப்படுகிறது. சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் மச்சை எலும்பில் வைக்கப்பட்டு விடுகிறது. எலும்பு மச்சையைப் பாதுகாக்கும் இந்த சிகிச்சை முறை வெற்றியளித்துள்ளதாம்!

(ம-032)

# சுத்தமான பாதங்கள்

## பெண்களுக்கு பேரழகு தர வல்லன

நமது உடல் பாரத்தைச் சுமப்பதால் கால்களைக் கூண்டிப்பாக பேணி வருவது அவசியம்.

பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது வீதியில் செல்பவர்களின் நடையழகையும், அவர்கள் பாதங்களையும் உற்று கவனித்துப் பாருங்கள். அப்போது பெண்கள் உட்பட பெரும்பாலானோர் தமது கால்களை, பாதங்களைக் கவனிப்பதில்லை என்ற உண்மை உங்களுக்குத் தெரிய வரும்.

புழுதியில் கிடக்கும் பாதங்கள் தானே, அதற்கு என்ன கவனிப்பு வேண்டிக் கிடக்கிறது என்பது பெரும்பாலான மக்களின் எண்ணம். இதனால் முகத்துக்கு மட்டும் பவுடர் போட்டு அலங்காரம் செய்து இறுதியில் விடுகிறார்கள். இது தவறு.

காலணிகளை பாலிஷ் செய்து சுத்தமாக வைத்திருப்பவர்களும், நகங்களை சீராக வெட்டி, பாதங்களின் அடிப்பாகத்தை தேய்த்துக் கழுவி சுத்தமாக வைத்திருப்பவர்களும் ஏனையோர் மனதில் கௌரவமான இடத்தைப் பெறுகிறார்கள். இவரை நம்பலாம் என்றும் மரியாதையான மனிதர் என்றும் அபிப்பிராயம் எழுகிறது.

அசுத்தமான பாதங்களைக் கொண்டவர்கள் ஏனையோர் மனதில் வெறுப்பையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி நலத்துடன் இருந்தால் உடனே விடுகிறார்கள். இது அனுபவபூர்வமான ஒரு உண்மை.

ஆகவே பாதங்களைச் சுத்தமாக வைத்திருப்பதில் பெண்கள் சிரமம் பாராது அக்கறை காட்டி வர வேண்டும்.

செருப்பா, சப்பாத்தா எதுவானாலும் அளவுக்கு ஏற்றதாக நமது தேர்ந்தெடுக்கும், உடைக்கும் ஏற்றதாக வாங்குவது நலம். அளவான பாதணிகளை அணியாததால் தான் பலரது கால் சுண்டு விரலில் அல்லது பெருவிரல் ஓரத்தில் சதை திரட்சியாக வளர ஆரம்பிக்கிறது.

உராய்வு ஏற்படுவதால் அதைத் தடுக்கும் வகையில் அப்பகுதியில் கடினமான சதை வளர்ந்து விடுகிறது. உடலைச் சுமந்து செல்லும் பாதங்கள் கவனிக்கப்படுவதில்லை என்று பாதம் செய்யும் முறைப்பாடு தான் இந்த சதை வளர்ச்சி! குதி உயர்ந்த முன் பக்கம் ஒடுங்கிய, கூர்மையான காலணிகளை அணிவதால் பல்வேறு கால் உபாதைகளுக்கு நாம் ஆளாகிறோம்.

பெண்கள் குதியுயர்ந்த காலணிகளை எடுப்பான தோற்றம் கருதி அணிகிறார்கள். ஆண்களும் குதியுயர்ந்த காலணிகளை அணிந்து வருகிறார்கள். சிலர் கட்டையாக இருப்பதால் குதியுயர்ந்த காலணிகளை அணிகிறார்கள்.

இவர்களை குறை சொல்வதற்கில்லை. ஆனால் குதியுயர்ந்த காலணிகளை அணிபவர்கள் சாதாரண காலணிகளையும் வைத்திருக்க வேண்டும்.

அவசியமான போது மட்டும் குதியுயர்ந்த காலணிகளை அணிந்தால் போதும், ஏனைய நேரத்தில் சாதாரண காலணிகளை அவர்கள் உபயோகித்து வர வேண்டும்.

ஏனெனில் குதியுயர்ந்த காலணிகளை நீண்ட நேரம் அணிந்திருப்பது நல்லதல்ல, இவர்கள் தூங்கும் படுக்கப் போகும் முன்னர் பாதங்களுக்கு வெந்நீரால் ஒத்தடம் கொடுப்பது நல்ல ஒரு பழக்கம்.

வெயில் மிகுந்த நம நாட்டில் செருப்பு அணிவது ஒரு வரவேற்கத்தக்க பழக்கம், ஆனால் செருப்பு அணிபவர்கள் அடிப்பாதங்களையும், குதிக்கால் பகுதியையும், விரல் இடுக்குகளையும் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டியது முக்கியம்.

சப்பாத்து அணிபவர்கள் விரல் இடுக்குகளுக்கு பவுடர் போட்டுக் கொள்வது ஒரு நல்ல பழக்கம். பெண்கள் இரவில் விரல் இடுக்குகளுக்கு பவுடர் போட்டுக் கொள்ள வேண்டும்.

விரல் இடுக்கின் மடிப்புகளில் தங்கிவிடும் கிருமிகள் பல்வேறு பங்கசு நோய்களைத் தோற்றுவிக்கின்றன. இதனால் சர்க்கரை நோய் கண்டவர்கள் பாதங்களை விசேஷ கவனத்துடன் கவனித்து வரவேண்டியது அவசியம், இந்நோயாளர்களது பாதங்கள் உலர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

உடலின் சிக்கலான நரம்பு வயர்கள் பாதங்களிலேயே முடிவடைகின்றன. ஆகவே பாதம் மிகவும் முக்கியமானது.

பாதங்களில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான நரம்புகள் உடலின் ஒவ்வொரு பகுதியோடும் தொடர்பு கொண்டுள்ளன. இதனால் தான் திருடனிடமிருந்து உண்மையை வரவழைக்க பெரும்பும் போலீஸ்காரர் திருடனைப் படுக்க வைத்து பொல்லால் குதிக்காலில் ஓங்கி ஓங்கி அடிக்கிறார்.

ஒவ்வொரு அடியும் குதிகாலில் வலியை ஏற்படுத்துவதில்லை பதிலாக தலையினுள் விண் விண் என்று தெறித்து விழும்! தலைக்கும் குதி காலுக்கும் இடையே இப்படி ஒரு சம்பந்தம்.

ஜப்பானியர்கள் பாதங்களை விசேஷ மஸாஜ் செய்கிறார்கள், பாதங்களுக்கு மஸாஜ் செய்து ஒவ்வொரு விரலாக உலுக்கி விடும் போது ஏற்படும், சுகமே ஒரு அலாதியானது,

அதிலும் உங்களுக்கு மிகப் பிரியமானவர் அல்லது நெருக்கமானவர் உங்கள் உணர்ச்சி மிகுந்த பாதங்களை பிடித்து விடுவாரானால் அதன் மூலம் கிட்டும் சுகத்தை வார்த்தையால் சொல்லி விளக்குவதில்லை.


வேலை முடிந்து வீட்டுக்கு வரும் உங்களுக்கு கால் வலிக்குமானால் நின்று கொண்டே வேலை செய்ய வேண்டிய நிலையில் நீங்கள் இருந்தால், கொஞ்சம் எப்ஸம் உப்பை வெந்நீரில் கலந்து குளிர் நீரில் அதைச் சேர்த்து விடுங்கள்.

பின்னர் பாதங்களை நீரில் வைத்திருங்கள். மஸாஜ் செய்து விடுங்கள். இது கால்களுக்கு புத்துணர்ச்சியூட்டும். வீட்டில் இருக்கும் போது வெறும் பாதங்களுடன் நடமாடுங்கள், புல் தரையில் வெறுங்கால்களை நீட்டிப் போட்டு நடவுங்கள்.

(ம-032)



# தாயும் சேயும்



# பிள்ளைகளின் வளர்ச்சியில் படிப்படியான மாறுதல்கள்

## அவற்றை அவதானித்து உரியதை செய்திடுங்கள்

ஆணுக்கு போர் எப்படியோ அப்படியே பெண்ணுக்கு பிரசவம் என்பர். போர் கூட சில வேளை சுலபமானதாக இருக்கலாம். ஆனால் ஒரு சிலருக்கு பிரசவம் மறுபிறவியையும் தருவதோடு சிலர் மறுஉலகமே சென்று விடுவதற்கும் ஏதுவாக இருக்கிறது.

முட்டையிடும் கோழிக்கு தான் வலி தெரியும். அதுபோல் பிரசவித்த பெண்ணுக்கு தான் பிரசவ வேதனையின் கொடுமை புரியும். முன்னே பின்னே போயிருந்தால் தானே சுடுகாடு தெரியும். அனுபவமில்லாதோருக்கு சொல்லியோ எழுதியோ புரிய வைக்க முடியாது.

பிரசவத்தின் போது ஒரு பெண் செத்துப் பிழைக்கிறாள். அது ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே தான் [illegible] குழந்தை [illegible] வளர்ப்பது தான் பெரிய கஷ்டம்.

சும்மா மரம் போல வளர்த்து விட்டால் மட்டும் போதாது. ஆரோக்கியத்துடன் அறிவுள்ள பிரஜையாக உருவாக்கி நாட்டுக்கு சமுதாயத்திற்கு பயன் படும் ஒரு ஜீவனாக்க வேண்டும்.

பெரிய சிறார்களிலும் குழந்தைகளை பாதுகாப்பது சற்று கடினம். உணவு விசயத்தில் முக்கிய கவனம் செலுத்தல் அவசியம்.

மாதம், ஐந்தாவது ஏழாவது மாதங்களிலும் கடைசியாக ஒன்றரை வயதிலும் போலியோ தடுப்பு மருந்தை தவறாமல் கொடுக்க வேண்டும்.

அத்துடன் முக்கூட்டு வக்சின் (டிரிப்பல்) எனப்படும் ஊசி மருந்தை ஏற்றிக் கொள்வதால் தொண்டைக் கரப்பான் குக்கல் ஈர்ப்புவலி எனப்படும் கொடிய வியாதிகளில் இருந்து காக்கலாம். இடையில் 9 அவது மாதத்தில் சின்னமுத்து தடுப்பூசியும் போடுதல் கட்டாயமானது.

சிலருக்கு தடுப்பூசியை பற்றி எவ்வளவு சொன்னாலும் புரியாது வர வேண்டிய நோய் வந்துதான் தீரும் என அசட்டுத் தனமாய் பேசும் அறிவிலிகளும் நம்மத்தியில் இருக்கிறார்கள். நோய் வந்தபின் தூக்கிக் கொண்டு ஓடாமல் வருமுன் காப்பதே சாலச் சிறந்தது.

அரசாங்க வைத்தியசாலையில் இத்தடுப்பு மருந்துகளை இலவசமாக வழங்குவதால் பொருளாதார பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமில்லை. பெற்றோர்களின் கவனயீனத்தால் எத்தனையோ பிள்ளைகள் இந்நோய்களினால் மரணமடைகின்றனர்.

தத்தித் தவழ்ந்து நடக்கும் பிள்ளைகள் இருக்கும் பெற்றோர் எப்போதும் கண்ணில் எண்ணெய் விட்டபடி இருக்க வேண்டும். இவர்கள் எப்போதும் சிறு விபத்துகளை சந்தித்து கொண்டே இருப்பார்கள்.

பாடசாலை செல்லும் பருவம் வந்ததும் வலுக்கட்டாயமாக பாடசாலை அனுப்ப வேண்டும். ஒரிரு வருடத்தில் வீட்டில் நிறுத்தி விடாமல் இயன்றளவு கல்வி புகட்ட வேண்டும்.

— தெய்வா விஜயகுமார் —

பிள்ளை அறிவாற்றலுடன் கூடிய பிரஜையாக உருவாகி புலரது பாராட்டையும் பெறும் போதுதான் பெற்றவள் பிறவி இன்பத்தை அடைகிறாள். அதையே வள்ளுவன்,

"ஈன்ற பொழுதில் பெரிது
வக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட
தாய்"

எனக் கூறினார்.

படிப்படியாக பிள்ளையின் வளர்ச்சியில் மாறுதல் ஏற்பட விஞ்ஞானிகளிடையே வியப்பை ஏற்பட அவ்வப் பருவத்தில் பெற்றார் தம கடமைகளை மறக்காமல் செய்து முடிக்க வேண்டும். "பருவத்தே பயிர் செய்" உரிய காலம் அறிந்து காரியம் செய் என ஆத்திசூடியில் ஔவை மூதாட்டி கூறியிருக்கிறார்.

பிள்ளை வளர்ப்பானது பெண்களுக்கு ஒரு கலை. அதை பொறுமையுடன் கைக்கொள்ளுவதற்கு பெண்களே சிறந்தவர்கள். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே" என்று கூறியுள்ளார் ஒரு கவிஞர்.

தீய பழக்கங்களை முளையிலே கிள்ளி முன்னோர் வாழ்வை உதாரணம் காட்டி வளர்ப்பது முறை. பிள்ளைகளை பெற்று விட்டோம். அத்தோடு நம கடமை முடிந்தது என்றிராமல் அவனை அவனி புகழும் அறிவாளியாய் உருவாக்க வேண்டும்.

நல்லவன் வருவதும் அதே வழி. தீயவன் வருவதும் அதே வழி. படைத்தவனும் ஒருவன். பின் ஏன் நல்லவர் கெட்டவர் என்று ஆனார்கள். எல்லாம் பெற்றோரின் வளர்ப்பு தான்" ஆளும் வளரனும் அறிவும் வளரணும் அதுதான் மனித வளர்ச்சி.

# குடும்பக் கவலை

## உங்கள் தூக்கத்தை குழப்ப விடாதீர்!

மேலே உத்திரம் உள்ள வீடாக இருந்தால் உத்திரத்துக்கு நேரே படுக்காதே! கனவு வரும்.

தலையணைக்கு அடியில் கொஞ்சம் விபூதியோ, குங்குமமோ வைத்துக் கொண்டு படு; கெட்ட கனவு வராது.

படுக்கப் போகும் போது பூஜை செய்து விட்டு படு; பயமோ கவலையோ இருக்காது.

யாரையும் திட்டி விட்டு, அதே கோபத்தோடு போய்ப் படுக்காதே; தூக்கம் வராது.

சாப்பிட்ட பிறகு, கொஞ்சம் குறு நடை போட்டு விட்டுப் படு; தூக்கம் வரும்.

பக்கத்தில் நண்பனோ, மனைவியோ படுத்திருந்தால் நல்ல விசயங்களைப் பேசிக் கொண்டே படு; தூக்கம் வரும்.

(ம—10)

# குழந்தைகளின் சிந்தனைகளை வளர்த்து எடுப்பது அவசியம்

குழந்தை வளர்ப்பில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியும் அவசியமாகும். குழந்தைகள் நல்ல பிரஜைகளாக சிறந்த கல்விமான்களாக அறிவுமிக்கவராக, வீரர்களாக வளருவதற்கு கல்வி இன்றியமையாதது. அக்கல்வியினை முதன் முதலாகப் போதிக்கக் கூடியவள் அன்னை தான்.

சிறந்த தாயானவள் தனது குழந்தைக்கு இளமையிலிருந்தே நல்ல கருத்துக்கள் நிறைந்த [illegible] காண்கிறோம்.

பெண்கள் இயற்கையாகவே குழந்தைகளுடன் இரக்க உணர்வுடன் அன்புடன் பழகக் கூடிய தன்மை கொண்டவராக உள்ளனர். இதன் மூலம் குழந்தைகளின் உள்ளங்களையும் சுவீகரித்துக் கொள்கிறார்கள்.

இளஞ் சிறார்கள் கல்வி பயிலும் போதே அவர்களை பாடசாலை மட்டத்தில் ஆண் பெண் [illegible] வளர்க்கலாமென்று நியாயப்படுத்தப்படுகின்றது.

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில், சமமான மூளை வளர்ச்சியுடனேயே பிறக்கிறது- ஆயினும், சில குழந்தைகள் கெட்டித்தனமிக்கவராகவும், சிலர் மந்தமாகவும் காணப்படக் காரணம் அக்குழந்தைக்குச் சரியான நெறிப்படுத்தலின்மையே!

குழந்தைகள் அறிவுள்ளவ[illegible] பழகும் போது தான் பிள்ளையின் மனதில் பயமின்மை, தன்னம்பிக்கை ஆகியன வளரும்.

குழந்தைகள் தமது வயதொத்த சிறார்களை அழைத்து வரும் போது அவர்களை அன்பாக உபசரித்தல் வேண்டும்.

அப்போதுதான் எம குழந்தைக்கும் மனதில் மனநிறைவும், சந்தோஷமும் உருவாகும். இல்லையேல் குழந்தையின் மனது வேதனையில் சிக்கித் தவிக்கும்

கடினம. உணவு விசயத்தில் முக்கிய கவனம செலுத்தல் அவசியம.

வயிறு புடைக்க சாப்பிட்டால் மட்டும் வளர்ச்சி ஏற்படாது. பிள்ளையின் வளர்ச்சிக்கு ஏற்ற ஊட்டச் சத்துகள் உணவில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும. அதுடன் சுத்தமாக இருப்பது அவசியம "சுத்தம சுகம தரும, அசுத்தம நோய் தரும"

அடுத்து நோய்த் தடுப்பு முறைகளை தவறாமல் கையாள வேண்டும. குழந்தை பிறந்த 24 மணித்தியாலத்துக்குள் பீ சீ ஜி என்ற தடுப்பூசி ஏற்றப்படும. இது குழந்தையை காச நோயிலிருந்து பாதுகாக்கிறது-

தொடர்ந்து மூன்றாவது

பெற்றோர்களின் கவனயீனத்தால் வளர்ச்சியில் மாறுதல் ஏற்பட

## சீனத்துச் சிறுவனின் விநோத சக்தி

ஒரு சீன சிறுவனிடம காணப்படும விநோதமான சக்தி டாக்டர்களை பிரமிப்படையச் செய்துள்ளது- ஏனெனில் இச் சிறுவனின் உடைகள் தாமாகவே தீப்பிடித்துக் கொள்கின்றன- இச்சிறுவனின் உடலில் இருந்து புறப்படும உஷ்ணம உடைகளைத் தீப்பிடிக்கச் செய்கிறதாம-

கதைகளிலும திரைப்படங்களிலும பேசப்பட்ட ஒரு விஷயம இப்போது உண்மையாகவே நடைபெற்று வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது-

இச்சிறுவனின் பெயர் டொஸ் டாங்ஜியாங் என்பதாகும, இவனுக்கு நான்கு வயதாகிறது நாம இவ்வாறான நிகழ்ச்சிகளை ஏவல் வேலை என்று சொல்லி மந்திரவாதிகளை பார்க்கச் சென்று விடுவோம-

ஆனால் விஞ்ஞானிகளால் அப்படி சொல்ல முடியாதாகையால் அவர்கள் ஆய்வுகள் நடத்தி வருகிறார்கள்- முடிவை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும-

(இ-032)

சிறந்த தாயானவள் தனது குழந்தைக்கு இளமையிலிருந்தே நல்ல கருத்துக்கள் நிறைந்த வரலாற்று ரீதியிலான கதைகளைக் கூறி வருவாள். இளம பிராயத்திலேயே வீரம செறிந்த கதைகளைக் கேட்கும குழந்தை பின்னர் வீரனாக வருமென்பதில் சந்தேகமில்லை.

குழந்தையின் கல்விப் பொறுப்பில் தாயின் பங்கு பிரதானமானது. இதற்கடுத்தப்படியாகவே, ஆசிரியரது பங்கும அவசியமாகிறது-

ஆசிரியர்களுள் ஆண்களும பெண்களும கூடுதலாகக் காணப்படுகின்றனர். ஆயினும தற்காலத்தில் பெண் ஆசிரியர்களே பெரிதும நியமிக்கப்பட்டுள்

ளும போதே அவர்களை பாடசாலை மட்டத்தில் ஆண் பெண் இனம மதம சாதி என்னும அடிப்படையில் ஆசிரியைகள் பாகுபடுத்துவதும சிறந்த தன்மையல்ல.

குழந்தைகளின் சிந்தனைகளை வளர்த்து எடுப்பது அவசியம. இன்று கற்பித்தல் முறைகளில் கூட பல்வேறு மாற்றங்கள் வளர்ந்துள்ளன. சிறார்களது சிந்தனையை ஊக்குவிக்க செய்கை முறையிலான சித்திர வடிவிலான கற்பித்தல் உபகரணங்களின் மூலம கற்பனைத் திறனை

யான நெறிப்படுத்தலின்மையே!

குழந்தைகள் அறிவுள்ளவராக காணப்பட பரமபரை ரீதியிலான தொடர்பும அவசியம. எனினும கல்வி வாசனையே அறியாத பரமபரையில் தோன்றும குழந்தைகளுள் இன்று எத்தனையோ பேர் மிகப் பெரிய தலைவர்களாக் உருவெடுத்துள்ளார்களே.

எனவே, எமமால் கற்பிக்கப்படும கல்வி அறிவை விருத்தி செய்யக் கூடியதாகவே இருத்தல் வேண்டும.

பிறருடன் பயமின்றி, அன்பாகப்

இல்லையேல் குழந்தையின் மனது வேதனையில் சிக்கித் தவிக்கும அல்லவா?

எனவே எமக்குள் காணப்படும தீய பழக்கங்களை பிள்ளைகள் முன் வெளிப்படுத்தாது, நல்ல பழக்கங்களைச் சுட்டிக் காட்டி, சிறந்த கல்வியை அளிக்க வேண்டும.

அப்பிள்ளை சகலருக்கும ஏற்புடையதாக வளர்ந்த தனது தனித்துவத்தை நிலை நாட்ட தாய்மாரின் பங்களிப்பே அவசியமாகும.

[ஐ-408]

## சின்னச் சின்ன மணிமாலைகளும் கண்ணுக்கு அழகு!



தஙக நகைகளை அணிந்தால்தான் அழகு வரும என்று நினைக்க வேண்டாம. விலை குறைந்த மணி மாலைகளை அணிந்து எடுப்பாகக் காட்சி தந்திடலாம. (ம)

## உடல் பருத்த சிறுவனின் எடை குறைக்க உத்தரவு

அச்சிறுவனின் வயது 14 பெயர் பேரல் விலோஸ், ஆனால் பையவின் எடையோ 308 றாத்தல் இந்த எக்கச்சக்கமான எடையை பார்த்த டாக்டர்கள் சிறுவனின் எடை குறைக்கப்பட்டேயாக வேண்டும என்று சொல்லி விட்டார்கள்,

ஆனால் தனது குட்டி (யானை) மகனின் எடை குறைக்கப்படுவதை தாயார் விருமபவில்லை- இதைத் தொடர்ந்து தாயாருக்கும டாக்டர்களுக்குமிடையே இப்போது சுயிறிழுப்பு நடைபெற்று வருகிறது-

இயற்கையிலேயே எனது பையன் பெரிய உருவம கொண்டவன் என்று விட்டுக் கொடுக்காமல் வாதாடி வரும தாயார் சிறுவன் போல் விலோஸ் பிறந்த போதே பருமனாக இருந்ததாகவும குழந்தையை நிறுக்கச் சென்ற போது, குழந்தையை மட்டும நிறுக்கு வந்து விடாதீர்கள். எடை பார்க்கும இயந்திரம உடைந்துவிடும என்று தாதிமார் தன்னிடம சொன்னதாகவும கூறுகிறார்-

14 வயதில் என் குழந்தை ஐந்தடி ஆறு அங்குல உயரத்துடன் இருக்கிறான். இந்த உயரத்துக்கு 300 றாத்தல் ஒன்றும அளவுக்கு மீறிய எடையல்ல என்று டாக்டர்களிடம இவர் வாதாடி வருகிறார்

ஆனால் டாக்டர்கள் விடுவதாக இல்லை- சிறுவனின் எடை குறைக்கப்பட்டேயாக வேண்டும இல்லாவிட்டால் தாயையும மகனையும நீதிமன்றத்துக்கு இழுத்து நீதிமன்றக் கட்டளைப்படி 126 றாத்தலைக் குறைப்போம என எச்சரிக்கை விடுத்துள்ளனர்-

(இ-032)

## எலுமிச்சம்பழம் நீண்ட பயன் தர...

எலுமிச்சம்பழத்தை ஒரு போதும் சரி பாதியாக வெட்டி, ஒரு பாதியை மிச்சம் வைக்காதீர்கள். மிச்சம் வைத்தது காய்ந்தது உபயோகமில்லாமல் போய் விடும.

அதற்குப் பதிலாக பழத்தில் சிறிய ஆணியால் ஒரு துவாரம இடுங்கள். பின்தேவையான சாறு கிடைக்கும வரை பழத்தைப் பிழியுங்கள்-

மிச்சத்தை அப்படியே வைத்து விடுங்கள்- அடுத்த முறையும் அதனைப் பயன்படுத்தலாம்!

[ம-10]

நல்லூர் கிளை நூலகம்



நல்லூர் கிளை நூலகம்



சிந்தாமணி

தினபதி வெளியீடு "தினபதி' ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

CHINTAMANI சிந்தாமணி

# வைத்தியக்கார ரசிகனின் பரிசு!

எம் ஜி ராமச்சந்திரன் பேரில் ரசிகர்களுக்கு இருந்த அசைக்க முடியாத அபிமானம் காரணமாகவே ஆனானப்பட்ட கருணாநிதியையே தூக்கியெறிந்து விட்டு அவரால் அரசியலில் இறங்கி ஆட்சியைப் பிடிக்க முடிந்தது!

தன் பொருட்டு உயிர்த்தியாகம் செய்யவும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் காத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கையே அவரை இமாலய உயரத்துக்கு உயர்த்தியது!

சினிமா மற்றும் இசைத்துறையில் ஈடுபடும் கலைஞர்களுக்கு பணத்தைத் தவிர உபரியாகக் கிடைக்கக் கூடிய மற்றுமொரு செல்வம் இந்த துனிநபர் வெறி கொண்ட ரசிகர் பட்டாளம் தான். இது ஒருவருக்கு பக்க பலமாக இருந்தாலும் சில சமயம் தலைவலியாகவும் போய் விடுவதுண்டு.

உதாரணத்துக்கு ஹொலிவூட் பேரழகி செர்ரை எடுத்துக் கொள்ளுங்கள். இவர் தனக்கு வந்த சிறு பரிசுப் பொட்டலத்தைப் பிரித்த போது இரத்தம் தோய்ந்த மனிதக் காதொன்று அதற்குள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்!

செரின் மீது வெறி கொண்ட ஒரு ரசிகர் தன் உடலின் ஒரு பகுதியை தன் அபிமான நடிகைக்குப் பரிசாக வழங்க வேண்டுமென்ற முரட்டு எண்ணத்துடன் தன் இடது காதை வெட்டி பொட்டலமாகக் கட்டி அனுப்பி வைத்திருக்கிறார்!

இவர் அடிக்கடி செர்ருக்கு கடிதங்கள் எழுதி வருபவர். ஒரு தடவை தன் நகத்தை செர்ருக்கு அனுப்பி வைத்திருந்தாராம்! கூடவே ஒரு குறிப்பு "அடுத்த முறை என் உடலின் ஒரு பகுதி பரிசாக வழங்கப்படும்!"

அதைத்தான் இப்போது இவர் நிறைவேற்றி வைத்திருக்கிறார்.

அங்கமொன்றை அரிந்து அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ள இந்த ரசிகரின் அபிமானம் நடிகை செர்ரை உலுக்கி விட்டது. இதையடுத்து அந்த ரசிகரைக் கண்டுபிடிக்கும்படி தனியார் துப்பறியும் நிபுணர் ஒருவரை அமர்த்தியிருக்கிறார் செர்!

இடது காது இல்லாத இந்த ரசிகரைத் தேடிக் கொண்டிருக்கிறார் அந்த டிடெக்டிவ். ஆனால் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு மனநோயாளிதான் இந்த ரசிகராக இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது!

இப்படியான பைத்தியக்கார ரசிகர்களிடமிருந்து தப்புவதற்காக அல்லது அவர்களைத் தப்ப வைப்பதற்காக கவர்ச்சி ராணி செர், இனிமேல் ஆபாசக் காட்சிகளில் நடிப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்!

[ம—032]



# விமானம் போல பறக்கும் கார்

விமானம் போல பறக்கும் கார் ஒன்று அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது—

ஜேம்ஸ்பாண்ட் ஆங்கிலப் படத்தில் ரோட்டில் செல்லும் கார் விசேஷ கருவிகள் பொருத்திய உடன் விமானம் போல பறந்து செல்வது போன்ற காட்சிகளை பார்த்திருக்கலாம்— தந்திர காட்சி மற்றும் காமிரா தொழில்நுட்ப உதவியுடன் இந்தக் காட்சியைப் படம் பிடித்தார்கள்—

திரையில் நிழலாக கண்ட காட்சி இப்போது நிஜமாகி விட்டது— அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் "பறக்கும் கார்" ஒன்றை சோதனை ரீதியில் வெற்றிகரமாகத் தயாரித்து இருக்கிறார்—

அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் உள்ள ஏரோ நாட்டிகல் என்ஜினியரிங் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பால் முல்லர் இந்தப் பறக்கும் காரை உருவாக்கி உள்ளார்— அந்த காருக்கு "எம 400" என்று பெயரிடப்பட்டுள்ளது—

இந்த பறக்கும் கார் ஹெலிக்கொப்டர் போல செங்குத்தாக வானில் கிளம்பிச் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது— 9,500 அடி முதல் 30 ஆயிரம் அடி உயரம் வரை இந்த கார் பறந்து செல்லும்— இதன் வேகம் மணிக்கு 400 மைல் ஆகும்—

பறக்கும் காரில் அமைக்கப்பட்டுள்ள கொம்பியூட்டர் மூலம் அதன் இயக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன—

பறக்கும் காரைத் தயாரித்துள்ள பால்முல்லர் கூறுகையில், வருங்காலத்தில் இது போன்ற பறக்கும் கார்கள் நிறைய தயாரிக்கப்பட்டால் வானவெளி போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாக ஆகிவிடும் என்று தெரிவித்தார்—

(ம—10)

# போதை மீது மோகம் மாணவன் இன்று திருடன்

பால்ராஜ் (வயது 20) சென்னை நந்தவனம் பகுதியில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை பட்டப் படிப்பு படித்து வருகிறார்— இவருக்கு கஞ்சா குடிக்கும் பழக்கம் இருந்ததாகத் தெரிகிறது—

இதனால் அவரது குடும்பத்தினர் பால்ராஜுக்கு பணம் கொடுக்க மறுத்தனர்— கையில் காசு இல்லாத காரணத்தால் பால்ராஜால் கஞ்சா வாங்க முடியவில்லை—

இதைத் தொடர்ந்து பால்ராஜ் சைக்கிள்களைத் திருடி விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் கஞ்சா வாங்கி குடித்து வந்தார்— இதற்காக அவர் கடந்த சில மாதங்களாக சென்னையின் பல பகுதிகளிலும் சைக்கிள்களை திருடியதாக தெரிகிறது—

சம்பவ தினத்தன்று பால்ராஜ் ஒரு சைக்கிளைத் திருடி விட்டு ஐ சி எப் பகுதியில் வந்து கொண்டிருந்தார்— அப்போது அந்தப் பகுதியில் ரோந்து சுற்றி வந்து கொண்டிருந்த ஐ சி எப் பொலீஸாருக்கு பால்ராஜ் மீது சந்தேகம் ஏற்பட்டது—

உடனே அவர்கள் பால்ராஜைக் கைது செய்து விசாரித்தனர்— விசாரணையில் பால்ராஜ் பல் வேறு இடங்களிலும் 30 சைக்கிள்கள் திருடி இருப்பது தெரிய வந்தது—

அவர் கொடுத்த தகவலின் பேரில் 28 சைக்கிள்கள் மீட்கப்பட்டன— பால்ராஜ் கைது செய்யப்பட்டார்— அவரிடம் மேலும் விசாரணை நடக்கிறது—

(ம—10)

# நகைச்சுவை மஞ்சரி



நோயாளி;— எதுக்குங்க மருந்து?

★

ஒருவர்;— நீங்க ஆவிகளைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?

டும் எத்தனை!

மாணவன்;— ஆறு சார்

ஆசிரியர்;— ஆறும் ஆறும் சேர்ந்தா!

மாணவன்;— கடல் சார்!

★

மகன்;— அப்பா! என் பென்


# ஜாலிமைனர் ஓயவில்லை!



னால் ஹெப்னரின் 64 ஆவது பிறந்த தினத்தன்றுதான் அவரது மூன்றாவது குழந்தை மாஸ்டன் தன் பூவுலகப் பிரவேசத்தை நடத்தியது!

கிம்பர்லிக்கு குழந்தை பிறந்து விட்ட செய்தி கேட்ட ஹெப்னருக்கு முதலில் வாழ்த்துச் சொல்ல வந்தவர்கள் யார் தெரியுமா? ஹெப்னரின் முதல் மனைவிக்குப் பிறந்த 37 வயது கிறிஸ்டியும் 35 வயது டேவிட்டு—தான்!

ஹெப்னர் தனது முதல் மனைவியை விவாகரத்து செய்த போது "இனிமேல் திருமணம் என்பது



கவர்ச்சி காட்டப் பயப்படுகிறார் நடிகை செர்



நடிகையின் தாய்;— எதுக்காக இப்ப ஒரு மார்க்கட்டையே விலைக்கு வாஙகணுங்கிறே?

நடிகை;— எனக்கு மார்க்கெட் இல்லை என்று யாரும சொல்லி விடக் கூடாதுஙகறதுக்குத்தான்!

★

நோயாளி;— டாக்டர் எனக்கு மருந்த கொடுஙக

டாக்டர்— என்ன நோய்?

நோயாளி;— மறதி நோயிஙக

டாக்டர்;— இந்தாப்பா மருந்த இதைச் சாப்பிடு

★

ஒருவர்;— நீஙக ஆவிகளைப் பத்தி என்ன நினைக்கிறீஙக?



மற்றவர்;— மன்னிக்கணும எனக்கு இந்த சுய விளமபரம எல்லாம பிடிக்கிறதில்ல!

★

ஆசிரியர்;— இரண்டும இரண்டும எத்தனை!

மாணவன்;— நான்கு சார்

ஆசிரியர்;— நான்கும இரண் ... ஆறும் ஆறும் சேர்ந்தா!

மாணவன்;— கடல் சார்!

★

மகன்;— அப்பா! என் பென்சிலை பக்கத்து வீட்டுப் பையன் பிடுஙகிட்டான்

தந்தை;— அவன் திருட்டுப் பையன் நீ அழாதே நாளைக்கு ஆபிசிலிருந்து இரண்டு பென்சிலை அடிச்சுக் கொண்டு வாறன்



உலகப் புகழ் பெற்ற "பிளே போய்" சஞ்சிகையின் ஸ்தாபகரான ஜாலி மைனர் ஹெப்னர் தமது காதல் லீலைகளில் இருந்து ஓய்வு பெறவில்லை! தமது 64 ஆவது வயதில் மீண்டும் ஒரு குழந்தைக்கு தந்தையாகி இருக்கிறார்!

பிளேபோய் பத்திரிகையின் நடுப்பக்கத்துக்கு நிர்வாண போஸ் கொடுத்த அழகி கிம்பர்லி தனது 27 ஆவது வயதில் ஹெப்னருக்கு ஒரு ஆண் மகவைப் பெற்றுத் தந்திருக்கிறார்—

இதில் விசேஷம் என்னவென்றால் ... பிறந்த 37 வயது கிறிஸ்டியும் 35 வயது டேவிட்டு—தான்!

ஹெப்னர் தனது முதல் மனைவியை விவாகரத்து செய்த போது "இனிமேல் திருமணம் என்பது என் வாழ்க்கையிலேயே கிடையாது" என்று கூறுரைத்தார்!

ஏராளமான அழகு நஙகையர்களை சுவைத்து வந்த இவரை கிம்பர்லி எப்படியோ வளைத்துப் போட்டு திருமணமும் செயது கொண்டார்!

ஜாலி மைனர் ஹெப்னர் போர்பிள்ளை வயதில் ஒரு மனைவியை அடைந்ததுடன் பூட்டப்பிள்ளை வயதில் ஒரு மகனையும் பெற்று விட்டார்!

மேலே தனது மகள் கிறிஸ்டியுடன் ஹெப்னர் கீழே அவருடைய புது மனைவி கிமபர்லி

[ம—032]




இதோ!

# PERMA-SHARP Twin II

இருமடங்கு - சவரத்திருப்தி

அறிமுக விலை 8/95

இலங்கையில் அறிமுகப்படுத்துவோர்

அங்ளோ - ஏஷியன்

தொலைபேசி 687397 ரீவைகள்



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை, கொழும்பு 12. இலஙகை, தபால் பெட்டி இல 1613, வெளியீட்ட திகதி 10 ஜூன் 1990

"CHINTAMANI" 5 Gunasena Mawatha, Colombo— 12 P O Box 1613